
இலட்சியப் பயணம்




தமிழக முதல்வர்

டாக்டர் மு. கருணாநிதி

2461

- APR 1972



இலட்சியப் பயணம்

தமிழகமுதல்வர்
டாக்டர் மு.கருணாநிதி

ILAṬCIYAP PAYAṆAM

By

Karuṇāniṭi (MK)

தமிழரசு

1—4—1972 இதழின்

X71·211·N73 ← N72
31/1-2-2

இலவச இணைப்பு

971/72
2

9 APR 1972

பதிப்புரை

பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைகளையே பார்த்துப் பழகிப் போன இந்நாளில், 1972–'73 ஆம் ஆண்டுக்கு உபரி நிதி நிலை அறிக்கையைப் படைத்தளித்துப் புதுமை செய்திருக்கிறார் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இவ்வாறு, உபரி நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருப்பினும், ஏழை எளியவர்களை—சமுதாயத்தின் கடைக்கோடி மக்களைப் பாதிக்கத்தக்க வரி எதுவும் போடப்படவில்லை என்பதும் மாறாக, ஏழை எளியவர்களுக்கு—கடைக்கோடி மக்களுக்கு மேலும் பல நன்மைகளைச் செய்வதற்காகவே வாகன வரி, குதிரைப் பந்தயவரி ஆகியவற்றைச் சற்று உயர்த்தியிருப்பதும், அறநிலையங்களுக்கு அளிக்கப்பட்டு வந்துள்ள விதிவிலக்கை ரத்து செய்திருப்பதும், தொழில் வளர்ச்சிக்கு மூலதனம் செய்வதற்காகப் பல்வேறு திட்டங்கள் வகுக்கப் பெற்றிருப்பதும், சமுதாயத்தின் கடைக்கோடியில் வாழ்வோரின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டவர்களால் பெரிதும் போற்றிப் பாராட்டத் தக்கன.

இத்தகைய சமதர்ம மணமும், சத்தான தமிழ் மணமும் கமழ்கின்ற 'சோஷலிசச் சமுதாயக் காவிய'மான நிதிநிலை அறிக்கையைத் தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையிலும், மேலவையிலும் வைத்து, அதன்மீது உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கும், விவாதங்களுக்கும் தெளிவாகவும் விரிவாகவும் பதிலளித்துள்ளார்கள். அவற்றையெல்லாம், 'இலட்சியப் பயணம்' என்னும் தலைப்பில் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளோம். வழக்கம் போல இச்சிறு நூல், 'தமிழரசு' இதழின் இலவச இணைப்பாக வழங்கப்படுகிறது.

சென்னை,
28–3–1972.

செய்தி–மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு.

APR 1972

இலட்சியப் பயணம்

சட்டப் பேரவையில் முதல்வர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது இதுவரையில் 64 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து அவர்கள் அளித்த கருத்துக்களின் அடிப்படையிலே - எழுப்பிய பல்வேறு வினாக்களின் அடிப்படையிலே— கூறியிருக்கிற ஐயப்பாடுகளின் அடிப்படையிலே இயன்ற அளவிற்கு—என்னுடைய பதிலை இந்த மன்றத்திலே அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே பேசும் பொழுது கொஞ்சம் கண்ணை மூடிக் கொண்டிருந்தால்—ஏதோ கேரள சட்ட மன்றத்தில் நாங்களெல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்ற உணர்வும்—கேரளத்தின் நிதி அமைச்சர் அங்கு என்னென்ன காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் என்ற பட்டியலைத் தருகின்ற உணர்வும் ஏற்படாமல் போகாது. அந்த அளவுக்கு அவர்கள் தமிழ் நாட்டை அறவே மறந்து விட்டுக் கேரளத்திலே இருக்கின்ற அவர்களது கட்சியின் கூட்டு அரசு எப்படிப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் செய்திருக்கிறது என்பவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

நான் கேரள மாநிலத்தோடு போட்டி போட்டு இந்த மாநிலம் முற்போக்கான திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி யிருக்கிறது என்றெல்லாம் வம்புக்கு நிற்க விரும்பவில்லை. அந்த அளவுக்குக் கேரளம், அவர்கள் கூறியதைப்போல் முற்போக்கான நிலைமைக்குச் சென்றிருக்குமேயானால் நாமும் அந்த அளவுக்கு நியாயமான முற்போக்கு நிலைமைக்குச் செல்ல வேண்டும் என்கின்ற உணர்ச்சியைப் பெறுவதில் எவ்விதமான தவறும் இல்லை. ஆகவேதான் கேரளத்தை அவர்கள் பல்வேறு நிலைகளிலே எடுத்துக் காட்டுக்குப் பயன்படுத்திய நேரத்தில் அதைப்போல நம்முடைய தமிழகமும் முன்னேற்றம் பெறவேண்டும் என்கின்ற அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேதான் பேசியிருப்பார்கள் என்று நான் கருதுகின்றேன். ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது.

அவர்களே இங்கு எடுத்துச் சொன்னதைப்போல் இப்பொழுது இருக்கின்ற கேரள அரசு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இயங்குகின்ற அரசு.

அதற்கு முன்பிருந்த அரசு—இன்னும் தீவிரமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலே இருந்த அரசு. பல நேரங்களில் கேரள மாநிலத்தின் அரசியலில் பிற்போக்குச் சக்திகள் வீழ்த்தப்பட்டு—முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் ஆட்சிப்பீடத்திலே தொடர்ந்தோ அல்லது இடையிடையே தொய்வு ஏற்பட்டாலும் மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தோ—பரிபாலனம் செய்த காரணத்தினால் முற்போக்கு விதைகளைக் கேரள மாநிலம் போன்ற மண்ணிலே ஊன்றுவதென்பது சுலபமான காரியமாகும். ஆனால் நம்முடைய தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில்—கடந்த நான்கு ஐந்து ஆண்டுக் காலமாகத்தான் நாம் அந்த முயற்சியிலே வேகமாக ஈடுபட்டு வருகின்றோம்.

வரிப்பணமும் பெருந்தலைவரும்

நான் இதைச் சொல்லுகின்ற காரணத்தால் அதற்கு முன்பு இருந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் முற்போக்கு எண்ணம் தலைகாட்டவே இல்லை என்று நான் கூறமாட்டேன். தலைகாட்டித் தலைகாட்டி மீண்டும் அது தன்னுடைய தலையை மறைத்துக் கொண்டது என்பதை நாம் யாரும் மறுத்திட இயலாது.

இன்றைய நிதிநிலை அறிக்கை விவாதத்திலே—பொருளாதாரச் சூழ்நிலைகள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. நமது மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் பற்றிப் பல கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

மாநிலத்தின் இன்றைய வருமானம்—397 கோடி ரூபாய் அளவுக்கு வளர்ந்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டு, அந்த அளவுக்கு நாம் வரியைப் போட்டுவிட்டோம் என்றெல்லாம் இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள். இந்த மன்றத்திலே இருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குத் தலைவராக இருக்கின்ற மதிப்பிற்குரிய காமராசர் அவர்கள்கூட, வெளியே மேடைகளிலே பேசுகின்ற நேரத்தில்—200 கோடி ரூபாய்க்கு வரியைப் போட்டு—அந்த வரிப்பணத்தையெல்லாம் என்ன செய்தார்கள் என்றே தெரியவில்லை — மந்திரிகளின் பாக்கெட்டிற்கு அது போய் விட்டதோ?—என்று கூறியதைக்கூட இங்கே எழுப்பியுள்ளார்கள். நான் அவைகளையெல்லாம் மிகுந்த வருத்தத்தோடு உற்று நோக்குகின்றேன். ஓர் அரசாங்கத்தினுடைய நிர்வாகத்திலேயே—எட்டாண்டுக் காலத்திற்கு மேலாக முதலமைச்சர் பொறுப்பை வகித்தவர்—பெருமதிப்பிற்குரிய காமராசர் அவர்கள்.

ஆகவே வருகின்ற பணம் யார் மூலமாகச் செலவழிக்கப் படுகின்றது? அமைச்சர்களுக்குச் செக்கிலே கையெழுத்துப் போடுகின்ற அதிகாரமாவது உண்டா? எப்படிப்பட்ட நிர்வாகம் அரசாங்கத்திலே இருக்கின்றது? நிதியிலாகா என்ன வேலையைச் செய்கிறது? என்ற இவைகள் அனைத்தையும் காமராசர் அவர்கள் உணர்ந்தவர்கள்.

சட்டசபையில் அவர் வாய் திறந்து பேசாமல் இருந்தார் என்றாலும், நிர்வாகத்திலே நல்ல அனுபவமும், ஆற்றலும் வாய்ந்தவர் என்பதை நான் என்றைக்கும் மறுக்கத் தயாராக இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கே, வசூலிக்கப்படுகின்ற வரிப்பணமெல்லாம்—மந்திரிகளுடைய பாக்கெட்டிற்குப் போகிறதா? என்று கேள்வியைக் கேட்கக் கூடிய எண்ணம் ஏற்பட்டது—உள்ளபடியே ஆச்சரியத்தையும் வேதனையையும்தான் உண்டாக்குகிறது.

எல்லா வரியும் இன்றே முளைத்ததா?

1967-ல் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, 200 கோடி ரூபாய்க்கு வரியைப் போட்டு, வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்று அறிவித்து—அண்ணா அறிவித்த அந்தத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி, 200 கோடி ரூபாய்க்கு வரிகள் போட்டிருக்கிறோம் என்று யாரும் தயவு செய்து எண்ணிவிடக்கூடாது.

இன்றைக்கு, மாநிலத்திற்கு வரிகள் மூலமாகக் கிடைக்கின்ற வருமானம் 210 கோடி ரூபாய். வரிகளின் மூலம் கிடைக்கின்ற வருமானம் 210 கோடி ரூபாய் என்றால்—அந்த 210 கோடி ரூபாய்க்கான வரிகளை இப்பொழுது இந்த அரசு போட்டது என்று யாரும் தவறுகக் கருதிவிடக் கூடாது.

397 கோடி ரூபாய் வருமானத்திலே—210 கோடி ரூபாய் இன்றைக்கு ஸ்டேட் டாக்ஸ் மூலம் கிடைக்கிறதென்றால் சென்ட்ரல் டாக்சினுடைய பங்கு 75 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கிறது. மத்திய அரசிடமிருந்து மானியமாக 33 கோடி ரூபாய் அளவுக்குக் கிடைக்கிறது. வரியற்ற வருவாயாக 78 கோடி ரூபாய் அளவுக்குக் கிடைக்கிறது. ஆக மற்ற வருமானங்கள் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாயில்—50 சதவிகிதமும்—வரி வருமானம் 50 சதவிகிதமும்—என்ற நிலைமையிலேதான் இன்றைக்கு மாநிலத்தின் வருமானம் இருக்கிறது. 1956-57-ஆம் ஆண்டிலே இருந்து தொடர்ந்து கணக்கிணைப் பார்த்தால் அதே அளவில்தான் இந்தச் சதவிகிதம் வளர்ந்து கொண்டு வருகிறது.

1956–57-ஆம் ஆண்டில் 56·23 கோடி ரூபாய் மாநிலத் தினுடைய வருமானம் என்று வைத்துக் கொண்டால் அதிலே மாநில வரி 30·34 கோடி ரூபாய்; மத்திய அரசு தரும் பங்கு 7·21 கோடி ரூபாய்.

மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் மானியத் தொகை ரூ. 4·88 கோடி; வரியற்ற வருவாய் 13·80 கோடி ரூபாய் என்கிற அளவுக்கு அப்பொழுது கிடைத்திருக்கிறது. அப்பொழுதும் இதர வருமானங்கள் என்கிற அளவிலும், வரி கள் என்கிற அளவிலும் 50: 50-சதவிகிதம்—என்கின்ற அந்தக் கணக்குத்தான் இருந்திருக்கிறது.

அதற்குப் பிறகு 61–62-ல் 43 கோடி ரூபாய் அளவில் வரி மூலம் வருமானம்—பிறகு 66–67-ல் 95·84 கோடி ரூபாய் ஆயிற்று. 71–72-ல் 163 கோடி ரூபாய் ஆயிற்று. 72–73-ல் 210 கோடி ரூபாய் ஆயிற்று. இதிலே இந்த 210கோடி ரூபாய் அளவுக்கு, மதுவிலக்கை ரத்துச் செய்ததன் மூலமாகக் கிடைக்கின்ற வருமானத்தையும் நாம் மறந்து விடக் கூடாது.

1961-க்கும் 1966-67-க்கும் இடையில் 43 கோடி ரூபாய் என்றிருந்த மாநிலத்தினுடைய வரி வருமானம் 95 கோடி ரூபாயாக ஆகியிருக்கிறதென்றால்—2·2 மடங்கு அதிகமாகியிருக்கிறது.

அதைப்போலவேதான் 95 கோடியிலிருந்து, இன் றைக்கு 200 கோடி ரூபாய் அளவிற்கு மாநில வரி யினுடைய வருமானம், ஆறுண்டுக் காலத்தில் (முதலில் ஐந்தாண்டுக்காலம் என்று சொன்னேன்) 2·2 மடங்குதான் உயர்ந்திருக்கின்றது.

இப்படி நாம் பெறுகின்ற இந்த வருமானத்தைக் கணக் கிடுகிற நேரத்தில், அது பாக்கெட்டிற்குப் போய்விடவில்லை —பயனுள்ள பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம் என்பதற்கு நிதி நிலை அறிக்கையில் நான் பல்வேறு திட்டங் களைத் தொகுத்து அளித்திருக்கின்றேன்.

வரி விலக்குச் செய்தது இல்லையா ?

வரி விலக்கே செய்யவில்லை—வரி விலக்கே செய்யவில்லை என்று குறைகூறப்பட்டது. வரிகளிலேகூட விற்பனை வரியைப் பொறுத்தவரையில் வியாபாரிகளுக்கு—சிறு வியாபாரிகளுக்கு நாம் அளித்திருக்கின்ற சலுகைகள் ஏராளம் என்பதை இந்த மாமன்றம் நிச்சயமாக அறியும்.

முன்பு 10 ஆயிரம் ரூபாய்க்குக் கீழ் விற்பனை செய்கின்ற வியாபாரிகளுக்குத்தான் விற்பனை வரி கட்ட வேண்டிய தில்லை என்ற சலுகை இருந்தது. 1967-ல் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அந்தப் பத்தாயிரம் ரூபாய் என்பது, 15 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்கின்றவர்கள் வரிகட்டத் தேவையில்லை என்று மாற்றப் பட்டது.

சென்ற ஆண்டு, அந்தச் சலுகை 15 ஆயிரம் ரூபாயி லிருந்து 25 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டிருக் கிறது.

சாதாரண வியாபாரிகளுக்கு விற்பனை வரிச்சலுகை என்பது மட்டுமின்றி கம்பவுண்டிங் முறையிலே விற்பனை வரி செலுத்துகிறவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாய் என்றிருந்த வரம்பு, ஒரு லட்ச ரூபாய்வரையிலே நீட்டிக்கப்பட்டிருக் கிறது என்பதையெல்லாம் இந்த அவை தெளிவாக உணரும்.

விற்பனையின் மீது போடப்பட்ட உபரி வரிகூட, யாருக்குப் போடப்பட்டதென்றால், ஆண்டு ஒன்றுக்குப் பத்து லட்சம் ரூபாய் டர்னோவர் (Turn over) என்கின்ற அளவில் விற்பனை செய்கின்ற அந்த வியாபாரிகளுக்குத்தான் போடப்பட்டதே அல்லாமல்—வேறல்ல.

கேரளத்திலும் வரி உயர்ந்தது !

மூன்று சதவிகிதமாக இருந்த விற்பனைவரியை மூன்றரை சதவிகிதமாக ஆக்கினேம்—என்ற ஒரு குறைபாடு பலமுறை பேசப்பட்டது. சென்ற ஆண்டு, ''வரி போடாமல் என்ன செய்வார்கள்? திட்டங்களை நிறைவேற்ற வேண்டாமா?'' என்று பெரியவர் மணலி அவர்கள் இங்கே பேசி, அதற்குப் பிறகு பேசிய திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள்—''என்னதான் மணலி பேசினாலும் மூன்று சதவிகிதம் என்றிருந்த வரியை மூன்றரைச் சதவிகிதமாக ஆக்கியது அக்ரமம்—அநியாயம்! இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது'' என்று பேசினார். அவர்கள் கேரளத்தைப் பற்றி இங்கு பேசியதற்காக ஞாபகப் படுத்துகிறேன். அங்கு இந்த ஆண்டு, மூன்று சதவிகிதமாக இருந்தது மூன்றரைச் சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிற தகவலை திரு கே.டி. கே. தங்கமணி அவர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. தங்கமணி குறுக்கிட்டு தனக்கு அது தெரியும் என்றார்)

அவர்களே தெரியும் என்கிறார்கள்—எனக்குத் தெரிந்த விஷயத்தை அவர்களுக்குச் சொன்னேன் ; அவர்களுக்குத் தெரிந்த விஷயங்களை என்னிடத்திலே சொல்லவில்லை.

ஆகவே அவர்கள் போற்றிப் புகழ்ந்த அந்தக் கேரளத்தில்—மூன்று சதவிகிதம் மூன்றரைச் சதவிகிதமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரக் கட்டணம் இங்கே குறைவு


மின்சாரக் கட்டணத்தைப் பற்றிக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இங்கு 1·2 பைசாதான் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. 10·8 என்றிருந்தது 12 பைசா என்கிற அளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

எல்லா மாநிலங்களையும்விட இந்த 12 பைசா குறைவானது என்பதற்குப் பல்வேறு நிலைகளில் ஆதாரங்கள் எடுத்துத் தரப்பட்டிருக்கின்றன. இது ஆந்திரத்தை விடக் குறைவு—மைசூரைவிடக் குறைவு—பல்வேறு மாநிலங்களை விடக் குறைவு என்று எடுத்துக் காட்டப்பட்ட போதெல்லாம்—கேரளாவை விடக் கொஞ்சம் அதிகம் என்று சுட்டிக் காட்டப்பட்டது. இப்போது கேரளாவிலும் அதை அதிகப்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கும் அறிவிப்பு நிதிநிலை அறிக்கையிலே செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கேரளத்தின்பால் மிகுந்த அன்பு கொண்டவர்களுக்கும், கேரளத்தைச் சுட்டிக் காட்டி எங்களை இடித்துரைத்தவர்களுக்கும் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரிகளை விலக்கினேம்

விற்பனை வரிகளிலே நாம் பல்வேறுவிதமான சலுகைகளை அளித்து வரி விலக்குகளையும் செய்திருக்கிறோம். குறிப்பாக, 110க்கு மேற்பட்ட பொருள்கள் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் விற்பனை வரியிலிருந்து ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால்—கூடைகள் பாய்களுக்கு இருந்த விற்பனை வரி, உப்புக்கிருந்த விற்பனை வரி, தேங்காய்க் கொள்முதலுக்கிருந்த விற்பனை வரி, வேளாண்மைக் கருவிகளுக்கிருந்த விற்பனை வரி, அரிசி மாவுக்கிருந்த விற்பனை வரி, சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச சோளம், தவிடு ஆகியவைகளுக்கிருந்த விற்பனைவரி, தென்னை நார், தென்னை நார்ப் பொருள்களுக்கிருந்த விற்பனை வரி முதலியனவற்றிற்கு விலக்களிக்கப் பட்டுள்ளது. கதர்—பருத்தி, உடைகள் இப்படி நூற்றுக்கு மேற்பட்ட பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கிறது. விற்பனை வரி

ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



நகர்ப்புறங்களில் ஒரு கிரவுண்டுக்குக் கீழும் உள்ள மனைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சைக்கு முழுவதும், ஐந்து ஏக்கரா வரையிலே நஞ்சைக்கும் அடிப்படை நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

வரி வருமானம் 210 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்ற காரணத்தினால் நாங்கள் வரியை விதித்துவிட்டோம் என்று சொல்லுவது—சரியாகாது.

திரு. தங்கமணி அவர்கள் ''போட்டிருக்கிற வரியைச் சொல்லுகிறேன் கேளுங்கள்'' என்று, பட்டியலைப் படிக்கின்ற பாவனையிலே பேச ஆரம்பித்து, 1, 2, 3 என்று விரல் விட்டுக் காட்டினார்கள்.

1. குதிரைப் பந்தயத்திற்குப் போடப்பட்டுள்ள வரி—அதைப்பற்றி அவர்கள் விமர்சனமே செய்யவில்லை.

2. மோட்டார் வாகனங்களுக்குப் போடப்பட்ட வரி—அதைப் பற்றியும் அவர்கள் அதிகமாகச் சொல்லவில்லை,

3. கிராமப்புறங்களிலே இருக்கின்ற யூனியன்கள் ஒன்றரை ரூபாய் என்றிருக்கின்ற தீர்வையை இரண்டரை ரூபாய் வரை வசூலித்துக்கொள்ளலாம் என்பது.

இது ஒரு வரி விதிப்பல்ல—அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தேவையானால் போட்டுக்கொள்ளலாம்—அதுவும் கிராமப் புறத்தினுடைய வளர்ச்சிக்காக.

மோட்டார் வாகன வரி விதிப்பு

1,500 மக்கள் வாழுகின்ற இடங்களையெல்லாம்—கிராமங்களையெல்லாம் முக்கிய ஊர்கள் வழியாகச் செல்லுகின்ற சாலைகளோடு இணைக்கின்ற ஒரு பெரிய திட்டத்தை எடுத்துக்கொண்டு அதை நிறைவேற்றும்போது மோட்டார் வாகனங்கள் மீது, 10 சதவிகிதம் வரி விதித்திருப்பது தவறல்ல.

திருமதி அனந்தநாயகி அவர்கள்கூட மிகவும் உருக்கமாகச் சொன்னார்கள்--எடுத்ததற்கெல்லாம் இந்த மோட்டார்காரன் தானே உங்களுக்குக் கிடைத்தான்—பஸ்காரன்தானே உங்களுக்குக் கிடைத்தான்—அவர்கள் மீது உங்களுக்கு ரொம்ப நாளாக்வே ஆத்திரம் என்று சொன்னதிலேயிருந்து, அவர்களுக்கு ரொம்ப நாளாகவே அவர்களிடத்திலே அன்பு இருக்கிறது என்பது மறைமுகமாத் தெரிகிறது.


ரொம்ப நாளாக ஆத்திரம் என்று சொன்னார்கள்; நான்கைந்து நாட்களுக்கு முன்பு அம்மையார் அவர்கள் இங்கே நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் ராமச்சந்திரன் அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டநேரத்திலே சொன்னார்கள், 'அதை ஏன் மூன்று பைசா என்று ஆக்கினீர்கள்? இரண்டரைப் பைசாவாக இருந்த போதே பஸ் முதலாளிகளுக்குப் பெருத்த-ஏராளமான லாபம் கிடைத்ததே. ஆகவே, ஏன் அதை மூன்று பைசாவாக ஆக்கவேண்டும்?' என்று கேட்டார்கள். அவர்கள் கேள்வியினுடைய அடிப்படை வாதத்தை நான் அப்படியே ஏற்றுக்கொண்டு, ''லாபம் சம்பாதிப்பவர்கள் 10 சதவிகிதமாகச் சொல்கிறேனே தவிர என்னைப்பொறுத்தவரையில் . .

திருமதி அனந்தநாயகி: I mentioned not only busses but particularly mentioned about lorries and private cars. அதற்குத் தான் கேட்டேன். டக்கென்று பஸ்ஸுக்குத் திரும்புவது நியாயமல்ல.

முதல்வர்: தங்களுடைய கருணையிலிருந்து பஸ்கள் தப்பித்ததற்கு மகிழ்ச்சி. (சிரிப்பு.)

எங்கெங்கும் இணைப்புச் சாலைகள்

அதைப்போலவே யூனியன்களில் 1,500 பேர்கள் இருக்கின்ற இடங்களை யெல்லாம் முக்கிய சாலைகளுடன் இணைக்கக் கூடிய திட்டத்திற்கு அதற்குத் தேவையான கிராமச் சாலை வளர்ப்பு நிதி என்ற ஒன்றை உருவாக்கி அதற்கு அந்த வரியைப் பயன் படுத்திட வகை செய்யப் பட்டிருக்கிறது. இன்றைக்கும் பல கிராமங்களில் எவ்வளவோ குறை



பாடுகள் இருக்கின்றன. நாம் சுதந்திரம் பெற்ற பிறகு இன்றைக்கும்கூட சாதாரண கிராமங்களிலேஇருக்கின்ற அரிசன மக்கள் நடந்து செல்வதற்குச் சரியான சாலைகள் இல்லே என்பது மாத்திரமல்ல—இறந்துவிட்ட பிறகும்கூட—அந்தப் பிணங்களே இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு—வழியில்லாத சங்கடம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அவர்கள், பிணங்களேத் தூக்கிக் கொண்டு நடப்பட்டிருக்கின்ற கழனிகளின் வழியாகச் செல்கின்ற காட்சிகளேப் பல இடங்களிலே நாம் பார்க்கின்றோம்.

ஒற்றையடிப் பாதையில் 4 பேர் தலேயில் பிணத்தைத் தூக்கிக்கொண்டு செல்கின்ற நேரத்தில் அவர்களும் சறுக்கி விழுந்து, பிணமும் வயலில் விழுந்து கிடக்கக் கூடிய கோரக் காட்சிகள் எல்லாம் இன்றைக்கும் நமது தமிழ் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆகவேதான் அப்படிப்பட்ட இடங்கள் எல்லாம் சீர்பெற வேண்டும்—செம்மை பெறவேண்டும்—எங்கெல்லாம் கிராமப் புறங்களில் இணைப்புச் சாலைகள் வேண்டுமோ அங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு—பின்தங்கிய மக்களுக்கு இந்த வசதிகளே நாம் உடனடியாகச் செய்து தரவேண்டும் என்பதற்காகத்தான் ஒன்றியங்கள் ஒன்றரையிலிருந்து—இரண்டரை ரூபாய் வரையிலே உயர்த்திக் கொள்கின்ற வகையிலே அனுமதி வழங்கியிருக்கிறோமே அல்லாமல்—அவர்கள் சொன்னது போல் 'இந்து' பத்திரிகையில் எழுதியிருந்தாலும், அல்லது வேறு பத்திரிகையிலே குறிப்பிட்டிருந்தாலும் இரண்டரை ரூபாய் என்று நாம் வரி விதித்துவிடவில்லே—அதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறோம்.

இதைக் கூட மதிப்பிற்குரிய காமராசர் அவர்கள் சொன்ன பிறகு—அவரது அறிவுரையை ஏற்றுக்கொண்டுதான் செய்திருக்கிறோம். மாயவரத்தில் மதிப்பிற்குரிய காமராசர் அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னர்கள்.

> ''இவர்கள் மாநில சுயாட்சி கேட்கிறார்களே! கிராமங்களுக்குச் சுயாட்சி கொடுத்தார்களா? கிராமங்களிலே இன்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரி போடுகிற அதிகாரத்தைக் கூட இவர்கள் கொடுக்கவில்லேயே! வரியை விரிவாக்கிக் கொள்கிற அதிகாரத்தைக் கூடக் கொடுக்கவில்லேயே?'' என்று கேட்டார்கள்.

அவர் பெரிய தலேவர். அவ்வளவு பெரிய தலேவரின் மனக்குறையைத் தீர்க்க அந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் கொடுத்திருக்கிறோமே அல்லாமல் அது வரியல்ல.

அது போலவே 200 கோடி ரூபாய் நாம் தொடக்கத்தில் எடுத்துக் காட்டியது போல—வரிகள் மூலம் கிடைத்த வருமானம்—மீண்டும் மீண்டும் சொல்கிறேன் புதிதாகப்போட்ட வரிகளினுல் அல்ல. அப்படிப் புதிதாகப் போடப்பட்ட வரிகளால் 30 அல்லது 40 கோடி உயர்ந்திருக்கலாம். மதுவிலக்கு ஒத்திப்போடப்பட்டதன் காரணத்தினுல் 35 கோடி உயர்ந்திருக்கலாம்.

மற்ற வரிகள் எல்லாம் நம்முடைய நாட்டிலே வாணிப வளர்ச்சியையும் தொழில் பெருக்கத்தையும்அதே நேரத்திலே சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களையும் அடிப்படையாக வைத்து உயர்ந்திருக்கிற வருமானம் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அதோடு அதிகாரிகள் ஒழுங்காக வரி வசூல் செய்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

'உபரி பட்ஜெட்டைப் போட்டு விட்டு வரிப் போடலாமா?' என்று கேட்கிறார்கள். அவ்வரிகள் எல்லாம் எத்தன்மை வாய்ந்தவை? யார் யாரைப் பாதிக்கக்கூடியவை? என்பதைப் பற்றி நான் ஏற்கெனவே கூறிவிட்ட காரணத்தால் மீண்டும் அவைகளை விளக்க முடியாமல் இருக்கிறேன். ஆனல் உபரி உபரி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம், உபரி என்றல் அது ரெவின்யூக் கணக்கில் ஏற்பட்டிருக்கிற உபரிதான். அதை நாம் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் கூட, உபரி பட்ஜெட் போடுவது என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு உகந்ததல்ல. நாம் துண்டுவிழுகிற பட்ஜெட்டைப் போட்டுத் திட்டங்களை அதிகமாகப் போட்டிருக்கிறோம் என்று காட்டவேண்டுமென்று சொன்னர்கள். அந்தக் கருத்துக்கு நான் மறுப்பளிப்பவன் அல்ல. அதே நேரத்தில் ரெவின்யூக் கணக்கில் இன்று உபரி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னல் 60—66 கோடி அளவில் மத்திய அரசோடு நாம் பேசிச் செம்மைப் படுத்திக்கொண்ட வகையில், நம் திட்டங்கள் தடைப்படக்கூடாது என்பதற்காக நாம் எதிர் பார்த்துப் பணத்தைச் செலவழித்திருக்கிறோம். ஆகவேதான் உபரி என்று கூறுவது ரெவின்யூக் கணக்கில் ஏற்பட்டிருக்கிற ஒன்று என்பதை இந்த அவைக்கு மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வரியும் வசதியும்

'வரிகளைப் போட்டீர்களே, வசதிகளைப் பெருக்கினீர்களா?' என்று இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் கேள்வி எழுப்பினர்கள். இந்த விவாதத்திலே ஒரு வேடிக்கை. விவாதம் குமரியில் எழுந்து குமரியிலேயே முடிந்திருக்கிறது, நான் குமரன் பேசிக்கொண்டிருக்கிறேன். (ஆரவாரம்)

குமரி மூனையில் இந்த விவாதம் எழுந்து குமரியைச் சார்ந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த விவாதத்தின் இறுதியில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் முடித்து வைத்திருக்கிறார்கள்.

எப்படி வரி வருமானம் அதிகப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துச் சொன்னேன். வசதிகள் பெருகவில்லையே என்று கூறினார்கள்.


நான் இந்த நிதி நிலை அறிக்கையில் தந்திருக்கிற பட்டியலைக்கூட, ஒரே வரியில் திரு. தங்கமணி அவர்கள் சொல்லிவிட்டு, '' பார், பார், கேரளத்தை! அங்கு 27 நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன; அவை ஆங்கிலப் பத்திரிகைகளில் எல்லாம் வெளி வந்திருக்கின்றன '' என்று எடுத்துக் காட்டினார்கள்.

இங்கு நம் சக்தியானுசாரப்படி எவ்வளவு முடியுமோ அதை இந்த நான்கைந்து ஆண்டுக் காலங்களில் அண்ணா அவர்கள் உருவாக்கிய இந்த அரசுச் சார்பில், எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், நடுத்தர மக்களும் தங்களது வாழ்க்கையில் நல்ல வளம்பெற வேண்டுமென்று கருதினார்களோ—அதற்குரிய வகையில் இந்த நான்கைந்து ஆண்டுக் காலத்திலே நாங்கள் பணியாற்றி வந்திருக்கின்றோம். பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காகப் பின்தங்கியோர் நலக் குழு ஒன்று அமைப்பதற்கு முன்பு, இங்கு 1966-ஆம் ஆண்டு வரையில் அவர்களுக்காகச் சில சலுகைகள் வழங்கப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்ட தொகை 90 லட்சம் ரூபாய் என்றால், இன்றைக்கு அந்த மக்களுக்காகச் செலவழிக்கப்பட இருக்கிற தொகை 4.68 கோடி ரூபாய் என்பதை நாம் பார்க்கும்போது நாம் அந்த மக்களுக்காகப் பணியாற்றுகிறோமா இல்லையா என்பதற்கான விடை கிடைக்கும்.

பரவலாக இந்தத் தொகை எல்லாருக்கும் போய்ச் சேரவில்லையே என்று அருமை நண்பர் மாரிமுத்து அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். சில இடங்களில் பாராட்டினார்கள். ஒவ்வொரு பாராட்டுக்கும் இடையே ஒரு 'ஆனால்' வந்து விழுந்தது. 'பாராட்டுகிறேன் .. ஆனால்' என்கின்ற 'ஆனால்' விழுந்துகொண்டே இருந்தது. பரவலாக இது பயன்பட வில்லை என்று குறிப்பிட்டார்கள்.

நான்கு கோடி ரூபாய் பின்தங்கிய மக்களுக்காகச் செலவழிக்கப்படுகிறதென்றால் எந்த முற்போக்குச் சமுதாயத்தைச் சேர்ந்தவரும் இந்தப் பணத்தை அவர்களுடைய நலன்களுக்காகத் தட்டிப் பறித்துக்கொண்டு போய்விடவே முடியாது. அதேபோல் அரிசன மக்களுக்காக 66-67-ல் ரூ. 3.59 கோடி செலவழிக்கப்பட்டதற்கு மாறாக இன்றைக்கு

ரூ. 8.41 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருமானமும் பெருகியிருக்கிறது. அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு—அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி ஒதுக்கமும் பெருகியிருக்கிறது. எதையும் நாம் விட்டுவிட வில்லை!



கிராமப்புறங்களை இணைக்கிறவகையில் ஆயிரம் மைல் நீளத்திற்குப் பேருந்துகள் செல்கிற சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது என்று இந்த ஆண்டு முடிவு செய்திருக்கிறோம்.

கல்விக்காக 1966-67-ல் 43.85 கோடி செலவிட்டதற்குப் பதிலாக 1972-73-க்கு ரூ. 89.85 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து 1966-67 வரை தமிழகத்தில் இருந்த மொத்தக் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 105. அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற கலைக் கல்லூரிகள் மாத்திரம் 64. இந்த நாலைந்து ஆண்டுக் காலத்தில் 64 கலைக் கல்லூரிகள் தோன்றியிருக்கின்றன. ஆக, இப்போது 169 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன.

அதைப் போலவே, 1966-67 வரை இருந்த உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2372. இந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில் 341 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப் பட்டிருக்கின்றன.

சென்னை மாநகரத்தில் மாத்திரம் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடிசைப் பகுதிகள் இருப்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். 1967-ஆம் ஆண்டு வரை சென்னை நகரமும், தமிழகத்தில் வேறு சில பகுதிகளும் சேர்ந்து 4155 குடியிருப்புகள்தான் அந்த மக்களுக்காக—குடிசை வாழ் மக்களுக்காகக் கட்டப்பட்டன.

1967-லிருந்து 1971 வரையில் 7722 குடியிருப்புகள் கட்டப்பட்டன. அவைகளன்னியில், 2300 தீப்பிடிக்காத வீடுகளும் அவர்களுக்காகக் கட்டப்பட்டன. 1971-72-ல் மாத்திரம் 7700 குடியிருப்புகள் மேலும் கட்டமுடியும். எனவே, 1967-வரை 4155 குடியிருப்புகள் இருந்தன என்பதற்கு மாறாக 1967-லிருந்து 1972-க்குள் 17,000 குடியிருப்புகள் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது போலவேதான் மருத்துவத் துறையிலும், மக்கள் நல்வாழ்வுத் துறையிலும் முன்பு செலவழித்ததை விட, இப்போது அதிகப் பணம் செலவழித்திருக்கிறோம் என்பதற்கான ஆதாரங்கள் பலவற்றை நிதி நிலை அறிக்கையில் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு அரசு செய்த உதவி

அரசு ஊழியர்களுக்கு எதுவுமே செய்ய வில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு நிறைவேற்றி வந்தும்கூட, இப்போது தந்திருக்கின்ற கோரிக்கைகளை ஆராய்வதற்காகவும் – முரண்பாடுகளைக் களைவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுப்பதற்காகவும் அவர்களுடைய சேலம் மாநாட்டில் வைத்த கோரிக்கைகளை ஆராய்வதற்காகவும் தலைமைச் செயலாளரைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆலோசனைக் குழுவிலே அரசு ஊழியர்களுக்கு, அரசு அலுவலாளர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எல்லாம் அதிலே இடமளிக்கப்பட்ட பிறகும் அன்றைக்குப் பேசிய அம்மையார் அவர்கள்



"என். ஜி. ஓ. க்களைக் கவனிக்க வில்லை, அவர்களுக்கு எதுவுமே செய்யவில்லை, இரகசியக் குறிப்பேட்டை மட்டும் எடுத்து விட்டால் போதுமா ?'' என்று கேட்டார்கள்.

இரண்டாவது ஊதியக் குழு வருவதற்கு முன்னாலே, அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே 1—10—1967 முதல், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலுமே இல்லாத அளவுக்கு அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி அளிக்கப்பட்டது. இதன்படி ரூ. 500 வரை சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்கள் இந்தப் படியினைப் பெறுவதற்குரியவர்கள் ஆவர் என்று கூறிச் சென்னைக்கு மாத்திரமல்லாமல், சுற்றியுள்ள பகுதிகளுக்கும், மதுரைக்கும் அந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டது.

ஈட்டிய விடுப்புக்குப் பதிலாகத் தொகை பெறுதல், 30 நாள் ஈட்டிய விடுப்பு எடுத்தால் மேலும் 30 நாள் ஈட்டிய விடுப்புக்குப் பதிலாகத் தொகையைப் பெறுவதற்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. அது பின்னர் சம்பள ஆணைக் குழுவால் தாராளமாக்கப்பட்டிருக்கிறது. மலைவாழ் படி அளிக்கப்பட்டது. திருமணக் கடன் கொடுப்பதற்கென்று ஒரு புதிய திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இது 1—4—1969 முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஓய்வு ஊதியமாகக் கொடுக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வு ஊதியம் திங்கள் ஒன்றுக்கு 30 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

அகவிலைப்படித்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் அந்த அகவிலைப்படி மூன்று முறை அளிக்கப்பட்டது. 1967-ல் ரூ. 6.88 லட்சமும், 1968-ல் ரூ. 3.60 லட்சமும், 1969-ல் ரூ. 3.60 லட்சமும், இதைத் தவிர அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 1970—71-ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 10 தரப்பட்டு ரூ. 500 வரை சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், மற்றவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இதனால் 6 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டது.

சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளின்மேல் அரசுக்கு ஏறக்குறைய ரூ. 23 கோடி செலவாகிற வகையில் பரிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றிலே சில குறைபாடுகள், முரண்பாடுகள் இருக்கின்றன என்று அவர்கள் குறைகள் தெரிவித்ததன்பேரில், அவற்றை நிவர்த்தி செய்யும் முயற்சிகளை இப்போது அரசு எடுத்து இருக்கிறது என்பதனை நான் மீண்டும் ஒரு முறை இந்த மன்றத்திற்கு **நினைவூட்டுகிறேன்.**




பயிரிடத்தக்க நிலங்களை யும் வீட்டு மனைகளையும் கேரளத்திலே வழங்குகிறார் கள்; இங்கே வழங்கு கிறார்களா, இல்லையா என்ப தைப்பற்றிச் சுட்டிக்காட் டாமல் கேரளத்தில் வழங்கு கிறார்கள் என்ற அளவோடு நம்முடைய திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் நிறுத்தி விட்டார்கள்.

தமிழ்நாட்டில் 1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை 20 ஆண்டுக் காலத்தில் ஒப்படை செய் யப்பட்ட பயிரிடத்தக்க நிலங்கள், மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டவை 2.88 லட்சம் ஏக்கர்கள் தான். இவற்றால் பயன் பெற்ற வர்கள் 1.15 லட்சம்பேர்.

ஆனால், இன்றைக்கு 1967–68-ல் 7,019 பேரும், 1968–69-ல் 24,604 பேரும், 1969–70-ல் 71,738 பேரும், 1970–71-ல் 99,138 பேரும், 1972 ஜனவரி முடிய 45,000 பேரும் ஆக மொத்தம் ஏறத்தாழ 2,47,000 பேருக்கு இந்த 4—5 ஆண்டுக் காலத்தில் அந்தப் பயிரிடத்தக்க நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக்கின்றன என்கின்ற நிலைமை இருக்கின்றது.

கனவு நனவாகியது

இதுவரையில் விவசாயத் தொழிலாளர்கள் கண்டுவந்த கனவு நிறைவேற்றப்படுகிற அளவில், விவசாயத் தொழி லாளர்களுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்குகிற திட்டம் அறிவிக்கப்பட்டு, (தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் ஒரு லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இந்தத் திட்டத் தால், இந்தச் சட்டத்தால் பயன் பெறுவார்கள்,) அதனுடைய ஆரம்ப விழாவைச் சென்ற திங்களில் திருவை யாற்றில் துவக்கி வைத்து, முதல் தடவையாக 6,000-க்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த வீட்டு மனைகளை எல்லாம் ஒப்படை செய்திருக்கிறோம்.



அதைப் போலவே, குத்தகையாளர்கள் இன்று நிலங்களிலிருந்து வெளியேற்றப்படாத அளவுக்கு நாம் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். 25 ஆயிரம்பேர் வெளியேற்றப்படுகிறார்கள் என்று தஞ்சைமாவட்டத்தில் திரு. காமராசர் சொன்னார். அவரது கணக்குப்படி 25 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்திலேயும் மற்ற மாவட்டங்களிலேயும் உள்ளவர்களைக் காப்பாற்றுகின்ற அளவுக்குக் குத்தகையாளர்கள் நிவாரணச் சட்டம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்படவிருக்கிறது. ஒருகாலத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்து, அந்த நேரத்தில் அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களால் பெரிதும் பாராட்டப் பட்டார்கள்.


அன்றைக்கு இராஜாஜி செய்ததையே நாங்கள் செய்தாலும் கூட, அதைவிட இன்னும் சில பேரைச் சேர்த்துக் கொண்டு உழைப்பாளிகள், தொழிலாளர்கள், அரசு அலுவலாளர்கள் ஆகியோருக்கும் சேர்த்துக் கொண்டு இந்த நிவாரணம் அளிக்கிறோம் என்று சொன்னாலும் கூட, அதைப் பாராட்டுவதற்கு நம்முடைய திரு. ஹண்டே போன்றவர்கள் முன்வரவில்லை என்று எண்ணுகின்ற நேரத்தில் உள்ளபடியே நெஞ்சம் கொஞ்சம் சஞ்சலம் தான் கொள்கிறது.

ஆனால் அவர்கள் வாயாரப் பாராட்ட விரும்பாவிட்டாலும் உள்ளூர மகிழ்வார்கள் என்று நம்புகிறேன். வாயார வாழ்த்துவதை விட மனமார வாழ்த்துவது மேலும் சிறப்பானது—சிலாக்கியமானது என்று மகிழ்ச்சியடைகிறோம்.

அரசியலுக்காகப் பாராட்டாதவர்

இராஜாஜி பாராட்ட மாட்டாரா? திரு. ஹண்டே அவர்களோடு தனியாகப் பேசும்போது சொல்லியிருக்க மாட்டாரா, "நான் 1938-ல் கொண்டு வந்ததைத்தான், இப்போது இவர்கள் செய்து இருக்கிறார்கள்; பரவாயில்லை" என்று சொல்லியிருக்கமாட்டாரா? சொல்லியிருப்பார்! ஆனால் அரசியலுக்காகப் பாராட்டத் தோன்றுது.

ஆனால் முன்னேற்றக் கழக அரசு முற்போக்கு எண்ணங்களின் அடிப்படையில் செல்லுகிற அரசு, ஏழைகளின் அரசு, தொழிலாளர்கள், விவசாயிகள், உழவர் பெருமக்கள், உழைப்பாளிகள், அலுவலாளர்கள் இவர்களுக்காகப் பாடுபடுகிற இந்த அரசு, சமதர்ம அடிப்படையிலேதான் இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அவையிலே அறிவித்து இருக்கிறது. இந்தச் சமதர்மத் திட்டத்தின் அடிப்படையிலே கட்சி நடத்தி வருகிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி போன்றோர் கூட இன்னும் கொஞ்சம் வாயார மனமாரப் பாராட்டி இருந்தால் என்ன? அதில் ஏன் இவ்வளவு சிக்கனம்? இவ்வளவு செட்டு? பக்கத்திலே இருக்கிற கேரளாவை வாழ்த்துகின்ற அளவுக்கு வாழ்த்தாவிட்டாலும், தமிழ் நாட்டில் இருக்கும் எங்களை அதிலே ஒரு 50 சதவிகிதமாவது வாழ்த்தியிருக்கக் கூடாதா?



தமிழ் நாட்டிலே இருக்கின்ற அரிசன மக்களின் காலனிகளை நீங்கள் எண்ணிப் பார்த்தால், பல ஆண்டு காலமாகக் கணக்கெடுத்துப் பார்த்ததில்—1966-ஆம் ஆண்டு வரை 20,000–25,000 அரிசனக் காலனிகள் இருக்கின்றன என்ற முறையில், இதுவரையில் ஆண்ட அரசு அவர்களுக்குக் கட்டிக் கொடுத்திருந்த வீடுகள், அரிசனக் குடியிருப்புகளில் 2,400 குடியிருப்புகளுக்குத்தான் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டது.

ஆனால் இந்த 4 ஆண்டுக் காலத்தில், கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 15,600 அரிசன குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது. 1972–73-க்குள் எல்லா அரிசனக் காலனிகளுக்கும் மின் வசதி செய்து கொடுக்கும் திட்டம் வெற்றிகரமாக முடியும்.

அதைப் போலவே தமிழ்நாட்டிலே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கும் திட்டமும் முழுமையாக வெற்றிபெறும்.

அருமை நண்பர் கோபால் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள். 1966-ல் 1,070 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இப்போது 150 மெகா வாட்தான் உற்பத்தித் திறன் அதிகரித்திருக்கிறது என்று குறை கூறினார்கள். அது தவறான கணக்காகும்.

தற்போது 1,475 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது 405 மெகாவாட் அதிகரித்து இருக்கிறது. எண்ணூர் அனல்மின் திட்டத்தின் 3-வது பிரிவு இந்த மாத இறுதிக்குள் செயல்படத் தொடங்கும். இது, மேலும் 110 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டது. அதையும் சேர்த்தால் 515 மெகாவாட் கிடைக்கும்.

குந்தா 4-வது நிலையின் மூலம் 110 மெகாவாட்டும், எண்ணூர் 5-வது பிரிவின் மூலம் 110 மெகாவாட்டும், சுருளியாறு மூலம் 35 மெகாவாட்டும், சேர்வலாறு மூலம் 30 மெகாவாட்டும், நெல்லித்துறை மூலம் 50 மெகாவாட்டும், ஆக எடுத்துக் கொள்ளப்படவிருக்கிற இந்தத் திட்டங்களின்மூலம் மொத்தம் 335 மெகாவாட்டுகள் உற்பத்தித் திறன் கிடைக்கும். இவை தவிர, பாண்டியாறு புள்ளம்புழா திட்டம் 100 மெகாவாட்டும், சோளத்திப்புழா திட்டம் 40 மெகாவாட்டும், கடம்பாரைத் திட்டம் 400 மெகாவாட்டும் தரக்கூடிய இந்தத் திட்டங்களும் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.


மூடிய ஆலைகள் திறக்கப்பட்டன

இந்த ஆட்சியில் தொழில் வளர்ச்சியே இல்லை. தொழில் வளம் நலிந்துவிட்டது என்று சில பேர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். தற்போது 100 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யக்கூடிய தூத்துக்குடி உரத் தொழிற்சாலை, ஹெவி வாட்டர் ப்ளாண்டு பழைய அரசினரால் கைவிடப்பட்டு, இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறது என்பதைத் தொழில் வளர்ச்சி இல்லை என்று குறை கூறுவோர் கவனிக்க வேண்டும். 300 கோடி ரூபாய்த் திட்டத்தில் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் விரைவிலே தொடங்கவிருக்கிறது. அதற்கு எல்லா வகையான தொடக்க வேலைகளும் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. 8 கோடி ரூபாயில் நைலான் தொழிற்சாலையும், 10 கோடி ரூபாய் அளவில் ரப்பர் டயர் தொழிற்சாலையும் விரைவிலே தொடங்கப்படவிருக்கின்றன.

பாலியஸ்டர் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இங்கே "மூடப்பட்ட தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை! இந்த அரசிற்குச் சரியான தொழிற் கொள்கை இல்லை; தொழிலாளர்களை எப்படி நடத்திச் செல்வது என்பதே இந்த அரசுக்குத் தெரியவில்லை" என்றெல்லாம் குறை கூறப்

பட்டது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சி உறுப்பினர்களும், மற்றக் கட்சி உறுப்பினர்களும் அதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி அரங்கண்ணல் அவர்கள் மற்ற மாநிலங்களில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். மைசூர் மாநிலத்தில் 871-ம்; ஆந்திரத்தில் 647-ம் மேற்கு வங்கத்தில் 531-ம்; கேரளத்தில் 293-ம்; ஒரிசாவில் 66-ம் என்கின்ற கணக்கில் தொழிற் சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் 22 தான்; மற்ற மாநிலங்களைப் பார்க்கிற போது நம்முடைய மாநிலத்தில் தான் குறைவான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலும் 6 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு விட்டன.



இங்கே மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு நாம் மத்திய சர்க்காரை அணுகி என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பது இந்த மன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். ஆகையால் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை.

ஆனால், தொழிலாளர்களின் நிலைமையில் இந்த அரசு நிதானமாகக் கவனிக்கும் தன்மையில், அதற்கு முந்தைய அரசு கவனித்திருக்கிறதா என்பதையும் தொழிலாளர்கள் நிலைமையின் போது அவர்கள் காலத்தில் என்னென்ன கூறினார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு: தங்கமணி போன்றவர்கள் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் நேற்று சிறப்பான ஒரு விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். '' நானும் சிம்சன் அறுவர் குழுவில் இருந்து பார்த்துவிட்டேன். அங்கே குறைகளை விட வன்முறைச் செயல்கள்தான் வளர்ந்திருக்கின்றன என்பதைப்பார்க்கிறேன்'' என்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் (Industrial fabric will be completely torn by these elements) என்பதைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன். மேற்கு வங்கத்தில் தொழில் அமைதி கெட்டுப் போய்த் தொழில்கள் வேறு இடங்களுக்குப் பறந்து போய்க் கொண்டிருக்கிற அதே நிலை தமிழ் நாட்டில் வந்துகொண்டிருக்கிறது.

ஏற்கெனவே நாம் இங்கு வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே வன்முறைச் செயல்கள் நடக்காத முறையில் பார்த்துக் கொண்டால்தான் தொழில் அமைதி ஏற்படும் என்று சொன்னார்கள். சிம்சனில் இப்படிப்பட்ட வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் யார் யார் என்று எடுத்துக் காட்டிய போது அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். வன்முறையில் ஈடுபட்டோர் கழகத் தோராக இருந்தாலும் காங்கிரஸ்காரராக இருந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியாளராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

பாரபட்சமற்ற நடவடிக்கை

இன்னும் சொல்லப் போனால், ஐம்பதுக்கும் மேற்பட்ட கழகச் சார்புடைய தொழிலாளர்கள் அடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் கூட அவர்கள் கொடுத்த புகார்களின் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அது போல, மற்றவர்கள் கொடுத்த புகாரின்பேரில் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளரைக் கைது செய்திருக்கிறோம்.

இந்த அரசில் துப்பாக்கிப் பிரயோகம் நிறைய நடந்திருப்பதாகச் சொன்னார்கள். 1946—47-லிருந்து 67 வரை காங்கிரஸ் ஆட்சியிலும் துப்பாக்கிகள் நிறையப் பேசியிருக்கின்றன. இந்த அரசில் துப்பாக்கிச் சூடுகள் நடைபெறவில்லை என்று சொல்லவில்லை, ஆனால் கழக அரசில் குறைவான துப்பாக்கிச் சூடுகள்தான் நடந்தன. அதுவும் தவிர்க்க முடியாத நிலைமையில்தான்.

அன்றைய முதுகளத்தூர் கலவரத்தின்போது நீதி விசாரணை வேண்டுமென்று அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலிருந்த—காலம் சென்ற அண்ணல், கலியாணசுந்தரம் சசிவர்ணத் தேவர் போன்றவர்கள் ஒரே ஒரு வார்த்தை

தான் கேட்டார்கள், நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். அன்றைக்கு அந்த முதுகளத்தூரில் 40 நாட்கள் நடந்த கலவரத்தில் 50, 60 பேர்களைக் கண்மூக்கட்டி நிறுத்தித் துப்பாக்கியால் சுட்டார்கள், குழந்தைகள் கொல்லப்பட்டன, பெண்கள் கொலையுண்டனர், பல பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். இதற்கெல்லாம் அன்றைக்கு அவர்கள் கேட்டது ஒரே ஒரு நீதி விசாரணை தான்.

பொன்னப்ப நாடார் : May I just put one question to Chief Minister ? அன்றைக்கு இதுபற்றி விசாரிக்க ஒரு ஐ. சி. எஸ். அதிகாரியைப் போட்டு நீதி விசாரணை நடத்தினார்கள். முதலமைச்சர் அவர்கள் அதை மறைப்பதுபோல் கூறுவது..

முதல்வர் : ஐ. சி. எஸ். அதிகாரியைப் போடும்படியா சொன்னேம் ? நீதிபதி வேண்டுமென்றுதானே சொன்னேம். இன்றைக்கு இங்கே இருக்கிற நீதிபதியே போதலில்லையென்று மற்ற மாநிலங்களிலிருந்தல்லவா நீதிபதி வேண்டுமென்று சொல்கிறீர்கள்.

அன்றும் இன்றும் ஒன்றுகுமா ?

அன்றைக்கு 40 நாட்கள் ரத்தவெள்ளம் ஓடியது. அன்றைக்குக்கேட்டதெல்லாம் என்ன? யார் தூண்டி விட்டார்கள்? ஏன் இவ்வளவு பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள்? ஏன் கட்டி வைத்துச் சுட்டார்கள்? —அப்படிச் செய்ததற்கு எல்லாம் நீதி விசாரணை வேண்டும் என்று அன்றைக்கு அண்ணு அவர்களும், சசிவர்ணத் தேவரும், மூக்கையாத் தேவரும் கேட்டார்கள். ஆனால், அன்றைக்கு அதற்கு ஒத்துக் கொள்கிறேம் என்று சொன்னார்களா? இல்லை! அதற்குக் காமராசர் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த திரு. சி. எஸ். அவர்கள் மதிப்பிற்குரிய காமராசரின் பக்கத்திலிருந்து கொண்டு சொன்னார்கள். " எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால் போலீசார் புகழ் கெட்டுவிடும் " என்று சொன்னார்கள். அது குறிப்பிலிருக்கிறது. இப்படிச் சொல்லக்கூடியநிலை அன்றைக்கு.

ஆனால் இன்றைக்கு அப்படியா ? அன்றைக்கு மதுரை டி. வி. எஸ். நிறுவனத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்த காரணத்தால் 27—1—48 முதல் நிகழ்ந்த வேலை நிறுத்தத்தின்போது கலவரம் ஏற்பட்டு, காவல் துறையினர் கண்ணீர்ப் புகையும், தடியடியும் பயன் படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 17—1—48-லிருந்து 31—1—48 வரை வேலை நிறுத்தம் முடியும் வரை இரவில் ஊரடங்கு உத்தரவும் மதுரை நகரத்தில் பிறப்பிக்கப்பட்டது.

21—11—1949-ல் நாமக்கல் காவல் நிலையத்தில் கைது செய்து வைக்கப்பட்டு இருந்த சில கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவாகக் காவல் நிலையம் நோக்கி ஓடி வந்த கும்பலைக் கலைக்கக் காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, மூவர் காயமுற்றனர்.

8—6—1953-ல் பவானி எஸ்டேட், நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட தொழிலாளர் கலவரத்தின் போது காவல்துறை தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டி நேர்ந்தது.

15—7—1953-ல் திராவிட முன்னேற்றக் கழக ரயில் நிறுத்தப் போராட்டத்தின்போது தூத்துக்குடியிலும் டால்மியாபுரத்திலும் காவல் துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அறுவர் உயிர் இழந்தனர்.

26—1—1957-ல் வால்பாறை தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின்போது காவல்துறை தடியடிப் பிரயோகம் செய்து துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது. நால்வர் இறந்தனர், அறுவர் காயமுற்றனர்.

1958-ல் துறைமுகத் தொழிலாளர் போராட்டத்தின் போது, துப்பாக்கிப் பிரயோகத்தில் அறுவர் இறந்தனர்.

26—11—1960-ல் கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங் கோட்டில் மீனவர்கள் சிலரை மதுவிலக்குக் குற்றங்களுக் காகப் பிடிக்கச் சென்றபோது கலவரம் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் இறந்தார். 17—3—1963-ல் மீன் பிடித்தல் தகராறு சம்பந்தமாக திருமங்கலம் (மதுரை மாவட்டம்) அருகே உரப்பனூரில் கலவரம் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் அங்கேயே மாண்டார். இருவர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும்போது மாண்டனர். பத்துப் பேர் காயமுற்றனர்.

1964-ல் அரிசிப்பற்றாக்குறை காரணமாக எழுந்த கலவரங்களில் 17—1—1964-ல் அர்ச்சுனன், கோவை நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். 2—12—1964-ல் நாகர்கோவில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு மாணவர்கள் காயமுற்றனர். 28—4—1965-ல் சேடப்பட்டி பஞ்சாயத்து ஒன்றியத்தில் தலைவர் தேர்தல் குறித்து நடந்த கலவரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இருவர் மருத்துவமனையில் இறந்தனர். நால்வர் காயமுற்றனர்.

சேலம் சிறைச்சாலையிலே 23 கம்யூனிஸ்ட் கைதிகள் பூட்டப்பட்டிருந்தார்கள். பூட்டப்பட்டிருந்த சிறைச்சாலையின் கதவுத்துவாரத்தில் துப்பாக்கிமுனையை வைத்துப்பூட்டப்

பட்டிருந்த–பாதுகாப்பில்வைக்கப்பட்டிருந்த 23 கம்யூனிஸ்டுக் கைதிகளையும் சுட்டுக் கொன்றுவிட்டு, அந்த 23 பிணங்களையும் கொண்டு வந்து மீன்களை மார்க்கெட்டிலே அடுக்கி வைப்பது போல அடுக்கி வைத்துக் காட்டியவர்கள் காங்கிரஸ் கட்சியினர்.

தாய்மொழிப் பற்றுக்கு அவர் தந்த பரிசு !

இரணியன் யார் ? குப்பு யார் ? இவர்களெல்லாம் துப்பாக்கிச் சூடுபட்டுச் செத்தார்களே, அப்போதெல்லாம் சட்டம், அமைதி கெட்டுப்போகவில்லையா ? அந்தத் துப்பாக்கிச் சூடுகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன? அதையெல்லாம் விட்டு விட்டு இன்றைக்குத் தமிழ்நாட்டிலே சட்டம், அமைதி ஒழுங்கு எல்லாம் சீர்குலைந்து விட்டது என்று பேசப்படுவதேன்? ஏதோ ஒன்றிரண்டு இடங்களிலே நடைபெற்ற சம்பவங்களை வைத்துக் கொண்டு இவ்வாறு பேசுவது முறைதானு? தமிழ்நாட்டைப் பேசுகின்ற நீங்கள் மற்ற மாநிலங்களிலே என்ன நடக்கிறது என்பதைப் பார்த்தீர்களா?

தமிழ்நாட்டிலே 1965-ல் மாநிலமெங்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்றது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே 51 பேரைச் சுட்டுக் கொன்றார்கள். இதை நான் சொல்லவில்லை. முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே சொன்னார்கள். இந்தச் சட்ட மன்றத்திலே திரு. மதியழகன் அவர்கள் 150 பேரைச் சுட்டுக் கொன்றீர்களே என்று கேட்டார்கள், அதற்கு அப்போதைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் சொன்னார்—51 பேரைத் தான் சுட்டுக் கொன்றோம் என்று.

கிளர்ச்சியின்போது துப்பாக்கிச் சூட்டிலே இரண்டு மாணவர்கள் இறந்தார்கள். 'தமிழ் வாழ்க—இந்தி ஒழிக' என்று தீக்குளித்து 8 பேர் செத்தார்கள். இதைப்பற்றியெல்லாம் அப்போது கேட்கின்ற நேரத்திலே பக்தவத்சலனார் என்ன சொன்னார் தெரியுமா? ''அவர்கள் எல்லாம் கடன் பட்டு அல்லவா செத்தார்கள் ?'' என்றார்.

தாய்மொழியைக் காக்கத் துப்பாக்கிச் சூடுபட்டும் தீக்குளித்தும் இறக்கிறார்களே என்று கேட்டால், அவர்களெல்லாம் கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று பதிலளித்தார்கள். எவ்வளவு இளகிய மனம் இருந்தால் இந்தப் பதிலைச் சொல்லியிருப்பார்கள் என்பதை நீங்களே தெரிந்துகொள்ளலாமே! அப்படிப் பட்டவர்கள்தாம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஏதோ பெரிய கலவரம் என்றெல்லாம் பேசுகிறார்கள் ! மற்ற மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பதைப் பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும்.

தும்பாவில் துப்பாக்கிச் சூடு—சிறுவன் மரணம். தும்பாவில் மீனவர் மீது துப்பாக்கி சூடு—கொல்லத்தில் போலீசார் மாணவர் மோதல்—கல்லூரித் தகராறையொட்டி கொல்லத்தில் அர்த்தால்.

போலீஸ் சுட்டதைத் தொடர்ந்து ஆமதாபாத்தில் ஊரடங்குச் சட்டம்.

பஞ்சாபில் போலீஸ் சுட்டு எட்டுப் பேர் பலி—மேற்கு வங்க நகரில் போலீஸ் சூடு—

ராஜஸ்தான் அரசு ஊழியர் மீது தடியடி—ஐவர் காயம்—16 குடிசைகள் நாசம்.

வங்கத்தில் போலீஸ் சுட்டதில் ஒருவர் மரணம். குல்பர்காவில் கும்பலின் வன்முறை—போலீஸ் சுட்டது.

விஜயவாடா தேர்தல் கலவரத்தில் இருவர் பலி. கலவரத்தில் சிக்கிய குல்பர்காவில் ராணுவ அணி—

ஸ்ரீநகரில் கும்பல் மீது தடியடி—

இப்படி மற்ற மாநிலங்களிலே நடக்கக்கூடியவைகளே எல்லாம் சொல்வதால், அதைவிட இங்குக் குறைவாகத்தான் நடைபெற்றிருக்கிறது; அதனால் நாங்கள் கவலைப்படவில்லை. என்று யாரும் எண்ணிவிட வேண்டாம்—அந்த அளவிற்கு நான் பைத்தியக்காரன் அல்ல—அசம்பாவிதங்கள், வன்முறைகள் நடைபெறக்கூடாது என்பதிலே நாங்கள் எவ்வளவு அக்கறை காட்டி வருகிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இவைகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டேன்.

ராஜாஜியின் அவசரம்!

தமிழ்நாட்டிலே இங்கொன்றும், அங்கொன்றுமாக நடைபெற்ற சில சம்பவங்களை வைத்துக்கொண்டு, இங்கே சட்டம், ஒழுங்கு அமைதி கெட்டுவிட்டது, அராஜகம் நடக்கிறது; ஊழல் மலிந்து விட்டது. ஆகவே இந்த தி.மு.க. அரசை ஒழித்துக்கட்ட அணி திரள வேண்டுமென்று மதிப்பிற்குரிய காமராசர் வீர முழக்கம் செய்து வருகிறார். ஆனால் காமராசர், 'ஐந்தாண்டுக்காலம் ஆளட்டும்; அதற்குப் பின்னால் பதவியில் வரவிடாமல் ஒழித்துக் கட்டுவோம்; அதுவரையும் பொறுத்திருப்போம்' என்று கூறுகிறார்.

இராஜாஜி அவர்களோ; இப்பொழுதே ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்று குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார். தன்னுடைய துணைக்குக் காமராசரையும் அழைக்கிறார். ஆனால் பச்சைத் தமிழர் காமராசர், இராஜாஜியின் வலையில் விழமாட்டார் என்று நிச்சயம் நம்புகிறேன்.

'கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது' என்று வீர முழக்கம் எழுப்பிய பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட எங்களை—அந்த உயர்ந்த பாரம்பரியத்தில் வளர்ந்த எங்களை—அவ்வளவு சுலபத்தில்—நீனைத்தாலே ஒழித்து விடலாம் என்று இராஜாஜி அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கல்வியைப் பொறுத்தவரையில் மதிப்பிற்குரிய காமராசர் அவர்கள் எடுத்த சரியான நடவடிக்கையின் காரணமாகக் குடியாத்தம் தேர்தலிலே காமராசர் வெற்றிபெற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா பாடுபட்டார்கள். ஆனால் இன்று காமராசர் அவர்கள் இந்த அரசை மாற்றியே ஆகவேண்டும் என்று சங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசை மாற்றிவிடுவதிலே காமராசரைவிட இராஜாஜிக்கு அதிக அக்கறை ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை இராஜாஜிக்கு வயது அதிகமாகிவிட்டதால் விறுவிறுப்பாகச் செயல்பட்டு விரைவிலே இந்த அரசை ஒழித்துக்கட்டி, அதைப் பார்த்து மகிழவேண்டுமென்று விருப்பம் கொண்டிருக்கிறாரோ என்று நினைக்கிறேன்.

வேகம் வேண்டாம்; விவேகம் வேண்டும்

திரு ஹண்டே: 'இராஜாஜி அவசரமாக இருக்கிறார்கள்-வயது ஜாஸ்தியாகிக் கொண்டிருக்கிறது. அதனால் தான் இப்படி நினைக்கிறார்' என்று முதலமைச்சர் சொன்னார். அதைப் பற்றி நான் ஒன்றும் பேசவில்லை. அவர் எத்தனை ஆண்டு இருப்பாரோ நமக்குத் தெரியாது. நான் கேட்பதெல்லாம் மற்ற மாநிலங்களிலே நடப்பவைகளைப் பற்றியும், வேறு பல நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்ற முதலமைச்சர் அவர்கள் சிம்சன் விவகாரத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்பதுதான்.

முதல்வர் :—

நான், இராஜாஜி அவர்களுக்கு வயது அதிகமாகிவிட்டது: அதனால் அவருடைய காலத்திலேயே தி.மு.க. அரசை ஒழித்துக்கட்டி, அதைப்பார்த்து மகிழ்ந்திட நினைக்கிறார் என்று சொன்னதாக டாக்டர் ஹண்டே அவர்கள் நினைக்கிறார்கள். நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. இராஜாஜி அவர்கள் நீண்ட நாள் வாழ வேண்டும் என்பதிலே டாக்டர் ஹண்டே அவர்களைவிட நான் மிகுந்த அக்கறை உடையவன். 1976-லும் இந்த அரசு கவிழாமல், இதே மாதிரியான கூட்டணியோடு தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு இராஜாஜி அவர்களின் இம்மாதிரியான உதவி எங்களுக்குத் தேவைப்

படுகிறது. 1981-லும் இந்த ஆட்சி நடைபெறுவதை அவர் பார்த்து மகிழ வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை, நான் குறிப்பிட்டது, காமராசரைவிட இராஜாஜிக்கு அதிக வயதாகிவிட்டதால், அவரை விட அதிகக் கோபம் வருகிறது; அதனால்தான் இப்படிப் பேசுகிறார் என்பதுதான். இதைத் தவிர வேறென்றுமில்ல.

அறுவர் குழு ....

சிம்சன் தொழிற்சாலையைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே என்று சொன்னார்கள். அந்தத் தொழிற் சாலைத் தகராறுகளை விரைவிலேயே தீர்க்கின்ற வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அரசின் நடவடிக்கை போதாது ஒரு குழு அமைத்து அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் சொன்னார்கள். அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு அறுவர் குழு ஒன்றை அமைத்தோம். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தான் அறுவர் குழுவின் கன்வினராகவும் இருந்தார்கள்.

குழு அமைக்கப்பட்ட சில நாட்களிலேயே எங்களுக்குத் தெரியாமலேயே அறுவர் குழுவைக் கலைத்து விட்டார்கள். கலைத்துவிட்ட பின்னால் எங்களிடம் சொன்னார்கள். 'சேதி தெரியுமா, அறுவர் குழுவைக் கலைத்து விட்டோம்'' என்று.

எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு மா. வெ. நாராயண சாமியும் அறுவர் குழுவிலே இடம் பெற்றிருந்தார்கள். ஆனால் பெரும்பான்மை முடிவு எப்படி இருக்கிறதோ அதற்கு ஒத்துப்போகும்படி அவரைக் கேட்டிருந்தோம். இப்போது அந்தப் பிரச்சனையில் நல்லதொரு முடிவினைக் காண்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே வந்திருந்த மத்திய அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறோம். அந்த ஏற்பாட்டினாலும் சரியாகவில்லை என்றால் மேலும் என்ன செய்யலாம் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

திருமதி அனந்தநாயகி: அறுவர் குழு கலைக்கப்பட்டது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதற்குக் காரணம் அந்த அகில இந்தியத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டதுதான். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க வேறு வழியில்லாததால் அறுவர் குழு கலைக்கப்பட்டது.

முதல்வர்: அவர்களுக்கெல்லாம் கொடுத்த மதிப்பை எங்களுக்குக் கொடுத்திருந்தால், எல்லோரும் போன பின்னும் நாம் இருவருமாவது இருந்திருக்கலாமே (பலத்த சிரிப்பு).

ஆதாரமற்ற குற்றச்சாட்டு

திரு ஹண்டே.—I will be happy if the Hon. Chief Minister in his reply concerning Simpson and Company would say whether it is possible for the Chief Minister to think of holding of an election as early as possible. I have a feeling that unless an election takes place and somebody—X. Y or Z. it does not matter—is elected. unless a democratic process is adopted there. it will not be possible to solve the problem. May I request the Hon. Chief Minister to give consideration to this point of view in an objective manner?

முதல்வர்: இதைப்பற்றி வேறு விரிவாகச் சொல்லவில்லை. யோசித்துக்கொண்டிருக்கிறேன். இதைத்தான் திரு. கடில்கர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து ஏற்பாடு நடைபெறும்.

சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டுவிட்டது என்று பேசுவதற்கு அடுத்தபடியாக—அடுத்தபடி என்று இல்லாமல் முதல்படியாகவே-ஊழல், லஞ்சம் இவைகளைப் பற்றி இந்த மாமன்றத்தில் அதிகமாகப் பேசப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட எந்தக் குற்றச்சாட்டும் எடுத்து வைக்கப்படாமல்—அதை விசாரியுங்கள்—இதை விசாரியுங்கள் என்று கூறுவது பொருத்தமுடையதல்ல, ஆதாரத்தோடு தெரிவிக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் இருந்து விளக்கப்பட்டிருக்கிறது.

அன்றைக்கு, பார்வேர்டு பிளாக் உறுப்பினர் திரு. கே. கந்தசாமி அவர்கள் பழைய காங்கிரஸ் ஆட்சியைக் குற்றம் சாட்டிப் பேசியபோது கூட திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் "இப்படி எல்லாம் ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டுவது பொருத்தம்தானு? இப்படிச் சொல்வதை முதல் அமைச்சர் அவர்களால் விசாரிக்க முடியுமா?" என்று கேட்டார்கள்.

நான் அதற்கு "விளக்கம் தேவையில்லை, வதந்தி என்பது இருபுறமும் கூர் உள்ள கத்தி போன்றது. பயன்படுத்துகிறவர்களையே தாக்கக் கூடும்" என்றேன். அதைத் தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வதந்திகளை வைத்து நான் விசாரணை நடத்த முடியாது. குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைச் சொன்னால் விசாரணை நடத்தத் தயார் என்று கூறியிருக்கிறேன்.

ஊழல்கள் உருவானது எவர் காலம்

அரசியல் நிலையில் ஊழல் எப்படி நடைபெறுகிறது என்று எண்ணிப் பார்த்தால் வெளியில் பேசுவதை எல்லாம் வைத்துக் கொண்டு முன்னுள் முதல் அமைச்சர் பெரிய அளவில் ஊழல் நடப்பதாகப் பேசி வருகிறார். என்ன ஊழல் நடந்தது ? யார் காலத்தில் நடந்தது? என்பதை மக்களே அறிவார்கள்.

30 ஸ்டாண்டர்டு ஏக்கராவை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்ததன் காரணமாக எத்தனை ஏக்கராக்கள் அரசுக்குக் கிடைத்தன என்று கேட்கிறார்கள். 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக நாம் குறைத்தபோது அதிகமான பலன் காண முடியவில்லை.

அதற்குக் காரணம் என்ன ? இரண்டாயிரம் ஏக்கரா, மூவாயிரம் ஏக்கரா, நாலாயிரம் ஏக்கரா என்று நிலம் வைத்திருந்தவர்கள் எல்லாம், 1959-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னுல் பெரும் பகுதியை விற்றுவிட்டார்கள். அப்படி நிலங்களை விற்றவர்கள் யாரேனும் ஒருவர் பெயருக்கு விற்றார்களா என்றால் இல்லை. குறிப்பாக திரு. கருப்பையா மூப்பனார்-கபிஸ்தலம்-அவர்களுக்குச் சொந்தமாக இருந்த நிலம் 2,028 ஏக்கராவாகும். அவரிடம் இருந்து மீதி நிலம் எதிர்பார்த்தது 1,983 ஏக்கராக்கள்.

ஆனால் 1959—ஆம் ஆண்டு கடைசியில் 1,464 ஏக்கராக்களை அவர் விற்று விட்டார். அந்த நிலங்களையும் 30-க்கும் மேற்பட்டவர்களுக்கு விற்று இருக்கிறார். இப்படி விற்பனை செய்யப்பட்ட வகையில் 1,464 ஏக்கராக்கள் போய்விட்டன. கடைசியாக அவரிடம் இருந்து சர்க்காருக்குக் கிடைத்தது 5 ஏக்கராக்கள்தான்.

உக்கடை ஏ. அப்பாவுத் தேவர் அவர்களுக்குச் சொந்தமானது 1,605 ஏக்கராக்கள். அவரிடம் இருந்து 1,541 ஏக்கராக்களை அரசு எதிர்பார்த்தது.

ஆனால் 60-ஆம் ஆண்டு உச்ச வரம்புச் சட்டத்தின்படி அவரிடம் இருந்து கிடைத்தது 113 ஏக்கராக்கள் தான், காரணம் 59-ஆம் ஆண்டு கடைசிக்குள்ளாக அவர் 502 ஏக்கராக்களை 21 பேர்களுக்கு விற்றுவிட்டார். பாக்கி நிலங்களை டிரஸ்டுகளாக எழுதி வைத்துக் கொண்டு விட்டார்.

உக்கடை ஏ. விஸ்வனுதத் தேவர் அவர்களுக்குச் சொந்தமானது 582 ஏக்கராக்கள். அதில் இருந்து சர்க்காருக்கு ஒன்றுமே வரவில்லை.


பூண்டி ஏ. வீரையா வாண்டையாருக்குச் சொந்தமானது 467 ஏக்கராக்கள். அதில் இருந்தும் சர்க்காருக்கு ஒன்றும் வரவில்லை.

பூண்டி ஏ. அப்பாவு வாண்டையாருக்குச் சொந்தமானது 385 ஏக்கராக்கள். அவரிடம் இருந்து 337 ஏக்கரா சர்ப்ளஸ் எதிர்பார்க்கப்பட்டது. 377 ஏக்கராக்களை விற்றுக்கொண்டு விட்டார். கிடைத்தது 30 ஏக்கராக்கள்தான்.

பூண்டி வீ. அப்பாசாமி வாண்டையாருக்குச் சொந்தமானது 625 ஏக்கராக்கள். அதில் இருந்து 552 ஏக்கராக்கள் மீதி நிலம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திக் கொண்டு விட்டார். ஆகவே அதில் இருந்து கிடைத்தது ஒன்றுமே இல்லை.

ஆக, வாண்டையார் குடும்பத்திற்கு மட்டும் நாலாயிரம் ஏக்கராக்களுக்கு மேல் 1959-ஆம் ஆண்டில் இருந்தும் 60-ஆம் ஆண்டுச் சட்டப்படி அந்தக் குடும்பத்தில் இருந்து 48, 49 ஏக்கராக்களுக்கு மேல் அரசுக்கு சர்ப்ளஸ் கிடைக்கவில்லை.

இதைப் போலவே ஏற்கெனவே திரு வி.எஸ். தியாகராஜ முதலியாருக்கு மட்டும் ஏழாயிரம் ஏக்கராக்கள் கரும்புத்



தோட்டம் என்கின்ற அடிப்படையில் விதிவிலக்கு அளிக்கப் பட்டுவிட்டது.

நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த 138 பேர்களைப் பற்றி மட்டும் சொல்கிறேன்.

தஞ்சாவூர், மாயவரம், நாகப்பட்டினம் தாலூக்காக்களில் மட்டும் 138 பேர்களுக்கு 1959—ஆம் ஆண்டு இறுதியில் சொந்தமாக இருந்திருக்கக் கூடிய நிலம் 48,924 ஏக்கராக்கள். அதிலே 60-ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டப்படி அரசுக்குக் கிடைத்தது 6,624 ஏக்கராக்கள்தான்.

நான் கேட்கிறேன், எப்படித் திடீரென்று 59-ஆம் ஆண்டு இறுதியில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இந்த 138 நிலச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் தங்கள் நிலங்களை விற்று விட வேண்டும் என்ற உணர்ச்சி வந்தது ?

இது போன்ற உச்சவரம்புச் சட்டம் வரப்போகிறது என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. என்னென்ன அறக்கட்டளைகளுக்கு விலக்கு அளிக்கப் போகிறார்கள் என்பதும் தெரிந்து விட்டது.

ஒருவர் தம் பங்களாவில் உள்ள கிருஷ்ணன் படத்திற்குப் பூஜை செய்வதற்காக என்று 63 ஏக்கராவை டிரஸ்ட்டாய்து வைத்திருக்கிறார். கிருஷ்ணன் படத்துப் பூஜைக்காக டிரஸ்ட் எழுதி வைக்கட்டும். கல்விக்காக டிரஸ்ட் எழுதி வைக்கட்டும். கன்னிகாபரமேஸ்வரி அம்மனுக்காகவோ, காளிக்காகவோ, மாரியம்மனுக்காகவோ டிரஸ்ட் எழுதி வைக்கட்டும். டிரஸ்டுகள் என்ற பெயரால் எழுதி வைக்கப் பட்ட நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்பது தெரிந்து விட்டதன் காரணத்தினால்தான் அவர்கள் அன்றைக்கு அப்படி எழுதி வைத்தார்கள்.

நான் சொல்வது எல்லாம் 138 பேர்களுடைய கணக்குத் தான். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு சுப்பையா அவர்களுக்குத் தெரியும். திரு மணவி கந்தசாமி அவர்களுக்குத் தெரியும். சர்வோதயக் கமிட்டித் தலைவர் திரு ஜகந்நாதன் அவர்களுக்குத் தெரியும். கட்டளைகளின் பேரால் இப்படிப் பல்லாயிரம் ஏக்கராக்களை எழுதி வைத்து விடுவதற்கு ஏற்பாடு செய்து விட்டதன் மூலம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான நிலமற்ற ஏழை விவசாயிகள் 1960-ஆம் ஆண்டிலே ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இதைவிடப் பெரிய ஊழல் ஒன்று இருக்க முடியுமா ?

திருமதி அனந்தநாயகி : 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவைப் பதினைந்தாகக் குறைத்ததன் மூலம் அரசாங்கத்திற்கு எவ்வளவு நிலம் கிடைத்தது என்று சொல்ல முடியுமா ?

முதல்வர்: அதைத்தான் சொல்கிறேன். அடிப்படை ஊழல் 59-லேயே நடந்து விட்டது. 48 ஆயிரத்துச்சொச்சம் ஏக்கர் நிலங்களில் இருந்து கிடைத்ததே 6624 ஏக்கராக்கள் தான் என்கிறபோது, இதில் இருந்து அதிகமாக எவ்வளவு கிடைத்து விட முடியும் ? சிலர் 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வைத்திருந்தார்கள். இன்னும் சில புத்திசாலிகள் 25 ஏக்கராவுக்கு 20 ஏக்கராவுக்குக் கூடக் குறைத்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

திருமதி அனந்தநாயகி : தவறு 59-ல் நடந்தது என்று சொன்னதுபோல் இப்போது தவறு நடக்கவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக இப்போது கிடைத்த நிலம் எவ்வளவு என்று சொல்வார்களா ?

முதல்வர் : நாலாயிரம் போனது பற்றிக் கவலையில்லை—யாரை போனது பற்றிக் கவலைப்படவில்லை—பூரண போகுமே—என்று கவலைப்படுகிறார்கள். அந்தச் சட்டத்திற்கு இப்போதுதான் குடியரசுத் தலைவருடைய அனுமதி கிடைத்திருக்கிறது. அதன் பேரில் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் பூர்த்தியானவுடன் இந்த விவரங்களும் தெரியும்.

திரு ஹண்டே.—Even in the committee meeting where we all met it was clearly desided that this sort of malpractice should be completely put down and that action must be taken. But the point is when the Chief Minister and the cabinet brought this 15 acres ceiling, did the Government examine what is the quantum of available surplus and was it not placed before this House? In other words, were all these things taken into consideration? Now the Government is coming and saying in the House that practically nothing is there—practically very little and there is nothing much to be talked of. Why were all these things not considered? May I know whether it is also because of some malpractice that has taken place recently or is it because of the malpractice that took place earlier. After 15 acres ceiling has been brought, the Chief Minister says there is not much surplus land.....

முதல்வர் : மாண்புமிகு தலைவர் அவர்களே ! 1960-ல் நடந்தது போல நடக்க முடியாது. அப்போதுதான் இட்டமிட்டு நடத்த முடிந்தது. இதெல்லாம் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து ஆலோசனைக் கமிட்டியில் கூடத் தெரிவித்து அன்றைக்கு விவாதித்தோம்.

திரு ஹண்டே : முதலமைச்சர் அவர்கள் உட்பட. I am the first man. I will be the last man to subscribe to this. I am not particular about any Minister or the Government. I want to know whether any person is trying to cheat now also. Because he says not much of surplus is available now. I want to know whether all these aspects were thoroughly gone into by the department or the Government. That is my question.

முதல்வர் : தலைவர் அவர்களே! நான் முழுவதும் ஆராய்ந்த பிறகு அந்தப் பட்டியலைப் பேரவையில் வைக்கத் தயாராக இருக்கிறேன். அதிகமாக வராது என்று தெரிகிறது. இரண்டாயிரம், மூவாயிரம் ஏக்கர்கள் கிடைக்கலாம். நாற்பதினாயிரம்

ஏக்கர் சிறுசிறு அளவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டது. அவர்களிடத்திலிருந்து எடுக்கும் போது கொஞ்சம் தான் கிடைக்கும். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பு என்று இப்போது கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் வேறு பல சட்டங் களும் கொண்டு வருவோம். கரும்புத் தோட்டம், மேய்ச்சல் நிலங்கள் போன்றவைகளை ரத்துச் செய்தோம். கரும்புக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்குச் சட்டம் கொண்டுவர இருக்கி றோம். தொடர்ந்து சர்க்கார் அதிகாரிகளை வேகமாக நடவடிக்கை எடுக்கும்படி செய்து, எவ்வளவு நிலம் கிடைக்கும் என்ற அறிக்கையை நிச்சயமாக இந்த மன்றத்தில் வைப்பேன்.

திரு கே. டி. கே. தங்கமணி : இது குறித்து ஆலோசனைக் குழு சிபாரிசு செய்திருக்கிறதா ?

முதல்வர் : நான் படிப்படியாகச் சொல்ல இருக்கிறேன். எல்லாவற்றையும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்வோம். இப்போது இந்த மன்றத்தில் வைத்து இருக்கும் உங்கள் யோசனையைப் பொறுத்தவரையில், ஒரு குழு அமைக்கப் பட்டு, அதன் அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

நீண்டநாள் காங்கிரஸ்காரர்....!

அடுத்தபடியாக, லஞ்சம் ஊழல் என்று சொல்லி, 'கழக அரசு நம்பிக்கை இழந்து இருக்கிறது' என்று நம் மாநிலத்தில் இருக்கிற கட்சிகள் பேசுகின்ற நேரத்தில், புதுவை மாநிலத் திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய ஆட்சியில் அமைச்ச ராக இருக்கும் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் தமிழ் நாட்டிற்கு வருகிற நேரத்தில் கட்சி அளவிலே பேசுகிற நிலைமை இருக்கிறது. அப்படிப் பேசுவதற்கு உரிமை இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. நீண்ட காலமாக காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் அவர்கள் (சிரிப்பு). ஒரு மத்திய அமைச்சர் மாநில அமைச்சர் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையையொட்டி இவ்வளவு தரக்குறைவாகப் பேசி யிருப்பது—என்னை மாத்திரம் அல்ல—இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைவரையும் புண்படுத்துகிறது என்று நான் நினைக்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறாரே என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார். ஒருவேளை நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற காரணத்தால் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறாரோ போலும்! அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் சென்னைக்கு அவர்

வந்திருந்தபோது நிதிநிலை அறிக்கையின் ஆங்கில நகல் வேண்டுமென்று கேட்டார்கள். திரு. மோகன் குமாரமங்கலம் போன்றவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படித்து விட்டுப் பாராட்டுவார்கள் என்று மகிழ்ச்சியோடு இருந்தேன். அவர் நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு, ''கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை இவர்தான் கண்டுபிடித்தார் என்பதைப் போல் சொல்லியிருக்கிறார்'' என்று கூறியது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. கங்கை-காவிரி இணைப்புப் பற்றி நான் குறிப்பிட்டதை—ஆங்கிலக் குறிப்பை அப்படியே படிக்கிறேன்.

"On behalf of the State Government, I have discussed with the Union Planning Minister and the Union Minister for Irrigation the need to take up immediately the massive scheme of linking up the Cauvery with the Ganga:-

என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

''நான்தான் கண்டு பிடித்தேன்'' என்று சொல்வதாகச் சொல்லியிருக்கிறார். மேலும் ''வேண்டுமானால் இவருக்கு இன்னொரு டாக்டர் பட்டம் கொடுக்கலாம்'' என்று திரு. மோகன் குமாரமங்கலம் கூறியிருக்கிறார். டாக்டர் பட்டம் வந்தது கிண்டலுக்கு உரியது என்று தெரிவிக்கிறார். அப்படிப்பட்ட பெரியவர்களின் பாராட்டுக்களை நான் எதிர்பார்க்கவில்லை. கங்கை-காவிரி இணைப்புப் பற்றி சர். சி. பி. ராமசாமி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில், ''சர். சி. பி. ராமசாமி அவர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்துச் சொன்னர்களே'' என்று கேட்ட நேரத்தில், இந்தப் பக்கத்தில் இருந்த அமைச்சர்கள் ''அது குழு அல்ல. அப்படி ஒரு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது'' என்றுதான் சொன்னார்கள். இந்தத் திட்டத்தைப்பற்றி இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் நானும் தொழில் துறை அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்களும் மத்திய அமைச்சரிடத்தில், பேசியிருக்கிறோம். கங்கை-காவிரி இணைப்பு என்பது புதிதாகக் கண்டுபிடித்தது என்று நாங்கள் சொல்லவில்லை. 1971-ல் தேர்தல் அறிக்கையில் போட்டு விட்டோம், 'நாங்கள்தான் கண்டுபிடித்தது'. 'சின்னப் பிள்ளைகள் எச்சில் துப்பிவைத்து அதை யாரும் தொடக்கூடாது'' என்பார்களே அதுபோலத் திரு மோகன் குமாரமங்கலம் பேசுகிறார். அவர் எத்தனை ஆண்டுக் காலம் காங்கிரசில் ஈடுபாடு கொண்டு நீலத்திருக்கிறார் என்று தெரியவில்லை. (சிரிப்பு) அவர் அப்படிப் பேசுவது நல்லதல்ல.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்களைப் பற்றிப் பேசுகையில், '' சின்னப் பிள்ளைகள் எச்சில் துப்பிவைத்து '' என்று சொல்வது பொருத்தமானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பிரதமர் தலைவர் : மத்திய அமைச்சர்களை சொல்ல ஆரம்பித்து விட்ட பிறகு, மத்திய அமைச்சர்களும் சொல்லலாம், மாநில அமைச்சர்களும் சொல்லலாம்.

முதல்வர் : '' மாநில சுயாட்சியைக் கேட்டு விட்டு, கங்கை-காவிரி இணைப்புப் பற்றிச் சொல்லுகிறீரே, இது போன்ற முரண்பாடான கருத்து இருக்க முடியுமா?'' என்று திரு. மோகன் குமாரமங்கலம் கேட்டிருக்கிறார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் ரொம்ப நாளாக இருந்திருக்கிறார். பிறகு வேறு கட்சிக்குச் சென்றிருக்கிறார். அதைப்பற்றித் திரு. மண்ணிகந்தசாமி அவர்களுக்கும், திரு. தங்கமணி அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். என்னைவிட அதிகமாகத் தெரியும்.

திரு கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அது குறித்துத் திரு. மணிகந்தசாமி அவர்கள் இந்தச் சபையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

முதல்வர் : ரஷ்யாவிடத்தில் அவருக்குப் பற்று உண்டு. ரொம்பத் தொடர்பு உண்டு. ரஷ்ய நாட்டிலே மாநில சுயாட்சி இல்லையா ? இருக்கிறது. அங்கே ஓடுங்காக இருக்கிறது. வால்கா, டான் போன்ற பல நதிகள் இணைக்கப்பட்டு, வாய்க்கால்கள் எல்லாம் இணைக்கப் பட்டிருக்கின்றன. ஏஷியாடிக்ரஷ்யா, ஈரோப்பியன் ரஷ்யா என்ற இரண்டையும் இணைக்கின்ற அளவுக்கு வால்கா-டான் நதித்திட்டம் நிறைவேறி இருக்கிறது. அதேபோல ரைன் நதியானது பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகளை ஒன்றுக இணைக்கிறது. டான்யூப் நதி யூகோஸ்லாவியா, ஹங்கேரி, ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளை இணைக்கிறது. இப்படியாகக் கங்கை-காவிரி இணைவதால் மாநில சுயாட்சி இருக்க முடியாது என்று சொல்லுகிற வாதம் பொருத்தமற்ற வாதம், அர்த்தமற்ற வாதமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் தேசிய ஒருமைப்பாட்டை இதன் மூலம் வலியுறுத்துகிறது என்று சொல்லலாம் அல்லவா? இந்த மாநில சுயாட்சியால் பிரிவினை நோக்கம் எள்ளளவும் கிடையாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். வெறுமனே பிரிவினையைக் கேட்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போய்விடக் கூடாது.

"People's Action"—Sarva Seva Sangh Journal of News and Views :—.

என்ற பத்திரிகையில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார். திரு. ஜெயப் பிரகாஷ் நாராயண் என்னவெல்லாம் பெருமையாக எண்ணி அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

"But at the same time it must be recalled with pride the ringing words of Chief Minister Mr. Karunanidhi which he is recently reported to have spoken at a public meeting at Thanjavur. "The demand for greater autonomy to the States", he declared, "was never meant to divide the country but only to promote the welfare of the people. The Prime Minister, Mrs. Indira Gandhi, herself could examine the demand for more powers to the States for advancing the people's interest without in any way affecting unity and integrity of the country."

என்று சொல்லிவிட்டு, மேலும் சொல்லுகிறார்.

"There is enough flexibility in our Constitution and our Central and State leaders have been wise enough to appreciate the limits within which the demand for autonomy may be pressed."

மேலும் சொல்கிறார் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண்,

"I myself have been a consistant advocate of a much larger measure of autonomy to the states in view of the vastness of our population and the diversity of our problems."

திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே நாம் சுயாட்சி என்பது திரு கே. டி. கே. சொல்வது போல் தமிழ் நாட்டிற்கு மாத்திரம் கேட்பதல்ல. தமிழ்நாட்டிற்குச் சுதந்தரம் கேட்கிறோம் என்று யாரும் நினைத்துக்கொள்ளக் கூடாது. நியூ யார்க் டைம்ஸ்லே போட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் இந்தியாவுக்கு ஆதரவாகவும் எழுதலாம், எதிராகவும் எழுதலாம். அவர்கள் போடுவதற்கு நாம் பொறுப்பாளியல்ல. அமெரிக்காவுக்கும் நமக்கும் என்ன நட்புணர்ச்சி இருக்கிறது. போர் நிகழ்ந்த நேரத்திலே நமக்கெல்லாம் துரோகமிழைத்த நாடு அது என்பது இங்கேயுள்ளவர்களுக்கு எல்லாம் தெரியும். அவர்கள் தமிழ்நாட்டிற்கும், இந்திய நாட்டிற்கும் ஒரு மோதலே உண்டாக்கிப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. நியூயார்க் டைம்ஸிலே வருகிறது என்றால் அங்கு இருந்து இங்கே வந்து பார்த்துச் சென்றஒருஎழுத்தாளரா எழுதுகிறார்? யாரோ இங்கு இருந்து அந்தக் கைங்கரியத்தை, அந்தப் புண்ணிய காரியத்தை, அந்தத் திவ்யகாரியத்தைச் செய்திருக்கிறார்கள்என்பதாலே

நமக்கு எல்லாம் தெரியும். ஸ்டேட் ஆட்டானமியைப் பற்றி ஒன்றரை மணி நேரம் பேசியிருக்கிறேன். நாவலர் அவர்கள், கழகத்தின் பொதுச்செயலாளர் பேசியிருக்கிறார்கள். இன்னும் மற்றக் கழகத் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள். இவற்றைப் பற்றி எல்லாம் ஒரு வார்த்தையாவது எழுதி இருக்கிறதா? ஆனால் இராணுவப்படை கேட்கிறோம் என்று திரு. ஆசைத்தம்பி சொன்னால் அதைப் பெரிதுபடுத்திப் போடுகிறார்கள். எழுதுகிறார்கள். அன்றைக்கே நாவலர் அதை விளக்கியிருக்கிறார்கள். ''ஆசைத்தம்பி எது எது கேட்கலாம் என்று கேட்டார்கள், நானும் கழகத் தலைவரும் எது எது கேட்கிறோம் என்பதைச் சொன்னோம்'' என்று வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் வேண்டுமென்றே விஷமத்தனமாக மாற்றிச் சொல்கிறார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக் கொள்கிறேன், மாநில சுயாட்சி கேட்கிற திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய ஒருமைப்பாட்டிலே இந்திய ஒற்றுமையிலே திட்டமான கருத்தைக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவைப் போன்ற நாடுகள் தூரம் போட்டு இந்தியாவிலே நிலவும் ஒற்றுமையைக் கெடுப்பார்களானால், நான் நாலரைக் கோடித் தமிழ் மக்களின் சார்பிலே அறைகூவல் விடுக்கிறேன், அமெரிக்காவில் எந்த ராஜதந்திரிகளாக இருந்தாலும் அவர்கள் இதிலே வெற்றிபெற முடியாது, வெற்றி பெற முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவைப் பிரிப்பதோ, இந்திய நாட்டைத் துண்டாடுவதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேலையல்ல. ஸ்டேட் ஆட்டானமி வேண்டுமென்று—மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று—மைசூர் மாநிலத்தின் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வீரேந்திர பாட்டில் அவர்கள் கேட்கிறார்கள். அங்குதான் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், அவர்களுக்கு வாக்களிக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள்.

திருமதி அனந்தநாயகி : இப்பொழுது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கருத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், கேட்கும் பொழுது நீங்கள் முஜிபுர் படத்தைப் போட்டுக் கொள்வதும், நாங்கள் பிரிந்து போவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோகரன் அவர்கள் பேசுவதும், பொதுமக்களைத் தவறான பாதைக்கு அழைத்துச் சென்றுவிடுமோ என்ற எண்ணத்திலே, அதை முன்னாலேயே திருத்திச் சரியாகக் கட்டுப்படுத்துங்கள் என்று சொல்கிறோம்.

முதல்வர் : நண்பர் மனோகரன் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள், அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மைசூர் மாநிலத்

திலே உங்களுடைய கட்சிக்காரர் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்; ஆதரிப்போம் என்று பேசுகிறீர்கள். ஆனால், மாநில சுயாட்சி என்று நாங்கள் கேட்கிற போது ஆதரிக்க மறுக்கிறீர்கள், அவர்களை ஏன் ஆதரிக்கிறீர்கள் ?

திருமதி அனந்தநாயகி : உங்களையும் நாங்கள் ஆதரிக்கிறோம், ஆனால், கேட்கும் முறை இருக்கிறது! அவர்கள் கேட்பதற்கும் நீங்கள் கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

முதல்வர் : மாநில சுயாட்சியை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா?

திருமதி அனந்தநாயகி : என்ன என்ன அதிகாரங்கள் கேட்கிறோம் என்று நீங்கள் வரையறுத்துச் சொல்லுங்கள். நாங்கள் எந்த எந்த அதிகாரங்களைக் கேட்கலாம் என்று விரும்புகிறோமோ அதை ஆதரிப்போம்.

முதல்வர் : கர்நாடக மாநிலத்தில் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சி ஒரு தேர்தல் பிரகடனம் வெளியிட்டிருக்கிறது. அதிலே வீரேந்திர பாட்டீலின் படம் போட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் அதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

'Will fight in a determined manner for greater autonomy for the State and against all discriminations and step-motherly treatment by the Centre.'

அதிலே ஆட்டானமி என்றுதான் சொல்லியிருக்கிறார்கள், அதிகாரங்கள் வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள், இன்ன இன்ன அதிகாரங்கள் வேண்டுமென்று விளக்கிச் சொல்லவில்லை. ஆனால், அவர்களை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். நாங்களும் அப்படித்தான் ஆட்டானமி என்று கேட்கிறோம், எங்களை ஆதரிக்க மறுக்கிறீர்கள்.

திருமதி அனந்தநாயகி : எது எது கேட்பார்கள் எங்கள் கட்சிக்காரர்கள் என்பது எங்களுக்குத் தகவல் தெரியும். ஆனால், உங்களை நாங்கள் எதை எதைக் கேட்கிறீர்கள் என்று கேட்க முடியாது, அதனால்தான் எதை எதைக் கேட்கிறீர்கள் என்று சொல்லுங்கள் என்று சொல்லுகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எங்களுடைய கட்சியின் காரியக் கமிட்டியில் இன்ன இன்ன அதிகாரங்கள் வேண்டுமென்று திட்ட வட்டமான முடிவு செய்திருக்கிறார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த வரம்புக் குட்பட்டுத்தான் நாங்கள் செயலாற்றுவோம்.

முதல்வர் : என்ன என்ன அதிகாரங்கள் கேட்கிறார்கள் என்று தெரியும் என்று சொன்னார்கள். அதை அவர்கள் விளக்கிச் சொன்னால் நல்லது.

திருமதி அனந்தநாயகி : அதற்கு என்று தனியாக நேரம் ஒதுக்கிக் கேட்டால் நான் தயாராக இருக்கிறேன். எஜ்கேட் பண்ணுவதற்கு.

திரு. ஹண்டே: Sir, the Hon. Chief Minister has just now explained what the Leader of the D.M.K. Parliamentary Party had stated. But I have got issue of the newspaper 'Thennagam' which is run by the persons belonging to the D.M.K., with me now and in that paper he has clearly stated that if the people went on teasing the D.M.K. like that, there would come a stage when they would be forced to reopen the issue of separation. On those lines his speech has been reported in several other papers also. With the permission of the Chair, I am even prepared to read the relevant portion of his speech. Also, the Hon. Chief Minister has stated that he would go to court if any one charged his party that it was preaching session. But does the Hon. Chief Minister dare take action against the members of his Party who had stated : 'Bhutto will have the last laugh'.

இதுகூடக் கேட்கலாம் என்று அவரது அகராதியிலே கேட்கிறார்கள். ஆனால் நாவலர் அவர்களுடைய அகராதியிலே எது கேட்கலாம் என்று விளக்கியிருந்தார்கள் என்று சொன்னார்கள்.

I feel that the Hon. Chief Minister is losing control over the entire situation and he might be reaching a point of no-return and that is why I am cautioning the Government.....

முதல்வர் : தலைவர் அவர்களே ! கட்சியினுடைய தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமே தவிரத் தீர்மானத்தை யொட்டிப் பேசப்படுகிற கருத்துக்களை வைத்துப் பேசுவது முறையல்ல. இல்லாவிட்டால் பிரிவினையில் முடிந்துவிடும் என்று சொன்னார்கள். ஏன் இல்லாமல் போகப் போகிறது ? பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் என்ன ஜனநாயகம் தெரியாதவர்களா ? மாநில சுயாட்சிக்காக வாதாடாதவர்களா ? இப்பொழுதே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்று தெரிவித்து விட்டார்கள். அவர்கள் என்ன என்ன அதிகாரங்கள் என்று சொல்லுங்கள் எற்றுக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். தனியாகச் சொல்லுவதாகக் குறிப்பிட்டார்கள். வீரேந்திர பாட்டீல் அவர்கள் [illegible] குறிப்பிடுகிறார் :

'Further, our Party will strenuously strive for getting greater powers for the State commensurate with the responsibilities and obligations to the people cast by the Constitution without affecting the unity and integrity of the country.'

இதைத்தான் நாங்களும் சொல்கிறோம் என்று குறிப்பிடுகிறார்கள். இதைக் குறிப்பிட்ட அவர்களே, தாம் எவ்வளவு நிதிரமான வார்த்தைகளைப் பயன்படுத்து கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

'Will fight in a determined manner'

உறுதியான தன்மையிலே என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல நாங்கள் கேட்பது வெறும் ஆட்டானமி, அவர்கள் கேட்பது,

'for greater autonomy for the State and against all discrimination and step-motherly treatment by the Centre.'

என்கிற அளவுக்கு விரேந்திர பாட்டீல் கேட்டிருக்கிறார். நான் பேசிய அதே நாளிலேதான் விரேந்திர பாட்டீல் கட்சியைச் சேர்ந்தவர்களே ஆதரித்து அனந்தநாயகி அம்மை யார் அவர்கள் பெங்களூரிலே அங்கே வெளியிடப்பட்டிருக் கின்ற தேர்தல் பிரகடனத்தின் அடிப்படையிலே வாக்குகள் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஸ்டேட் ஆட்டானமி என்று நாங்கள் சொன்னால் தவறு. அவர்களுடைய கட்சி யைச் சேர்ந்தவர்கள் சொன்னால் தவறில்லை. வேண்டுமானால் நாங்கள் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறோம். மாநில சுயாட்சி வேண்டுமென்று காமராசர் கேட்டால், கிரேட்டர்-ஆட்டா னமி வேண்டுமென்று விரேந்திர பாட்டீல் கேட்டாரே-அதே வாசகத்தையே காமராசர் கேட்டால், நாங்கள் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறோம். விரேந்திர பாட்டீல் கேட்கிற வாச கத்தை அவர்கள் கேட்டால், அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்துக் கூட நிற்கிறோம். கிரேட்டர் ஆட்டானமி வேண்டுமென்று சொல்கிற துணிவு காமராசருக்கு இருக் கிறதா ? விரேந்திர பாட்டீல் சொல்கிற-கிரேட்டர் ஆட்டா னமி வேண்டுமென்று சொல்கிற துணிவு-அனந்தநாயகி அம்மையாருக்கு இருக்கிறதா? அப்படிச் சொன்னால் அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்து நிற்கத் தயாராக இருக் கிறோம். இதுவரையிலும் இந்த விவாதத்திலே கருத்துக் களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு நேரம் அதிகமாகி விட்டதால் இதற்கு மேலே மற்ற மற்றப் பிரச்சினைகளை எல்லாம் அந்தந்த மாவியங்கள் எடுத்துக்கொள்ளப் படுகின்ற போது விவாதித்துக்கொள்ள லாம் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மேலவையில் முதல்வர்

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே! இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட 40 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நேற்றுச் சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய பல்வேறு கருத்துக்களுக்குப்பதிலளிக்கிற வகையில் பல்வேறு விளக்கங்களை அரசின் சார்பில் நான் அளித்திருக்கிறேன். இந்த மாமன்றத்திலும் பேசியிருக்கிற உறுப்பினர்கள் ஏறத்தாழ அதேவிதமான கருத்துக்களை எதிரொலித்திருக்கிறார்கள் என்பதையும் நாம் அனைவரும் நன்றாக அறிவோம். எதிர்க்கட்சித் தலைவர், தங்களுடைய உரையின் தொடக்கத்திலேயே ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும், மேலும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்; அதற்கேற்றவாறு சட்டம் திருத்தப்பட வேண்டுமென்றெல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவர்கள் ஆளுகின்ற கட்சியில் இருக்கிறபோதே இந்த எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்றாலும், அதை நிறைவேற்றுகிற வாய்ப்பைப் பெறாமல் இருந்தார்கள் என்பதும், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற காரணத்தால் எந்த அளவுக்குப் பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூற முடிகிறதென்பதையும் நான் நன்றாக உணருகிறேன்.

அதிக அதிகாரம் தேவை

ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரங்கள் தரவேண்டுமென்ற கருத்துக்கு மாறுபட்ட கருத்துடையதல்ல இந்த அரசு என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய பேச்சில் ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளையும் குறிப்பிட்டார்கள். ஒரு கதவு அமைப்பதற்கு அதிகாரத்தைச் சர்க்காரிடமிருந்து பெற வேண்டியிருக்கிறது என்பதையும், வேறு சில சாதாரண விஷயங்களுக்கெல்லாம் அங்கு இருக்கின்ற உறுப்பினர்களுடைய கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றி நடத்திட வேண்டிய காரியங்களுக்கெல்லாம் அரசாங்கத்தை—அரசாங்கத்தினுடைய அனுமதியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது என்பதையும் அவர்கள் மெத்த வருத்தத்துடன் இங்கே குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட அதிகார வரம்புகளை அவர்களே இருந்த அந்த அரசின் சார்பில் உருவாக்கியவர்கள் என்பதையும் நான் மறந்து விடவில்லை. ஆனாலும் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றதும் இந்த அதிகாரங்கள் எல்லாம் ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியங்களுக்கும் வேண்டுமென்று தெரிவித்திருப்பதை அலட்சியப்படுத்துவதற்கில்லை.

இது போன்ற சிறுசிறு குறைபாடுகள் எல்லாம் நீங்குகிற அளவுக்குப் போதிய அதிகாரங்களோடு எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தினுடைய உத்திரவிற்காகக் காத்திருந்து அதன் காரணமாகக் காரியங்கள் தாமதப்படுவதென்ற அந்த நிலைமையிலிருந்து ஊராட்சி மன்றங்களையும், ஒன்றியங்களையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும்—அதற்கான விரிவான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதை நம் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருக்கு இந்த அவையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அவர்கள் வரியினங்களைப் பற்றிக் குறிப்பிட்ட போது ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்கெனவே ரூ. 1½ அளவுக்கு செஸ் வசூலித்தவர்கள் இனிமேல் ரூ. 2½ அளவுக்கு வசூலிக்கலாம் என்று அவர்களுக்கு அனுமதி கொடுக்கப் பட்ட காரணத்தால் கிராம மக்கள் அதிகமாகச் சிரமப்படுவார்கள் என்று கூறி இப்போது ரூ. 20, மேலும் ரூ. 9, இன்று ரூ. 29 விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூ. 2½ என்பதும் வசூலிக்கப்பட்டு அதோடு ரூ. 50-ம் சேர்த்து ரூ. 79 ஆகும் என்கிற கணக்கினைக் காட்டினார்கள். இந்தக் கணக்கைச் சில பெரிய பத்திரிகைகளில்கூடத் தலையங்கங்களாகவும் செய்திக் குறிப்புகளாகவும் வெளியிட்டதை நான் பார்த்தேன். ஆனால், இங்கு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் இந்தக் கணக்கைக் காட்டி விட்டு, வேறு ஒரு புள்ளி விவரத்தையும் சொன்னார்கள். இப்போது எந்த அளவுக்கு வசூலிக்கப்படுகிறது என்ற புள்ளி விவரத்தையும் சொன்னார்கள். ஆனால், அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டில் இருப்பவை பழைய புள்ளி விவரங்கள். இன்றுள்ள நிலையைப் பார்த்தால் கொஞ்சம் மாறுபட்டதாக இருக்கும். 25 பைசா வரையில் வசூலிக்கக் கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் 3; 25 பைசாவுக்கு மேல் 50 பைசா வரையில் வசூலிக்கக் கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் 39; 50 பைசாவுக்கு மேலும் ஒரு ரூபாய்க்குக் குறைவாகவும் வசூலிக்கக் கூடிய ஊராட்சி ஒன்றியங்களினுடைய தொகை தான் அதிகம் 185; ஒரு ரூபாய்க்கு மேல் ரூ. 1.25 வரை 37 ஊராட்சி ஒன்றியங்கள் வசூலிக்கின்றன. ரூ. 1.35 என்கிற அளவில் வசூலிக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் ஒன்றே ஒன்று; ரூ. 1.50 பைசா என்கிற அளவுக்கு அந்த எல்லை வரையில் வசூலிக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் 38. இந்தக் கணக்கின்படி பார்த்தால் அதில் அதிக அளவு யார் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் 185 ஊராட்சி ஒன்றியங்கள்தான் வசூலித்துக் கொண்டிருக்கின்றன. ரூ. 1.50 அவர்கள் வசூலிக்கலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டிருந்த அந்த நேரத்திலேயே ரூ. 1 தான் வசூலித்திருக்கிறார்கள். இப்போது ரூ. 2.50 வரை வசூலிக்கலாம் என்று போட்டால் இன்னும் அரை ரூபாய் அளவுக்குத்தான் 50 அல்லது 60 பைசா அளவுக்குத்தான்

உயர்த்துவார்கள். ரூ. 1.50 என்று இருந்த பொழுதே முழு வதையும் பயன்படுத்திக் கொள்ள அஞ்சிலர்கள். அதைப் போன்ற அச்சம் அவர்களுக்கு ஏற்படாமல் போகாது. ரூ.2.50 வரை வசூலித்துக் கொள்ளலாம் என்று போடுவதால் ரூ. 2 அளவுக்கு வசூலித்துக் கொள்ளலாம். இது கொடுத்துத் தான் தீர வேண்டும்—அப்படி வரி வசூலித்துத் தீரவேண்டுமென்று அரசு கட்டாயப் படுத்துகின்ற விஷயம் அல்ல. அந்த அந்தக் கிராமங்களிலே புதிய வளர்ச்சிகள் ஏற்படுவதற்கும் புதிய சாலைகள் உருவாவதற் கும் கிராமப் புறங்கள் மேம்பாடு அடைவதற்கும் அந்தக் கிராம மக்களுடைய முயற்சிகள் இருந்தாக வேண்டும். கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி களுடைய ஊக்கமும் இருந்தாக வேண்டும். அந்த இரண் டையும் இணைக்கின்ற நேரத்தில் பொருளாதாரம் மிகமிக முக்கியமான ஒன்றாகும். பொருளாதாரச் சூழ்நிலையில் இன் றைக்கு அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற பல்வேறு நெருக் கடிகளின் காரணமாக நாம் இந்த யோசனையைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தெரிவித்திருக்கிறோமேயல்லாமல் வேறல்ல. இதனால் கிராம மக்கள் அதிகமாகக் கஷ்டப்படுவார்கள் என்று நாம் கற்பனை செய்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். அப்படி 1, 2 இடங்களில் வசூலிக்கப்படுகிறதென்றாலும் அது வசதியுள்ளவர்களிட மிருந்து வசூலிக்கப்படுகின்ற தொகையாக இருக்குமேயல்லா மல் ஏழை எளியவர்களை-நிரந்தரமான நிலம் படைத்த விவ சாயிகளை, யெல்லாம் இவைகளின் மூலமாகக் கஷ்டப் படுத்தவேண்டிய அவசியம் இருக்காது என்று கருதுகிறேன்.

கல்விக்காக

நம்முடைய மாநிலத்தின் வருமானம் கிட்டத்தட்ட ரூ. 400 கோடியாக உயர்ந்து விட்டது என்று அவர்கள் எடுத்துக் காட்டி, இதில் நீங்கள் கல்விக்காக ஒதுக்கி இருப்பது எங்கள் காலத்தில் ஒதுக்கியதைவிட விகிதாச் சாரப்படி பார்த்தால் அதிகம் இல்லையென்ற குறிப்புகளையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இதையும் சரியாகக் கவனிக்கவில்லையென்றே கருது கிறேன். நிதிநிலை அறிக்கையில் கல்வியைப் பற்றிக் குறிப் பிடுகிற இடத்தில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் எவ்வளவு செலவிடப்பட்டது. கழக ஆட்சிக் காலத்தில் எவ்வளவு செல விடப்படுகிறது என்ற ஒப்பு நோக்கு அதில் இடம் பெற வில்லை. அதில் இடம் பெற்றது 1967–68. ஆனால் 1966–67ல் ரூ. 201.42 மொத்தச் செலவு. அந்த நேரத்திலே கல்விக்காகச் செலவிடப்பட்டது ரூ. 43.86 கோடியாகும். இப்போது 1972–73ல் ரூ. 394.77 கோடி. மொத்தச் செலவில் கல்விக்காகச் செலவழிப்பது ரூ. 89.8 கோடியாகும்.

ஆகவே, 1966–67-ல் 21·8 சதவீதம், 1972–73-ல் 22·7 சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறதேயல்லாமல் குறைந்து விடவில்லை. அது மாத்திரமல்ல, தொடர்ந்து இந்த ஆண்டு 89 கோடி என்றால் அடுத்த ஆண்டு 100,120 என்று உயர்ந்துகொண்டு போகவேண்டுமென்ற கட்டாயமில்லை. கல்வியைப் போல வேறு பல திட்டங்களுக்கு-வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசின் சார்பில் நாம் நிதிஒதுக்கீடு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஏதோ இந்தப் புதிய ஆட்சி வந்த பிறகு வரிகளெல்லாம் ஏகமாக உயர்த்தப்பட்டு விட்டன—புதிய புதிய வரிகளெல்லாம் போடப்பட்டு விட்டன என்று பேசினார்கள். இன்றைக்கு இந்த மாநிலத்திற்கு மாநில வரிகளின் மூலமாக 200 கோடி ரூபாய் கிடைக்கிறதென்றால், அதிலே ஆயத்தீர்வை மூலமாக 35 கோடி ரூபாயை ஒதுக்கி விட்டு, மீதமுள்ள இந்தத் தொகையை நாம் வகுத்துப் பார்த்தால்-ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வரிகளின் பெருக்கம் தான், வரிகளின் வளர்ச்சியின் மூலமாகக் கிடைக்கிற தொகைதான் இன்றைக்கு இந்த வருமானத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. நேற்று நான் குறிப்பிட்டதைப் போலப் புதிதாகப் போடப்பட்டிருக்கிற வரிகள் மூலம் 25-30 கோடி ரூபாய் கிடைக்கக் கூடும். ஏற்கெனவே இருந்த வரிகளின் மூலம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சிகளின் காரணமாக-வாணிப மேம்பாட்டின் காரணமாக-தொழில் வளர்ச்சியின் காரணமாக-மக்கள் பெருக்கத்தின் காரணமாக இன்றைக்கு ஏற்கெனவே போடப்பட்ட வரிகள் பெருகியிருக்கிறதே அல்லாமல், புதிதாக வரிகள் போடப்பட்டிருக்கிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்த வரையில் கூட அடிக்கடி யென்று இருந்தது. நான் குறிப்பிட்டிருக்கிறேன். நம் முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஏற்கெனவே 10 ஆயிரம் ரூபாய்க்குக்கீழ் விற்பனை செய்கின்ற வியாபாரிகள் விற்பனை வரி கட்டவேண்டிய அவசியமில்லை. 1967-ல் இந்த வரம்பினை 15ஆயிரம் என்ற அளவிற்கு மாற்றி, பிறகு சென்ற ஆண்டு அதை 25 ஆயிரம் ரூபாய் என்ற வரம்பிற்கு மாற்றியிருக்கிறோமேயல்லாமல் சிறு வியாபாரிகளுக்கு இன்னல் அளிக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்குக் கிஞ்சிற்றும் இருந்ததில்லை. அதைப் போலவே கம்பவுண்டிங் முறையிலே விற்பனை வரி செலுத்துகிறவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாய் என்றிருந்த வரம்பை ஒரு இலட்ச ரூபாய் அளவிற்கு நாங்கள் உயர்த்தினோமேயல்லாமல் வேறு அல்ல என்பதை நாடு அறியும். இந்த மன்றமும் நன்றாக அறியும். விற்பனை வரி மீது போடப்பட்ட உபரி வரி கூட 10 இலட்சம் ரூபாய்க்கு

மேற்பட்ட '' டர்ன் ஓவர் '' ஆகிற அப்படிப்பட்ட வியாபாரிகளுக்குத் தான் அவர்களுடைய விற்பனை வரி மீது போடப்பட்டிருக்கிறதே யல்லாமல் சாதாரணமானவர்களுக்கு உபரி வரி போடப்படவில்லை.

மூன்றும் மூன்றரையும்

மூன்று சதவீதமாக இருந்த விற்பனை வரியை மூன்றரைச் சதவீதம் என்ற அளவிற்கு அரைச் சதவீதம் உயர்த்தினேம். இந்த அரைச் சதவீதம் உயர்த்தப்பட்ட போது எத்தனையோ மாநிலங்களோடு ஒப்பிட்டு அதிகமாக உயர்த்தப்படவில்லை யென்கின்ற காரணங்களை விளக்குகின்ற காலத்தில், கேரளத்தில் மூன்று சதவீதம்தான் இருக்கிறதென்று சுட்டிக் காட்டப் பட்டது. ஆனால், இந்த ஆண்டு கேரள மாநிலத்தினுடைய நிதி நிலை அறிக்கை வெளிவந்தபிறகு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்மை புரிந்திருக்கும். அங்கே மூன்று சதவீதமாக இருந்த வரி மூன்றரைச் சதவீதமாக ஆக்கப்பட்டிருக்கிறது.



நாம் பல்வேறு இனங்களில் வரிகளை ரத்துச் செய்திருக்கிறோம். சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற, பொதுவாக நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற பல்வேறு பொருள்களுக்கு வரிகளை ரத்துச் செய்திருக்கிறோம். கூடைகள், பாய்களுக்கான வரிகளை ரத்துச் செய்திருக்கிறோம். உப்பின் மீது இருந்த வரி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளாகத் தேங்காய்க் கொள்முதலுக்கிருந்த விற்பனை வரி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. வேளாண்மைக் கருவிகளுக்கிருந்த வரி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அரிசி மாவு, நொய், சோளம், கம்பு, கேழ்வரகு, மைலோ, மக்காச் சோளம், தவிடு போன்ற பொருள்களுக்கிருந்த வரி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. தென்னை நாரால் செய்யப்பட்ட பொருள்களுக்கிருந்த வரிகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. கதர், பருத்தி உடைகளுக்கிருந்த வரிகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. உண்பதற்காக வெட்டப்படுகின்ற ஆடு,

மாடுகளுக்குப் போடப்பட்ட வரி ரத்துச் செய்யப்பட்டிருக் கிறது. பணவெல்லத்தின் மீதிருந்த வரி ரத்துச் செய்யப்பட் டிருக்கிறது. பதிவு செய்யப்பட்ட வியாபாரிகள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற நூலின் மீதிருந்த வரி ரத்துச் செய்யப்பட்டது. நகர்ப்புற வரியில் ஒரு கிரவுண்டும், ஒரு கிரவுண்டுக்குக் கீழும் மனைகள் வைத்திருப்பவர்களுக்கு நகர்ப்புற வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. புஞ்சை நிலங்கள் முழுவதற்கும் நில அடிப்படைத் தீர்வை, நில வரி ரத்துச் செய்யப்பட்டது. அதைப் போலவே 5 ஏக்கருக்கும் 5 ஏக்கருக்குக் கீழும் நிலம் வைத்திருப்பவர்களுக்கு அடிப்படை நில வரி ரத்துச் செய்யப்பட்டது. இப்படி இன்றைக்கு வரியின் மூலம் வரும் வருமானம் 200 கோடி ரூபாய் அள விற்கு உயர்ந்திருக்கிறதென்ற காரணத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு, இந்த 200 கோடி ரூபாய் முழுவதும் இந்த அரசு வந்த பிறகு வரிப் போட்டு வசூலித்துக் கொண் டிருக்கிறதென்ற தவருன எண்ணத்தை மாண்புமிகு உறுப் பினர்கள் கொண்டிட வேண்டாமென்று கேட்டுக் கொள் கிறேன்.

ஏழைகளின் நன்மைக்காக

வரிகள், வசதிகளைப் பெருக்குகின்ற அளவிற்குப் பயன் படுத்தப்பட்டிருக்கின்றனவா என்ற கேள்வி எழுந்தது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர் கள் கூட 400 கோடி ரூபாய் வருமானம் வருகிற நேரத்தில் கல்விக்காகச் செலவிடப்படுவது குறைவுதானே என்று கேட்டார்கள். குறைவல்ல என்று விளக்கம் அளித்தேன். என்றாலும், வரிகளின் மூலம் வருகிற வருமானமானாலும், அல்லது மத்திய அரசு வசூலிக்கிற வரிகளிலிருந்து மாநிலத் திற்குக் கொடுக்கவேண்டிய அந்தப் பங்குத் தொகை மூலம் கிடைக்கின்ற வருமானமானாலும், அல்லது மத்திய அரசு தர வேண்டிய உதவித் தொகையின் மூலம் கிடைக்கின்ற வருமானமானாலும், வரி அல்லாத இனங்கள் மூலம் கிடைக் கின்ற வருமானமானாலும் இவைகள் அனைத்தும் இந்த நாட்டில் அடித்தளத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நடுத்தர மக்களுக்குப் பயன்படுகின்ற அளவிற்குத்தான் இந்த அரசின் வளர்ச்சிக்குச் செலவழிக்கப்பட்டு வருகிறது. உதாரணத் திற்குச் சொல்லவேண்டுமானால், நான் 1966–67 என்று குறிப்பிட்டால் பழைய ஆட்சியைக் குறிப்பிடுவதாகத் தவருகக் கருதிக்கொள்ளக் கூடாது. நான் அதைக் குறிப்பிடுவதற்கு-அதை எல்லைக் கோடாக வைத்திருப்பதற்குக் காரணம் பின் தங்கிய மக்களுக்கு, தனித்து அவர்களுடைய பிரச்சினைகளைக் கவனித்து அவர்களுடைய நலன்களைப் பெருக்குவதற்கு, அது வரையில் எந்தப் புதிய ஏற்பாடுகளும் இல்லையென்பதை

இந்த மாமன்றம் நன்றாக அறியும். அதற்குப் பிறகு, பின் தங்கிய மக்களுக்காக ஒரு தனி இலாகா தனிமைப்படுத்தப் பட்டு, அதற்கு ஒரு அமைச்சரும் நியமிக்கப்பட்டு, பின் தங்கிய மக்களின் நலன்களை எப்படிப் பேணிப் பாதுகாக்கலாம் என்று ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் கிடைக்கப்பெற்று, முதல் கட்டமாக ஏற் கெனவே 1966–67-ல் பின்தங்கிய மக்களுக்காக மாநில அரசு 91 இலட்சம் ரூபாய் செலவிட்டது என்பது மாறி, 1972–73-ல் 4 கோடியே 68 இலட்சம் ரூபாய் அவர்களுக்குச் செலவிடப்படுகிற அளவிற்கு அந்த மக்களுக்கு நம்முடைய வருவாயை இன்றைக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அரிஜன மக்களுக்கு ஏற்கெனவே 3 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டதென்றால் இன்றைக்கு 8 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவிடுகின்ற அளவிற்கு உயர்ந்திருக் கிறது. வருமானமும் உயர்ந்திருக்கிறது என்பதை மறுக்க வில்லை. அதே நேரத்தில் அவர்களுக்கு மேலும் பல சலுகை களை அளிக்கவேண்டுமென்ற எண்ணமும் வளர்ந்திருக்கிறது. அதையும் யாரும் மறந்திட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களை இணைக்கின்ற வழித் தடங்கள் இந்த ஆண்டு இது வரையில் 300 மைல், 200 மைல், 150 மைல் என்று பேருந்துகள் செல்வதற்கான சாலைகளை எடுத்துக் கொள்வது என்றிருந்த நிலைமையை மாற்றி, இன்றைக்கு ஆயிரம் மைல்களை எடுத்துக் கொள்வதென்று அறிவித்திருக் கிறோம். இதைக் கூட எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன் னார்கள், ஆயிரம் மைல்களை 374 ஆல் வகுத்தால் 2½ மைல் தான் வரும் என்று சொன்னார்கள். நான் அதற்கு விளக்கம் அளித்த பிறகு ஒத்துக்கொண்டிருப்பார்களென்று நினைக் கிறேன். அவர் நான் தந்த விளக்கத்திற்கு நன்றி சொல்லாத காரணத்தினால் ஒருவேளை என் விளக்கத்தை ஒத்துக்கொள்ள வில்லையோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. ஆயிரம் மைலை அப்படியே 374 ஆல் வகுத்துச் சாலைகளைப் போட்டு விடுவது என்று அர்த்தமல்ல. சில இடங்களில் 10 மைல் தேவையானாலும் போடவேண்டும். சில இடங்களில் 6 மைல் மைல் தேவையானாலும் போடவேண்டும். சில இடங்களில் 3 மைல் போதும் என்றாலும் போடவேண்டும். ஆகவே, அப்படியே வகுத்து விடுவதென்ற கணக்கு அல்ல. அடுத்த ஆண்டு இந்த ஆயிரம் என்பதை மேலும் அதிகப்படுத்தலாமா என்ற இந்த யோசனையைத்தான் இந்த அரசு செய்யுமே யல்லாமல் குறைக்கும் எண்ணம் இருக்காது.

கல்விப் பணியில் நாம்....

வெள்ளைக்காரர் காலத்திலிருந்து 1966–67 வரையில் தமிழகத்தில் இருந்த கல்லூரிகள் 105. இந்த 4 ஆண்டுக்

4-எ 186585 X71.211 N73 ← N72 31.12.2

காலத்தில் அதாவது 1971 வரையில் 64 புதிய கல்லூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மதிப்பிற்குரிய தலைவர் காமராசர் அவர்கள் கூடப் பல இடங்களில் பேசியதாக ஏடுகளில் படித்தேன். 'என்ன செய்துவிட்டார்கள், ஒரு சாதனை கிடையாது' என்று சொல்லிவிட்டு, எந்த ஊர் புதிதாகக் கல்லூரி வந்த ஊர் என்று தெரியவில்லை, அங்கே ஏதோ கல்லூரிகளைக் கட்டியிருக்கிறார்கள், ஒத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் எல்லாக் கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாவலர் அவர்கள் வேடிக்கையாக ஞாயிற்றுக் கிழமை பார்த்தால் எல்லாக் கல்லூரிகளும் மூடித்தான் கிடக்குமென்று சொல்வார்கள். மதிப்பிற்குரிய தலைவர் காமராசர் அவர்கள் எல்லாக் கல்லூரிகளும் மூடிக் கிடக்கிறதென்று சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவரோடு சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்ட எதிர்க் கட்சித் தலைவர் திரு ராஜாராம் அவர்களுக்கும் இது ஆச்சரியமாக இருக்கும். என்ன செய்வது ; அவர் தலைவர். இவர் தளபதி. அங்கே மறுத்திட இயலாது.

அதுபோலவே 1966–67-ல் 2372 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இப்போது மேலும் 341 உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கிறதே யல்லாமல் குறைந்து விடவில்லை.

நான் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஏதும் செய்து விடவில்லை என்று கூறவில்லை. 20 ஆண்டுக் காலத்தில் இவர்கள் புரிந்த சாதனைகளையும், 4 ஆண்டுக் காலத்தில் நாம் எந்த அளவுக்குச் செய்திருக்கிறோம் என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும், ஒன்றுமே செய்யவில்லை, ஒன்றுமே செய்ய வில்லை, இந்த ஆட்சி எதற்கும் உதவாத ஆட்சி என்று பேசுவது நாட்டுக்கும், எதிர்காலத்திற்கும் நல்லதல்ல என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

சென்னை நகரத்தில் யாராவது நினைத்தார்களா? யாராவது வருத்தப்பட்டார்களா? மன்னிக்க வேண்டும். வருத்தப்பட்டு இருக்கவேண்டும். வெள்ளம் வந்த நேரத்தில் குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டுக் குழந்தை குட்டிகள் கார்ப்பரேஷன் பள்ளிகளில் கண்ணீரும் கம்பலையுமாக ஒதுங்கியிருந்தார்கள். அந்த நேரத்தில் வருத்தம் ஏற்பட்டிருக்கலாம்.

குடிசைகளை மாற்றியுள்ளோம்

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட நேரத்தில் வருத்தப்பட்டிருக்கலாம். யாருக்காவது தீப் பிடிக்காத, நல்ல வீடுகளாக மாற்றித் தர வேண்டுமென்ற எண்ணம் வந்ததா ? அந்த எண்ணமிருந்தது நிறைவேற்றப்பட்டதா ?

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு அந்த எண்ணத்தைப் பெற்றது மட்டுமல்ல, அதற்காகக் கோடிக் கணக்கான ரூபாய் செலவழிந்தாலும் பரவாயில்லை—சென்னை நகரத்தில் 7 ஆண்டுக் காலத்துக்குள் 1,000-க்கும் மேற்பட்ட குடிசைப் பகுதிகளை மாற்றியமைத்து நல்ல, அழகான காற்றோட்டமுள்ள தூய்மையான வசதி மிக்க வீடுகளை, ஏழை எளிய, குடிசை வாழ் மக்களுக்குக் கட்டித் தர வேண்டுமென்று திட்டமிட்டு, அப்படிக் கட்டப்பட்ட வீடுகள் பல இன்றைக்கு ஆங்காங்குச் சென்னை நகரத்தில் காணப்படுகின்ற காட்சியினை, மெரினா கடற்கரை ஓரத்தில் தினம் தினம் காலைநேரத்தில் உடல் நலத்துக்காக உலா வந்து கொண்டிருக்கின்ற நம் எதிர்கட்சித் தலைவரவர்கள் பார்த்து இருக்க மாட்டார்களா? அண்ணா சமாதியிலிருந்து தொடங்கி வாலெனி நிலையம் வரை சென்று வருவதாக நான் கேள்விப் பட்டேன். ஒரு நாள் நான் ரயில் நிலையத்திலிருந்து வீட்டுக்குப் போகும்போது கூடப் பார்த்தேன், அவர்கள் பார்த்து இருக்க மாட்டார்களா? பார்த்தார்கள், பார்த்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இங்கு அதை .....

பெருந்தலைவர் பேசியது என்ன?

திரு. கே. ராசாராம் :—தலைவரவர்களே! அந்தமாதிரியான காரியங்களைச் சொல்வதற்கு ஏராளமானவர்கள் பின்னாலே இருக்கிறார்கள். செய்யாமல் விட்டதைச் சொல்வதற்குத் தான் நாங்கள் இருக்கிறோம்.

முதல்வர் :—தலைவரவர்களே! கொஞ்சம் தட்டிக் கொடுத்து வேலை வாங்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். செய்கிறோம் என்று சொன்னால் பரவாயில்லை. இதையும் செய்யுங்கள் என்று சொல்லுங்கள், பெரியவர்கள்! நீங்களும் சரி, காமராசரும் சரி, அனுபவத்தில், ஆற்றலில், இந்த நாட்டு மக்களிடத்தில் அறிமுகமானதில் எங்களைவிட மூத்தவர்கள். ஆகவே, பரவாயில்லை இதைச் செய்தீர்கள். இதையும் செய்யுங்கள், என்று தட்டிக் கொடுத்து வேலை வாங்குங்கள். இதையும் செய்யவில்லை, எதையும் செய்யவில்லை என்று பேசுகிற பேச்சிலிருந்து நீங்கள் கொஞ்சம் விடுபடுங்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேனே யல்லாமல் வேறல்ல.

1967-ம் ஆண்டுவரையில் 400 குடியிருப்புகள்தான்—சாதாரணக் குடியிருப்புகள்தான் கட்டித் தரப்பட்டன. இன்றைக்கு 1972 முடிவுக்குள் 17,000 குடியிருப்புகளை இந்த அரசு குடிசை மாற்றுவாரியத்தின் மூலமாக நிறைவேற்றித்தர இருக்கிறது. இது அந்த ஏழை, எளியவர்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தியல்லவா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

1966-ம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற இணைப் புச்சாலைகள் 17,056. 1971 ஆம் ஆண்டு அதனுடைய தொலைவு எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்றால் 31,957 என்ற அளவில் இருக்கிறது.

1966-ம் ஆண்டு ஓவர்ஹெட் டாங்குகள், சுதந்தரத்துக்கு முன்பிருந்தே 2,506 தான். 1966க்குப் பிறகு இந்த 5 ஆண்டுக் காலத்தில் 4,420 என்ற எண்ணிக்கையை அது பெற்றிருக்கிறது.

1966-ம் ஆண்டு வரையில் கிணறுகளின் எண்ணிக்கை, 20 ஆண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியிலும் அதற்கு முன்புள்ள திட்டத்திலும் 43,200. இன்றைக்கு அது 69,329 என்ற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது.

அதைப் போலவே பள்ளிக் கூடங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் 20 ஆண்டுக் காங்கிரஸ் ஆட்சியிலும் அதற்கு முன்பும் இருந்தது 9,874. இன்றைக்கு இந்த 5 ஆண்டுகளில் 14,926 ஆக உயர்ந்திருக்கிறது.

நான் இவைகளைச் சொல்வதற்கான காரணம் ஒப்பிடு வதற்காக அல்ல. இந்த 5 ஆண்டுக் காலத்தில் எதையும் செய்யாமல் இருந்துவிடவில்லை. எங்கள்மீது வீண்பழி சுமத் தாதீர்கள், நாங்கள் எதையும் செய்யவில்லை என்று. அரசுக்கு வருமானம் வருகிறது. தி.மு.க. மந்திரிகள் பாக் கெட்டில் போட்டுக் கொண்டு போய் விடுகிறார்கள் என்று பேசுவது நல்லதல்ல. பெருந்தலைவர் காமராசர் அவர்களே பேசுவது நல்லதல்ல.

திரு. கே. ராசாராம் :—தலைவரவர்களே! நான் 20 நாட்களாகத் தலைவர் காமராசருடன் சுற்றுப்பயணம் செய்தேன். மந்திரிகள் பாக்கெட்டுகளில் போட்டுக் கொள்ளுகிறார்கள் என்று எங்கும், எந்த இடத்திலும் அவர் அப்படிச் சொல்லவில்லை.

முதல்வர் :—தலைவரவர்களே! அப்படிப் பேசி யிருக்கக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கருதுவதை நான் புரிந்து கொள்ளுகிறேன். ஆனால் காமராசர் பேசியதாகக் காங்கிரஸ் கட்சியின் அதிகாரப் பூர்வமான கருத்துக்களை வெளியிடுகிற பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில், எட்டுக் காலம் தலைப்பில் வெளி யிடப்பட்டிருக்கிறது. 200 கோடி ரூபாய் எங்கே போகிறது? மந்திரிகளின் பாக்கெட்டுக்கா போகிறது என்று காமரா ர்

பேசியதாகக் காங்கிரஸ் கட்சியின் முக்கியமான முதல் பத்திரிகையில் நான் படித்து உள்ளபடியே மனம் புண் பட்டேன். ஏனென்றால் இங்கே தரப்படுகிற வரிகளெல் லாம் 'பைனான்ஸ் டிபார்ட்டுமெண்டு' இருக்கிறது. வேறு வங்கிகள் இருக்கின்றன. இங்கெல்லாம் எப்படி எப்படி அது நிர்வகிக்கப்படுகிறது என்ற விஷயங்கள் ஏற்கெனவே மந்திரி களாக இருந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

திரு. கே. ராசாராம் :—தலைவரவர்களே, அது கட்சிப் பத்திரிகை அல்ல. கட்சிக்கு வேண்டியவர்களின் பத்திரிகை என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள்.


முதல்வர் :—தலைவரவர்களே, தயவு செய்து இனியாகிலும் ஒரு கட்சிப் பத்திரிகையை ஆரம்பித்துத் தலைவர் காமராசர் பேசக் கூடிய உண்மையான செய்திகளை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே அரசு அலுவலர்களுக்கு இந்த அரசு 23 கோடி ரூபாயை இரண்டாவது ஊதியக் குழுவின் சார்பாக அளித்தது. முன்புகூட நகர ஈட்டுப்படியும், ஈட்டிய விடுப்புக்குப் பதில் தொகை பெறுதலும், மலைவாழ்படியும், திருமணக் கடனும், ஓய்வு ஊதியமும், அகவிலைப்படியாக 3, 4 முறை திருத்தி அமைத்ததும், அவர்களுக்கு 6 கோடி ரூபாய் அளவில் இடைக்கால நிவாரணம் அளித்ததும்—அரசாங்க ஊழியர் களுக்கு இந்த அரசு செய்த நல்ல காரியங்களாகும்.

(வருவாய்த்துறையில் நிலப்பட்டா வழங்கி ஒரு பெரும் புரட்சியை 5 ஆண்டுக் காலத்தில் மிக வெற்றிகரமாக நாங்கள் நடத்தி முடித்திருக்கிறோம். 1947-லிருந்து 1967 வரையில் பயிரிடுவதற்குத் தோதான நிலங்கள், நிலமற்ற ஏழை, எளியவர்களுக்கு எவ்வளவு பேருக்குத் தரப்பட்ட தென்றால் 1,15,290 பேருக்குத் தரப்பட்டது. ஏக்கராபரப்பு 2,88,158. இது 20 ஆண்டுக் காலத்தில் தரப் பட்டது. 1967-லிருந்து 1972 வரையில், 2,47,000 பேருக்கு 4,32,000 ஏக்கர் தரப்பட்டிருக்கிறது.)

அதைப் போலவே வீட்டுமனை ஒப்படை செய்கிற வகை யில் 20 ஆண்டுக் காலத்தில் 69,000 பேருக்கு 2,645 ஏக்கர் தரப்பட்டிருக்கிறது. இந்த 5 ஆண்டுக் காலத்தில் 3,42,421 பேருக்கு 11,280 ஏக்கர் வீட்டு மனை ஒப்படை செய்யப் பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல. நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் பாராட்டியது போலவே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே எடுத்துக் கூறியது போலவே, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய கணக் கின்படி 25,000 பேர் குத்தகைதாரர்கள் நிலத்திலிருந்து.

மாயவரத்தில் மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் குத்தகைக் காரர்கள் எவ்வளவு பேர் பயனடைவார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அந்த அளவுக்கு ஒரு பகுதியில் மட்டும் 25,000 பேர். மாநிலம் முழுவதும் அதே கணக்கில் பார்த்தால் 50,000, 60,000 பேர் பயனடைகிற அளவுக்கு அவர்கள் கொடுத்த கணக்கின்படி சொல்லுகிறேன். எவ்வளவு குத்தகைக்காரர்கள் இன்று பாதிக்கப்படாத அளவுக்கு, நிலத்தை விட்டு வெளியேற்றப்படாத அளவுக்கு, ஒரு சட்டத்தை மாமன்றத்தின் முன் கொண்டுவந்து நிறை வேற்ற இருக்கிறோம்.



அது போலவே விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக ஆக்கி இருப்பது இந்த அரசின் சார்பில் வினைவித்திருக்கின்ற மகத்தான புதுமையாகும்—புரட்சியாகும்.

பல ஆண்டுக் காலமாகக் காலில் வெள்ளெலும்பு முளைத்த நேரம் முதற்கொண்டு பாடுபட்டுக் கழனியில் வேலை செய்து துன்பத்தில் உழன்று கொண்டிருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் தாங்கள் இருக்கின்ற வீடுகளைத் தங்களுக்கு உரிமையிருக்கின்றது என்று கூறிக் கொள்ள முடியாத அளவுக்கு, அவைகளை வைத்து அவசரத்துக்கு 200 ரூபாய், அல்லது 300 ரூபாய் கடன் கூடப் பெற முடியாத நிலையில் அந்த வீடுகளை ஏற்ற வகையில் பழுது பார்த்துச் செப்பனிட முடியாத அளவுக்கு இருந்த நிலைமையை மாற்றவும், எந்த நேரத்திலும் வெளியேற்றப்படுவோம்என்றவேதனைக்கனவு கண்டுகொண்டு இருந்தார்களே, அவர்களை அந்தக் கனவு உலகத்திலிருந்து

நனவு உலகுக்குக் கூட்டி வருவோம். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனையைச் சொந்தமாக்குகின்ற திட்டங்கள் சட்டம் செய்து, அண்மையில் கடந்த மாதத்தில் திருவையாற்றில் 6,000க்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்தப் பட்டா வழங்கும் விழாவில் நாங்கள் கலந்து கொண்டோம். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இந்தச் சட்டத்தால் பயன் பெறப் போகின்ற விவசாயத் தொழிலாளர்கள் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம்
இன்று தொழிலாளர்களுக்கும் நிவாரணம்.

கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு ராஜாஜி காலத்திலே சட்டம் கொண்டு வரப்பட்டு நிவாரணம் கிடைத்தது. என்றாலும் இப்போது விவசாயிகளுக்கு மாத்திரமல்லாமல் தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அரசு அலுவலர்கள் இவர்களுக்கெல்லாம் கூட நிவாரணம் அளிக்கிற முறையிலே சட்டம் ஒன்றை இந்த மாமன்றத்திலே நாம் நிறைவேற்ற இருக்கிறோம். அதே போல உச்ச வரம்புச் சட்டத்தில் ஏற்பட்டு விட்ட பல்வேறு கோளாறுகளை நாம் நீக்க வேண்டுமென்று இன்றையத் தினம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனைப் பற்றி விளக்கமாக நேற்றுச் சட்டப் பேரவையில் நான் பேசியிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் 3 தாலூக்காக்களில் மட்டும் 138 மிராசுதார்கள் 59 ஆயிரத்துச் சில்லறை ஏக்கராக்களை இப்படி அறக்கட்டளைகள் என்ற பெயரில் தங்கள் நிலங்களை நிர்வகிக்க வேண்டும் என்று சதி செய்து, இப்படி ஒரு சட்டம் வருவதை முன்னாலேயே உணர்ந்து அதற்கு ஏற்றவாறு அறக்கட்டளைகள் என்று அமைத்து ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கரா நிலங்களை இன்னொரு பெரும் பணக்காரருக்கு விற்கிறது என்று இல்லாமல் 40 ஏக்கரா, 50 ஏக்கரா என்று பிரித்துப் பிரித்து எப்படிப்பிரித்தால் உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பதையெல்லாம் உணர்ந்து 58 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரா நிலங்களைத் தங்களிடமே வைத்துக் கொள்வதற்கு அறக்கட்டளைகளுக்கு எழுதி வைத்து விட்ட காரணத்தினால் அன்றைக்கு 6 ஆயிரம் ஏக்கரா அளவிற்குத்தான் மிச்ச நிலம் கிடைத்தது. ஆகவே, சட்டத்தின் சந்துபொந்துகளில் ஒளிந்து கொள்ளச் செய்யப்பட்ட பல்வேறு ஏற்பாடுகளில் மறைந்து கிடக்கிற, ஏழை எளிய மக்களை ஏமாற்றுவதற்குத் திட்டமிட்டு அன்றையத் தினம் நடந்து கொண்டவர்களை இன்றைக்கு நாம் முழுவதுமாகப் பிடித்து நிறுத்த இயலாத அளவிற்குச் சட்டங்கள் குறுக்கிட்டாலும் நாம் முடிந்த அளவிற்குப் புரட்சிகரமான—கனல் நிறைந்த கருத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக அறக்கட்டளைகள் என்ற பெயரில் ஒளிந்து கொண்டு இருப்பவர்

களை வெளியே இழுத்துக் கொண்டு வருவதற்கு இன்றைக்குச் சட்டம் இயற்றி இருக்கிறோம். நான் சொன்னால் வேடிக்கையாக இருக்கும். அறக்கட்டளைகள் என்ற பெயரில் ஒரு மிராசுதார் தன்னுடைய பங்களாவில் ஒரு கிருஷ்ணன் படத்தை வைத்து அதற்குப் பூசைக்கு 63 ஏக்கரா நிலத்தை எழுதி வைத்திருக்கிறார். இவைகளிலே இருந்து—அவர்களை அந்தப் பாதுகாப்பிலிருந்து, திரை மறைவில் இருந்து, வெளியே கொண்டு வருவதற்கு இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். நம்முடைய நண்பர் சாமிநாதன் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது சொன்னார், என்ன இருக்கிறது எடுத்துக் கொள்வதற்கு என்று. என்ன இருக்கிறது எடுத்துக் கொள்ள என்பதற்கு அல்ல இன்றைக்கு நாம் வரைமுறை செய்கிறது. இப்படி இவர்கள் உச்ச வரம்பு விதிகளில் இருந்து தப்பித்துக் கொள்ளாமல், தங்கள் நிலங்களை மற்றவர்களுக்கு விற்காமல், மற்றவர்கள் பிறர் பொருள்களை வாங்கிச் சேர்க்காத அளவிற்கு, இப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்துகின்ற முறையிலே தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதை மறந்து விடக் கூடாது.

புதிய மேம்பாடு

தொழில் வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் நம்முடைய தமிழகத்தில் புதிய மேம்பாடுகள் எதுவும் ஏற்படவில்லை என்கிற குறைபாடு இந்த மன்றத்திலே எதிர்த்தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது. 100 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்து தூத்துக்குடி உரத் தொழிற்சாலை, ஹெவி வாட்டர் பிளான்ட் தொழிற்சாலை தொடங்குகிற அளவிற்கு அரசு முயற்சி மேற்கொண்டு, அந்தக் காரியங்கள் நடைபெற்று இருப்பதை யாரும் மறந்திட வேண்டாமெனக் நான் கேட்டுக் கொள்கிறேன். 300 கோடி ரூபாய் அளவிலே எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையிலே சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான திட்டம் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கிறது. 8 கோடி ரூபாயிலே—பொதுத் துறையிலே நைலான் தொழிற் சாலை ஒன்று அமைக்கப்பட இருக்கிறது—பாலிஸ்டர் தொழிற் சாலை தொடங்கப்பட்டு இந்த ஆண்டு அதனுடைய பணி நிறைவேறிக் கொண்டு வருகிறது.

கற்பனை வேண்டாம்!

பொதுவாகத் தமிழ் நாட்டில் தொழில் அமைதி மிகவும் கெட்டு விட்டதாக ஒரு கற்பனை இன்றைக்குப் பேசப்படுகிறது. தமிழ்நாடு எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் தொழில் அமைதியில் சிறந்திருக்கிறது என்று பெருமையுடன் பேசிக் கொண்டோம். அது கண்டு மனம் பொறுத சிலர் தமிழ் நாட்டிலும் தொழில் அமைதி இல்லை ; தொழில் அமளி இருக்கிறது என்று நிரூபித்தாக வேண்டும் என்கிற முயற்சியிலே ஈடுபட்டார்கள். அதற்கு அரசின் சார்பில்

நாம் எந்த வகையிலும் பொறுப்பானவர்கள் அல்ல என்பதை அனைவரும் நன்றாக உணருவார்கள். எந்த அளவுக்கு வளைந்து கொடுக்க வேண்டுமோ—அந்த அளவுக்கு வளைந்து கொடுத்து, இந்த அரசு தொழிலாளர்கள் பிரச்சினை ஆனாலும் மற்றவர்கள் பிரச்சினையானாலும் அணுகியிருக்கிறது.

நண்பர் ஆறுமுகசாமி கூடச் சொன்னார்—நீங்கள் முன்னால் முடிக்க வேண்டிய பிரச்சினையைத் தள்ளிப் போட்டுப் பின்னால் பிரச்சினைகளைப் பெரியதாக ஆக்கிவிடுகிறீர்கள் என்று. அவருக்குத் தொழிற் சங்கத்தில் ஈடுபாடு உண்டு.

ஒரு கோரிக்கையை எழுப்புகிற நேரத்திலேயே அந்தத் தொழிற் சங்கத் தலைவருக்கு அது முழுவதும் நிறைவேறாது என்பது தெரியும். பதினைந்து ரூபாய் என்று கோரிக்கை வைத்தால்—பதினைந்து ரூபாய் என்று வைக்கும்பொழுதே பத்து ரூபாய்க்கு ஒப்புக் கொள்ளலாம் என்று வரையறுத்துக் கொண்டுதான் பதினைந்து ரூபாய் என்று எழுப்புவார்கள்.

அதே நேரத்தில்—இடையிலிருந்து பேசுகிற அரசானாலும் அல்லது மத்தியஸ்தர்களானாலும், பத்து ரூபாய் என்று சொல்லிவிட்டால் அவர்கள் பதினைந்தில் நிற்பார்கள் என்று தெரிந்து கொண்டு அவர்கள் ஐந்திலிருந்து ஆரம்பிப்பார்கள்.

இதுதான் தகராறுக்குக் காரணம்.

இது இன்று நேற்றல்ல, தொழிற்சங்க வரலாற்றிலே நீண்ட காலமாக இருந்து வருகிற உண்மையாகும்.

இந்த ஐந்து, நாலு நாள் பேசிய பிறகு, பத்திலே போய் நிற்கும். பதினைந்து, நாலு நாள் பேசிய பிறகு பத்திலே வந்து நிற்கும்.

இதற்கிடையில்தான் போராட்டம், கிளர்ச்சி, இவைகள் நடந்தாக வேண்டும். இவை நடந்தால்தான் சில தொழிற் சங்கங்கள் வாழ முடியும் என்று சில தொழிற் சங்கத் தலைவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்கிற நிலைமையில்லை.

பட்டதாரி ஆசிரியர்கள் பிரச்சினை

பட்டதாரி ஆசிரியர்கள் பிரச்சினையை எடுத்துக் கொள்வோமே, நான் அப்போதே சொன்னேன்.

நண்பர் ஈசுவரமூர்த்தி என்னைச் சந்தித்து, நள்ளிரவு பன்னிரண்டு, பன்னிரண்டரை வரை பேசிவிட்டு மிக்க அனுதாபப்பட்டார்கள்.

ஐயோ—இவ்வளவு நேரம் விழித்திருக்கிறீர்களே! இதற்கு மேல்தானே கட்டுரை எழுதுகிறீர்கள்? என்றெல்லாம் அனுதாபத்தோடு சொன்னார். ஆனால் அந்த அனுதாபம் வீட்டை விட்டு வெளியேறியதும் அரசியலாக அல்லவா மாறிவிடுகிறது?

திரு.ஈசுவரமூர்த்தி: தலைவர் அவர்களே! 'நாளை நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவீர்கள்; நீங்கள் உங்கள் மனச்சான்றின் அடிப்படையிலே பேசுவீர்கள்: நான் அதற்குப் பதில் சொல்ல இருக்கிறேன். நானும் நிச்சயமாக மனச்சான்றின் அடிப்படையிலே பதில் சொல்வேன்' என்று அவர்கள் எச்சரித்திருந்தார்கள். அதே அடிப்படையிலே நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தேன். நான் பேசுவதை மிகவும் எச்சரிக்கையாகப் பேச வேண்டும் என்றே பேச வேண்டியதை எழுதி வைத்திருந்தேன். ஏனென்றால், நிச்சயமாக முதல்வர் அவர்கள் தமது சொல்லாற்றலாலும், அவர் வைத்திருக்கிற பல திறமைகளினாலும் என்னை வென்று விடுவார் என்ற அச்சத்தினாலுமே நான் எழுதிக் கொண்டு வந்திருந்தேன். அன்று நான் சொன்னேன்; நிச்சயமாகப் பட்டதாரி ஆசிரியர்களைப் போராட்டத்துக்குத் தூண்டும் கடைசி மனிதனாக நான் இருப்பேன். அதே சமயத்தில், பட்டதாரி ஆசிரியர்களின் உரிமைகளை விட்டுக் கொடுப்பதிலும் நான் இறுதி வரை போராடுவேன். ஆகவே, அவர்களோடு நின்று போராட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஆகவே, நான் போராடியதும், அதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளும், முதல்வரின் கரங்களைப் பலப்படுத்துவதாக அமைய வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்த்தேன்; அந்த அடிப்படையிலே செய்தேன்.

முதல்வர்: நாம் ரகசியமாகப் பேசிக் கொண்டதையெல்லாம் இப்படிச் சொல்லக் கூடாது.

நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நண்பர் ஆறுமுக சாமிக்குச் சொல்கிறேன். ஒவ்வொன்றையும் வளர்த்து விடுகிறேன் என்று சொன்னார்களே அதற்குச் சொல்கிறேன்.

மூதல் நாள் நண்பர் ஈசுவரமூர்த்தியோடு பேசிய பிறகு, மறுநாள் பட்டதாரி ஆசிரியர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள்.

உண்ணாவிரதம் இருந்தவர்கள் மன்றோ சிலையிலிருந்து புறப்பட்டுத் திடீரென்று கோட்டைக்கு ஊர்வலமாக வந்தார்கள்.

தடையுத்தரவு இருந்த காரணத்தால் அவர்கள் தடுக்கப் பட்டார்கள்.

சிலபேர் வந்து முதலமைச்சரைப் பார்க்கலாம் என்று நான் அதிகாரிகளிடத்திலே சொல்லி அனுப்பினேன்.

ஆனால் அவர்கள் வரவில்லை. கைது செய்யப்பட்டார் கள்.

கைது செய்யப்பட்ட அன்று மாலையிலேயே அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள். இதற்கிடையில், கைது செய்யப்பட்ட நகவலை மாத்திரம் மதுரையிலேயுள்ள சில பத்திரிகைகள் வெளியிட்டன. அவர்கள் விடுதலை ஆனதை வெளியிடவில்லை; ஏனென்றால் அந்தப் பத்திரிகைகளுக்கு இரண்டாவது ஒரு செய்தி வேண்டும். அதற்காகக் கைதா னதை மாத்திரம் போட்டார்கள்.

அதை வைத்து, அங்குள்ள பட்டதாரி ஆசிரியர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்ய—

மாணவர்கள் பஸ் போன்ற வாகனங்கள் மீது கல் போன்றவைகளை வாரி இறைக்க — சேதங்கள் ஏற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதற்கும் மறுநாள்—உண்ணாவிரதத்தைத் திரு ஈசுவர மூர்த்தி தலைமையில் மறுபடியும் மேற்கொண்டார்கள்.

முதல்நாள் மேலவை உறுப்பினர் திரு. முத்துசாமி தலைமையில் உண்ணாவிரதம் நடைபெற்று அவர்கள் கைதாகி விடுதலையானார்கள்.

மறுநாள் திரு. ஈசுவரமூர்த்தி தலைமையில் உண்ணாவிரதம் நடைபெற்றது. நான் திரு. முத்துசாமியுடனும், மற்றவர் களுடனும் பேசிக்கொண்டிருக்கிறேன்.

சொல்லும் செயலும்!

அப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது நான் அவர் களிடத்திலே கேட்டுக் கொண்டேன். நாம் பேசுகிற வரையில் அவர்கள் அங்கேயே இருக்கலாம்—என்று சொன் னேன். அவர்களும் சொன்னார்கள். சட்டத்தை அவர்கள் மீற மாட்டார்கள். மன்றோ சிலைக்கு அருகிலேதான் இருப்பார்கள் என்றும் சொன்னார்கள்.

பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு அரைமணி நேரத்தில் 'அவர்கள் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்' என்ற செய்தி வந்தது.



நான் திரு. முத்துசாமியிடத்திலே கேட்டேன். 'நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்; இன்னும் பேச்சுவார்த்தை முடியவில்லை அதற்குள்ளே அவர்கள் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்களே! என்ன காரணம்?' என்று.

''இருக்காது; நிச்சயம் வரமாட்டார்கள், நாங்கள் சொல்லி அனுப்புகிறோம்''—என்று அவர்கள் சொன்னார்கள்.

எனக்கு ஓர் உண்மை புரிகிறது.

முதல் நாள் அவர் போய்விட்டார்; மறுநாள் நாமும் எப்படியாவது போகவேண்டும் என்ற நிலை அவருக்கு. (சிரிப்பு).

திரு. ஈசுவரமூர்த்தி: மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பழியை என்மீது போடமாட்டார்கள் என்று எண்ணியிருந்தேன். நிச்சயம் நம்புகிறேன். அதற்காகத் தான் வெளியிடக்கூடாது என்றிருந்த தந்திரத்தை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. போராட்டத்தைப் பற்றி நான் நிச்சயமாகக் கூறலாம்—சுமுகமாக முடிந்திருக்கிற காரணத்தால். உண்மையிலேயே நான் வைத்திருந்த தந்திரம் என்னவென்றால், மறுநாள் மாலை உண்ணாவிரதம் இருப்பது; 5 மணிக்குக் கோட்டையை நோக்கிப் புறப்படுவது, என்னுடைய தந்திரம் அப்போது கைது செய்யப்பட்டால், இரவு என்ன செய்வார்கள்? நிச்சயமாக, இரவில் வைத்திருக்கக்கூடிய சூழ்நிலை இருந்தால் மக்களின் அனுதாபத்தைப் பெறக்கூடும் என்று திட்டமிட்டிருந்தேன். அப்போது எனக்கு ஒரு கட்டளை வந்தது. தளபதி என்ற முறையில், 'காத்திருங்கள்' என்ற செய்தி வருகிறது. போலீஸ்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று வதந்தி. எழுத்து மூலமாக ஒரு கட்டத்தில் கடிதம் வந்தது. 'Negotiations are going on; Please dont violate the instruction'

அது என்னகாரணமோ, அந்தக் கடிதம் கிடைக்கவும், நான் அந்த இறுதிக் கட்டத்தை அடையவும் சரியாக இருந்தது.

திட்டமிட்டு, சட்டத்தை மீற வேண்டும் என்று செய்த ஒரு நடவடிக்கை அல்ல. அப்படிச் செய்து விடுவதுதான் ஒரு உச்ச கட்டத் தந்திரம் என்று நினைத்துச் செய்து விட்டேன். கைதாகவேண்டும், புகழ் பெற வேண்டும் என்றல்ல. கைதாஞல்தான் எங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும் என்ற கட்டத்தில் நாங்கள் நேரடியாகக் கோட்டையை நோக்கி நடந்தோம். இன்னெரு காரணம், உட்கார்ந்திருந்தோம் என்று முதலமைச்சர்-அவர்கள் சொன்னர்கள். உண்ணு விரதம் இருந்தார்கள். கோட்டையை நோக்கிப் புறப்பட்டார்கள் என்று சொன்னர்கள். நான் தெளிவாகச் சொன்னேன். யாரும் உட்காராதீர்கள், நின்று கொண்டே இருங்கள். நாம் எங்கே செல்கிறேம் என்று போலீஸ்காரர்கள் கேட்டால், முடிவு செய்யவில்லே, கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேம்; அங்கே உண்ணாவிரதம் இருக்கப் போகிறேம் என்று சொல்லி வந்தேன். இந்த இழிசொல், இயக்கத்திற்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக இந்த விளக்கத்தைச் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் நான் சட்டத்தை மதிக்க விரும்புகிறவன் என்பதை உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஒரு சான்று

முதல்வர்: இவ்வளவு விளக்கம் அளித்ததற்காக நன்றி தெரிவித்துகொள்கிறேன். நீங்கள் என்ன செய்தீர்கள், எப்படிக் கிளர்ச்சி செய்தீர்கள் என்பதற்காக இதைச் சொல்லவில்லே. அல்லது யாரையும் மனம் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடும் இதைச்சொல்லவில்லே.

அரசு இதிலெல்லாம் முன்னரே நடவடிக்கை எடுக்க வில்லேயே என்று கூறப்பட்ட குற்றச்சாட்டுகளே மறுப்பதற்காகவே இதைச்சொன்னேன்.

சில நேரங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிற சமயத்திலேயே இதுபோன்ற விளேவுகள் நேர்ந்து விடுகின்றன என்ற சான்றுகளில் ஒன்றுகத்தான் இதைச் சொன்னேனே தவிர வேறில்லே.

நம்முடைய மாநில வளர்ச்சிக்குத் திட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டுத் தன்னுடைய பணியினே அது வேகமாக நிறைவேற்றி வருகிறது.

அதிலே பதினெறுக்கு மேற்பட்ட துணேக்குழுக்களும் இன்றைக்கு உருவாக்கப்பட்டு—அந்தத் துணேக் குழுக்கள், கிராமப்புற மேம்பாடு, நமது பொருளாதார வளர்ச்சி நம்முடைய சமூக வசதிகள், வேளாண்மைத்துறை

வளர்ச்சி—இது போன்ற பல்வேறு தலைப்புகளிலே அவைகளை ஆராய்வதற்கான குழுக்கள் நிறுவப்பட்டு அதனுடைய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதனுடைய முதலாவது வரைவினை மே திங்கள் முதல் நாள் அன்று அவர்கள் அளிக்க இருக்கின்றார்கள்.

மே முதல் நாள் அளிக்கின்ற அந்த வரைவினைச் சட்டப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையிலும் தொடர்ந்து நடைபெறுகின்ற கூட்டங்களில் நாம் விவாதிக்கலாம் என்று கருதுகிறேன்.

மாநிலத் திட்டக்குழு நல்ல முறையிலே பணியாற்றி 10 ஆண்டுக்காலத்திற்கான திட்டங்களை இந்த நாட்டின் இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சி கருதி நிறைவேற்றுமேயானால், அவைகளையெல்லாம் நாம் வேகமாகச் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளையெல்லாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவே, முதல் வரைவினை இந்த மாமன்றம் ஏற்றுத் தனது கருத்துக்களையெல்லாம் தெரிவிக்கும் என்ற நம்பிக்கை படைத்தவனாக இருக்கின்றேன்.

மாநிலத்திலே பத்தாண்டுக்காலம், இருபதாண்டுக்காலம் என்று திட்டங்கள் போடுவதால் மாத்திரம்—நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல, ஜன்நாயக ரீதியிலே ஓர் அரசை நடத்திக் கொண்டு போவதால் மாத்திரம்—எந்தெந்த இனங்களுக்கு வரிகளைப் போடலாம் என்கின்ற அந்தந்தக் கணக்குகளைப் போட்டுக் கொண்டு போவதால் மாத்திரம் ஒரு மாநிலத்தின் வளர்ச்சி அமைந்து விடாது என்பதை நாங்கள் நன்றாக உணர்வோம்.

அந்த அடிப்படையிலேதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்கிற கருத்தினை நான் நிதி நிலை அறிக்கையிலேயே—கடந்த நிதிநிலை அறிக்கைகளையெல்லாம்விட கொஞ்சம் அதிகமாகவும், அழுத்தம் திருத்தமாகவும் தெரிவித்திருக்கின்றேன். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசியிருக்கின்றார்கள்.

சுதந்திராவின் வரவேற்பு

சுதந்திராக்கட்சியைச் சேர்ந்த திரு சாமிஞானதன் அவர்கள் 'மாநில சுயாட்சி' என்ற சொல்லைப் பெரிதும் வரவேற்றார். அதை யார் யார் கையாண்டார்கள், மகாத்மா காந்தி அடிகளும், வேறு பல மேதைகளும் கையாண்டிருக்கின்ற உதாரணங்களையெல்லாம் எடுத்துக் காட்டி மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற்றுச் சுயாட்சித் தன்மையோடு விளங்கிட வேண்டுமென்று எடுத்துக் காட்டினார்கள்.

நண்பர் திரு அய்யாசாமி பேசுகையில்—மாநில சுயாட்சி ஏற்கெனவேயே இருக்கிறது; பிறகு ஏன் கேட்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'முழு மாநில சுயாட்சி' என்று போடப்பட்டிருக்கிறதே என்று குறிப்பிட்டார்கள். மாநில சுயாட்சி வேண்டுமென்று நாம் கேட்பதாகச் சொன்னார்கள்.

மாநில சுயாட்சி ஏற்கெனவே இருந்தாலும் அது முழுமையானதாக இல்லை. பெயரளவிலேயே இருக்கிறது. அது உண்மைத் தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதனால்தான் மாநில சுயாட்சி தேவை என்று நாம் கூறுகிறோம்.

ஏற்கெனவே கொடுத்துவிட்டோமே என்று சொன்னால், கொடுத்ததாக ஆகாது. முழு உரிமைகள் இல்லாத—சுயாட்சித்தன்மை பொருந்தாத—அதிகாரங்கள் பரவலாக இல்லாத—மாநில சுயாட்சி என்கின்ற வெறும் பெயர் மாத்திரம் இருந்தால் போதாது.

பெயரை மாற்றிக் கொள்ளுங்களேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு சொன்னார். பெயரிலே ஒன்றுமில்லை. அந்தப் பெயரைச் சொல்வதற்குக் காரணம், அதை ஒரு குறியீட்டுச் சொல்லாக நாம் இன்றைக்குப் பயன்படுத்துகின்றோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நண்பர் ஆறுமுக சாமி அவர்களும், சிலபேர் இதைப் பிரிவினை வாதத்தோடு நோக்குவதாகச் சொன்னார்கள்.

மாநில சுயாட்சி கேட்கிற யாரும் அதைப் பிரிவினை எண்ணத்தோடு நோக்கவில்லை; அது வேண்டாமென்று சொல்லுகிறவர்கள்தான் பிரிவினை எண்ணத்தோடு அதை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ, அமெரிக்காவிலே இருக்கிற நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையிலே எழுதிவிட்டார்களென்றால், அதற்கு யார் பொறுப்பாளி?

அமெரிக்காவிலே இருக்கின்ற பத்திரிகை இந்தியாவுக்கு அனுசரணையாக இருக்குமென்று யாரும் கருத முடியாது. இந்தியாவில் அது குழப்பங்கள் வராதா என்ற எண்ணத்தோடு அதனை எழுதுகிறது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் போர் நடந்த நேரத்தில் எழுதவில்லையா? அமெரிக்காவிலே உள்ள பத்திரிகைகளையெல்லாம் நான் அமெரிக்காவிலே இருந்தே பார்த்தேன்.

சில பத்திரிகைகள் இந்தியாவை ஆதரித்து எழுதின. சில பத்திரிகைகள் இந்தியாவை எதிர்த்து எழுதியிருக்கின்றன.

அவர்கள் நமக்கு விரோதிகள் என்று ஆகிவிட்ட பிறகு—நம்மைப்பற்றி நமது விரோதிகள் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருப்பது நல்லதல்ல.

யாரோ பிரிவினை வாதிகள் சொல்வதற்காக—மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் பிரிவினை வாதமென்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாதென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்றமுறை கூட்டத்திலேயே நான் சொன்னேன். தமிழரசுக் கழகத்தினுடைய தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி. அவர்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களைப் போன்றவர்களெல்லாம் இன்றைக்கு மாநில சுயாட்சிக் கோரிக்கையை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகின்ற நேரத்தில் அவர்களெல்லாம் ஏற்கெனவே பிரிவினை கேட்ட அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்களா?

நீங்கள் ஏற்கெனவே பிரிவினை கேட்டவர்கள். எனவே சந்தேகப்படுகிறோம் என்று சொன்னார். திரு அய்யாசாமியும், அப்போது எங்களுடன் சேர்ந்துதான் கேட்டார். ஆனால் இப்போது நாம் விட்டு விட்டோம் அந்தக் கொள்கையை. அது தேவை யில்லை. நாட்டுக்கு - நாட்டுப் பாதுகாப்புக்கு உகந்த தல்ல என்று ஒருமனதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே முடிவு செய்து அக்கோரிக்கை விடப்பட்டு விட்டது.

அதற்குப் பிறகும் ஏற்கெனவே கேட்டீர்களே என்று கேட்கத் தொடங்கினால் ஒவ்வொரு கொள்கையையும் ஒருவர் சொல்கிற நேரத்தில் அவர்களுடைய பழைய வரலாறுகளையெல்லாம் கணக்கெடுத்துப் பார்த்து நாம் அந்தப் பிரச்சினையை ஆராயக்கூடாது—அது சரியல்ல.

விரேந்திர கோரிக்கை

விரேந்திர பட்டீல் சிண்டிகேட் காங்கிரசினுடைய மைசூர் மாநிலத்தின் தலைவர். அவர் மைசூர் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி (ஆர்கனைசேஷன் காங்கிரஸ்)—உங்க

ஞடைய காங்கிரஸ். அந்தக் கட்சி வெளியிட்டிருக்கிற தேர்தல் பிரகடனத்தில் 11-வது திட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? State Autonomy என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். 'Will fight in a determined manner for Greater Autonomy for the State and against step motherly treatment by the centre' என்று கேட்டிருக்கிறார்கள்.

நான் நேற்றுச் சட்டப் பேரவையிலே திரும்பத் திரும்பப் படித்தேன்—Greater, Autonomy, Greater Autonomy என்று.

இதைச் சில பத்திரிகைகளில் இன்று அதிக அதிகாரங்கள் என்று வெளியிட்டிருக்கிறார்கள்;

''கிரேட்டர் ஆட்டானமி பார்-தி-ஸ்டேட்'' என்று இருப்பது மாநிலத்துக்குப் பரந்து விரிந்த சுயாட்சி தேவை என்று அவர்கள் போட்டிருக்கிறார்கள்.

நாம் 'முழு சுயாட்சி' என்று சொன்னோம். அவர்கள் 'கிரேட்டர் ஆட்டானமி' 'ஃபுல் ஆட்டானமி' என்று கேட்டிருக்கிறார்கள்.

இந்த சிண்டிகேட் காங்கிரஸ் மைசூரிலே வெற்றிபெற வேண்டுமென்று பெருந்தலைவர் காமராசர் அங்கு போகாவிட்டாலும் அறிக்கை விடவில்லையா? (சிரிப்பு) என்று நான் கேட்கிறேன். கடைசி நேரத்தில் காமராசர் அவர்கள் இந்தியா முழுவதும் இருக்கிற சிண்டிகேட் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள் என்று சொன்னாரே—

'கிரேட்டர் ஸ்டேட் அட்டானமி' கேட்கின்ற வீரேந்திர பட்டீலுக்கும் சேர்த்துத்தான் அவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

திரு. கே. ராசாராம் : அதில் தவறு இருப்பதாக இப்போதும் என் மனத்துக்குப் படவில்லை. மாநில சுயாட்சி என்கிற வார்த்தைக்கு ஏன் தப்பான அர்த்தம் வருகிறது என்று எனக்குப் புரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திராவிடநாடு கேட்டவர்கள், இன்று மாநில சுயாட்சி வேண்டும் என்று சொல்லும்போது, சில பேர்—முதலமைச்சர் உட்கார்ந்திருக்கும்போது—ஒருகால் இந்த மாநில சுயாட்சி கிடைக்கவில்லையென்றால்—நாட்டுப் பிரிவினைக்கு வேலை செய்வோம்—அதற்குப் போராடும்படி ஆகிவிடும் என்று பேசியதால் தான் அமெரிக்காவிலிருந்து அந்தச் செய்தி வந்து குழப்பம் ஏற்படுகிறது.

முதல்வர்: அப்படிப் பேசியதை யாரும் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்து கேட்டு எழுதி யனுப்பவில்லை. இங்கிருக்கின்ற சில பேர் விஷமத்தனமாக 'பிரிவினை கேட்கிறார்கள்' என்று எழுதி அனுப்பினார்கள். அதைத்தான் அவர்கள் போட்டிருக்கிறார்கள்.

நண்பர் ஆசைத்தம்பி பேசும்போது நாங்களெல்லாம் மேடையில் இருந்தோம். மாநில சுயாட்சியில் ராணுவம் கூடக் கேட்கலாம் என்று அவர் சொன்னார்.

'கழகப் பொதுச் செயலாளர் நாவலர் சொன்னார்கள்: "ஆசைத்தம்பி சொன்னது மாநில சுயாட்சியில் எதை எதைக் கேட்கலாம் என்று.'

நாங்கள் கழகத் தலைவர்கள் சொன்னது—கழகம் மாநில சுயாட்சியில் எதை எதைக் கேட்கிறது என்பதை.

இவ்வளவு விளக்கம் சொன்ன பிறகு, இவைகளையெல்லாம் விட்டு விட்டு இதை மாத்திரம் சொன்னால் என்ன அர்த்தம்?

நாங்கள் (ஸ்டேட் ஆட்டானமி) கேட்கிறோம் என்று கூறுகிறீர்கள். மைசூரிலே வீரேந்திர பட்டீல்—''கிரேட்டர் ஆட்டானமி ஃபார்தி ஸ்டேட்'' கேட்கிறார். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். அவரைப் பற்றிச் சந்தேகப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை ஆதரிக்கிறீர்கள், எங்களை எதிர்க்கிறீர்கள்.

தி.மு. கழகம் தனி நாடு வேண்டும் என்று ஒரு காலத்திலே சொன்ன காரணத்தால் சந்தேகப்படுவதாகச் சொல்கிறார்கள்.

இதே வீரேந்திர பட்டீல் முதல்வராக இருந்த நேரத்தில், 1970-ல் டெல்லிப் பட்டணத்திலே பேசிய ஒரு கூட்டத்தில் சொன்னார்:

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை மத்திய அரசு ஒழுங்காகத் தராவிட்டால், டெல்லியிலே இருக்கிற 'மைசூர் பவன்', 'மெட்ராஸ் பவன்' என்றெல்லாம் இந்த மாநிலங்களின் விடுதிகள் இருக்கின்றனவே—தங்கும் விடுதிகள்—அவையெல்லாம் மாநிலங்களின் தூதுவராலயமாக மாறிவிடும் என்று சொன்னார்.

தூதுவராலயங்கள் என்றால் என்ன?

தனித் தனியாக நாடுகள் ஆகிவிடும்; அவற்றினுடைய தூதுவராலயங்கள்தான் அங்கே இருக்கும் என்று சொன்னார்

அவ்வளவு வேகமாக, ஐயனே! நாங்கள் என்றைக்கும்

சொன்னது கிடையாது. அவ்வளவு வேகமாக அவர் சொன்னார்.

(சிரிப்பு)

திரு. கே. ராஜாராம் : எவ்வளவு வேகமாய்ப் பேசினாலும் அவர் மீது சந்தேகப்படமாட்டேன் என்கிறார்கள்.

யானையைக் காணும் குருடர்கள்.... —

முதல்வர்: நீங்கள் எங்களைத் தேவையில்லாமல் சந்தேகப் படுகிறீர்களே—புரியவில்லையோ? தெரியவில்லையோ?

யானையைப் பார்க்காதவர்கள், யானையின் காதைப் பார்த்து முறம் என்றும், அதனுடைய காலைப் பிடித்து இதென்ன உரல் என்றும், அதனுடைய தந்தத்தைப் பிடித்து உலக்கை என்றும், இப்படி ஒவ்வொருவரும் யானை உலக்கை தான்; யானை முறந்தான்; யானை உரல்தான் என்று முடிவு கட்டுவது எப்படித் தவறோ அதைப் போலத் தான், தி.மு. கழகம் கேட்கின்ற மாநில சுயாட்சி–பிரிவினை வாதமாக இருக்குமோ? இது வங்காள தேச முஜிபிர் ரகுமான் பாணி என்றெல்லாம் பேசுவதில் பயனில்லை.

எனக்கே வெட்கமாக இருக்கிறது. முஜிபுர் ரகுமானின் படத்தையும் என்னுடைய படத்தையும் சேர்த்துப்போட்டு விட்டார்களாம். அதில் என்ன தவறு?

முஜிபுர் ரகுமான் என்ன பாவியா? முஜிபுர் ரகுமான் படம் இருக்கக்கூடாதா? முஜிபுர் ரகுமான் என்ன துரோகியா?

முஜிபிர் ரகுமான் பல கொள்கைகளுக்கு அதிபதி—பல கோரிக்கைகளுக்குத் தலைவன்.

அந்த முஜிபிர் ரகுமான் அளவுக்கு நான் இருக்கிறேன் என்று நான் கூறிக்கொள்ளவில்லை.

என் கட்சியிலுள்ள சில பேருக்கு அப்படி ஒரு ஆசை. ஏதோ முஜிபுர் ரகுமான் என்று போடவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இன்னும் சொல்லுகிறேன் இந்த மன்றத்தின் மூலமாக, அந்த நண்பர்களுக்கு! இதுபோன்ற காரியங்களில் ஈடுபட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் ஒன்று—

தமிழ்நாட்டு பொன்னப்பா என்று அண்ணாவைச் சொன்ன காரணத்தினால், இவர் பொன்னப்பாவா என்று கேட்க வில்லையா? கேட்டவர்கள் தான்!

இவர் முஜிபுர் ரகுமான் என்றால் யார் யாகியாகான்? யார் பூட்டோ என்று கேட்கிறார்கள். அப்படியானால்,

தமிழ் நாட்டில் காமராசரைக் காலா காந்தி என்று அழைத்தோமே—அப்போது யார் கோட்சே? என்று நான் கேட்கிறேன்.

(சிரிப்பு)

ஒருவரை அன்பாக ஒரு பெயரிட்டு அழைத்தால், உடனே யார் கோட்சே என்று கேட்பது? அதைப்போல ஒருவரை அன்பாக முஜிபுர் ரகுமான் என்று அழைத்தால்—உடனே? யார் யாகியாகான்? யார் பூட்டோ? என்று கேட்டு விடுவது?

தந்தையும்—தாயுமாம்!

என்னுடைய படத்துடன் முஜிபுர் ரகுமான் படம் இருந்ததற்கு வருத்தப்படுகிறார்களே—அவர்கள் சார்புடைய பிளிட்ஸ் பத்திரிகையில் முஜிபுர் ரகுமான் படத்தையும் இந்திரா காந்தி படத்தையும் போட்டு என்ன எழுதியிருக்கிறார்கள் தெரியுமா? (Father and mother of Bangala Liberation) ''வங்காள விடுதலையின் தந்தையும் தாயும் இவர்கள்'' என்று.

இப்படி எழுதியிருக்கிறார்கள், பிளிட்ஸ் பத்திரிகையில்.

நம்முடைய பிரதமரின் படத்தையும், முஜிபுர் ரகுமானின் படத்தையும் போட்டு அர்த்தம் புரியாமலோ, என்னவோ அவர்கள் இப்படி ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு. ஆறுமுகசாமி. இருந்தாலும் கூட அதைத் தவறாக நோக்கத்திலே நாம் எடுத்து கொள்ளமாட்டோம். ஏனென்றால், முஜிபுர் ரகுமானையும், பிரதமரையும் அது ஆதரித்தே வெளியிடக்கூடிய பத்திரிகை. ஆனால் எதிர்க் கருத்துள்ளவர்கள் வெளியிடும்பொழுது—அது தப்பான சர்ச்சைகளுக்கு இடமாகிறது.

மாநில சுயாட்சி கொடுக்காவிட்டால் நாங்கள் பிரிந்து போவதைப்பற்றி எண்ணுவோம் என்று சேர்த்துச் சொல்லுவதனால் இங்கே தகராறு வருகிறது.

முதல்வர் : தாங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்று புரிகிறது. ஆனால் நான் சொல்ல வந்தது அதுவல்ல.

(சிரிப்பு)

இப்படித் தவருன அர்த்தம் கற்பிக்கக்கூடாது என்கிற இந்த வார்த்தையை, என்னைப் பற்றி ஒரு போஸ்டர் போட்ட போது பலபேர் தவருகச்சொன்னர்களே, அப்போது திரு. ஆறுமுகசாமி சொல்லியிருந்தால் நான் மகிழ்ந்திருப்பேன்.

திரு. ஆறுமுகசாமி : பல கூட்டங்களிலே நான் அதைக் கண்டித்திருக்கிறேன்.

முதல்வர் : கண்டித்திருந்தால், நன்றி. அதையும் பல பேர் புரிந்து கொள்ளாமல் இருந்ததற்காக வருந்துகிறேன்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இரண்டு படங்களை இணைத்துப் போட்டு விடுவதனலேயே ஏதோ ஒரு தவருன நோக்கத்தோடு அதைப் போடுகிறேும் என்று கருதக் கூடாது. பிளிட்ஸ் பத்திரிகை கூட ஒரு அன்பின் காரணமாகப் போட்டிருக்கிறது என்கிறார்கள். எப்படி திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்கள் அன்பின் காரணமாக இங்கு இரண்டு படத்தையும் சேர்த்துப் போட்டார்களோ, அதைப் போலவே, அங்கு அன்பின்காரணமாகத் தான் பிளிட்ஸ் பத்திரிகையிலும் போட்டிருக்கக்கூடும்.

நான் அதைக் குறைகூறவில்லை. பிளிட்ஸ் பற்றியெல்லாம் ஒன்றும் சொல்லாதவர்கள் இதைப்பற்றிச் சொல்கிறார்களே என்கிற அந்த வேதனையில்தான் சொன்னேன்.

மாநில சுயாட்சி கேட்பது ஏதோ தமிழ்நாட்டிலே உள்ள இந்த அரசு, அல்லது அமைச்சர்கள், அல்லது ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், மேலும் அதிக ஊழல்களைச் செய்வதற்காகத்தான் கேட்கிறார்கள் என்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் எழுதுகிறார்கள்.

அது பல பத்திரிகைகளிலே வந்திருக்கிறது.

இலங்கைக்கு ஒருவாதம், இந்தியாவுக்கு ஒரு வாதமா ?

ஆனல் அதே இராஜாஜி அவர்கள், நான் ஏற்கெனவே இம்மாமன்றத்தில் பல குறிப்புகளைப் படித்துக் காட்டினேன், இலங்கையிலே நடந்த கிளர்ச்சிக்கு 1958-ல் ஓர் அறிக்கை தந்தார். அது இலங்கைமலர் ஒன்றில் வெளியிடப்பட்டது.

'' வானேர் தாவும் தேன்மலரோ ? '' என்கிற தலைப்பில் அந்தக் கட்டுரை வெளியிடப்பட்டது.

அதிலே இராஜாஜி சொல்கிறார்

(செப்டம்பர்—1958—லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தின் தலைமையுரை. அதிலே சொல்கிறார்)

''அமைதியான அகிம்சைப் போராட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். தமிழர் பெரும்பாலாக வாழும் பகுதிகளுக்குத் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட சுயாட்சி அளிக்க வேண்டும்.

''இலங்கைத் தமிழர்கள் கேட்பது தனி ராஜ்ஜியம் அல்ல. பிரதேச சுயாட்சியை அவர்கள் கோருகிறார்கள். எனவே, சமஷ்டி அரசு முறையின் கீழ் இலங்கைத் தமிழர்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும்.''

ஆக—சுயாட்சி கேட்பது—பிரதேச சுயாட்சி கேட்பது—தனி ராஜ்ஜிய உரிமை அல்ல என்று திட்டவட்டமாக அன்று சொன்ன இராஜாஜி அவர்கள்—

இலங்கைக்கு ஒரு வாதம்; இந்தியாவுக்கு ஒரு வாதம் என்று வைத்துக் கொள்வது பொருத்தமுடையது அல்ல.

ஏதாவது கேட்டால், மாநில சுயாட்சியை எதிர்த்துப் பேசுகின்ற யாராலுலும், காமராசராலுலும் அல்லது இராஜாஜியாலுலும் அல்லது வேறு கட்சிக்காரர்களாலுலும் மாநில சுயாட்சி கேட்பது அதிகமாக லஞ்சத்தை, ஊழலை வளர்ப்பதற்கு என்கின்றனர்.

இன்றைக்கு லஞ்சம், ஊழல் என்று பேசுவது ஒரு 'மேனியா'வாக ஆகிவிட்டது. எல்லாக்கூட்டங்களிலும் பேசப்படுகிறது. அதிலும்,

பெருந்தலைவர் காமராசரிடத்தில் நான் இப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் எதிர்பார்க்கவில்லை.

இவைகளெல்லாம் பத்திரிகைகளிலே வருகிறதோ இல்லையோ, எதிர்க்கட்சித் தலைவராவது போய்ச் சொல்லுவார் என்றுதான் சொல்கிறேன்.

நான் அவ்வளவு பெரிய மனிதரிடத்தில் இவ்வளவு பெரிய வார்த்தைகளையெல்லாம் எதிர்பார்க்கவில்லை.

'கருணாநிதி ஒரு கடைந்தெடுத்த கோழை' என்றுகூடச் சொல்லியிருக்கிறார். இது பத்திரிகைகளிலே விளம்பு கட்டிப் போடப்பட்டது; அதையும் கூடப் பார்த்தேன்.

'கருணாநிதி ஆத்திரக்காரன்; அவசரக்காரன்' என்று போட்டிருந்தால் கூட வருத்தப்பட்டிருப்பேன். கோழை என்று போட்டதிலே நான் உள்ளபடியே வருத்தப்படவில்லை.

அண்ணு கூட அடிக்கடி 'நான்தான் தி.மு. கழகத்திலிருக் கிற கடைசிக் கோழை'—என்று தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வார்கள்.

நான் இப்போது என்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ளா விட்டாலும், காமராசராவது என்னைக் கோழை என்று கூறி னரே என்று சந்தோஷப்பட்டேனேயல்லாது சங்கடப்பட வில்லை.

அந்த அளவுக்கு இன்றைக்குக் காமராசர் மேடையிலே வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்.

அதிலே ஒன்றுதான் ஊழல், லஞ்சம் என்ற வார்த்தை.

ஆனால் இன்றைக்கு எங்கு லஞ்சம் இருந்தாலும்—ஊழல் இருந்தாலும்—எந்தத் தவறு இருந்தாலும்—கட்டிக் காட்டி னால், உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங் காது என்றும்—

வேண்டுமானால் வீட்டுக்குக் கூப்பிடுங்கள்; ஓடி வந்து கேட்கிறேன்; என்னிடத்தில் தவறிருந்தால் சொல்லுங்கள் திருத்திக் கொள்கிறேன்: என்றும் பல முறை காமராசருக்கு வேண்டுகோள் விடுத்தாகிவிட்டது.

ஆனால், அவர் திரும்பத் திரும்ப லஞ்சம், ஊழல் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். வட்டச் செயலாளர் வீட்டைப் பார்; மாவட்டச் செயலாளர் வீட்டைப் பார்—இப்படியெல் லாம் ஆளுங் கட்சியைப் பற்றிக் குறை சொல்லப்படுகிறது.

இப்படிச் சொன்னால் ஒவ்வொருவரும் அவருடைய வீட்டைப் பார்த்துக்கொண்டு பேச வேண்டும். தங்களுடைய நிலைமையைத் திரும்பிப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மனிதன் வாழ்க்கையில் முன்னேறவே கூடாதா?

கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டது. அதன் காரணமாக லஞ்சம் பெற்றோ, லஞ்ச லாவண்யங்களில் ஈடுபட்டோ ஊழல் புரிந்தோதான் முன்னேறினர்கள் என்று கருதி விடுவதா?

அப்படிப் பேசினால் அரசியலிலே யாருக்குமே இடமில்லா மல் போய்விடக்கூடும். அரசியல் என்றால் மக்களிடம் ஒரு அருவருப்பு ஏற்பட்டுவிடும்.

அதற்காகத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். தவறு இருந்தால் சொல்லுங்கள்; நான் நடவடிக்கை எடுக்கிறேன். என் மேல் தவறு இருந்தால் சொல்லுங்கள் நான் ராஜினமா செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்!

என்னுடைய மகன் தவறு செய்திருந்தால் சொல்லுங்கள்; என்ன தண்டனை கொடுக்கலாம் என்று நீங்கள் நிர்ணயிக்கிறீர்களோ அந்தத் தண்டனையைத் தர நான் தயாராக இருக்கிறேன்—என்றெல்லாம் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இப்படிப் பலமுறை நான் காமராசருக்கு வேண்டுகோள் விடுத்த பிறகும், லஞ்சம் ஊழல் —லஞ்சம் ஊழல் என்று சொல்கிறார்.

லஞ்சத்துக்கோ—ஊழலுக்கோ நான் வக்காலத்து வாங்கவில்லை.

ஆனால் காமராசர் அவர்கள் பல இடங்களில் வக்காலத்து வாங்கியிருக்கிறார். லஞ்சம் ஊழல் என்று சொல்லப்பட்ட நேரத்திலெல்லாம் வக்காலத்து வாங்கியிருக்கிறார்.

காமராசர் தரும் உவமைகள்

அதிலும் குறிப்பாக ஒரு புத்தகமே போட்டிருக்கிறார்கள், '' காமராசரின் உவமைகள் '' என்று.

காங்கிரஸ் நண்பர்கள் எல்லாரும் வாங்கிப் படிக்க வேண்டும். அந்தப் புத்தகத்தில் காமராசருடைய பேச்சில் 31-ஆம் பக்கத்தில்—அவர் சொல்கிறார் :

'' சுதந்திராக் கட்சிக்காரர்கள் ஊழல் ஊழல் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். குழந்தைகளுக்குத் தாய்—பூச்சாண்டி காட்டி மிரட்டுவதில்லையா அதைப் போல ! குழந்தைகள் அழுதால் 'பூச்சாண்டி வருவான் ; உன்னைத் தூக்கிக் கொண்டு போவான்' என்று தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பயம் காட்டுவதுண்டு. திடீரென்று குழந்தை, 'எங்கேயம்மா! பூச்சாண்டியைக் காட்டு பார்க்கலாம்' என்று கேட்டால், விழிப்பார்கள். பூச்சாண்டியை எங்கிருந்து காட்டுவார்கள் ? காட்ட முடியாதல்லவா ? அதைப்போலத்தான் ஊழல் ஊழல் என்று பேசும் பேர்வழிகள் அதைக் காட்டச் சொன்னால் காட்ட முடியாமல் திகைக்கிறார்கள்.''

—இப்படி ஊழலுக்கு வக்காலத்து வாங்கிக் காமராசர் பல இடங்களிலே பேசியிருக்கிறார்.



''நகரத்தின் நல்ல பகுதிகளையெல்லாம் விட்டுவிட்டு, எங்கோ சாக்கடைக் குழியிலே போய் உட்கார்ந்து கொண்டு நகர் முழுவதும் நாற்றம்—நாற்றம் என்றால் நாம் என்ன செய்வது? அதேபோல் ஊழலிலேயே ஊறிக் குளித்து முழுகிக் கொண்டிருப்பவர்கள், மற்றவர்களைப் பார்த்து ஊழல் என்றால் என்ன செய்வது?''

நான் அவர்களைப் பார்த்துச் சொல்லவில்லை. அவர் மற்றவர்களைப் பார்த்து ஒரு காலத்திலே சொன்னதைத் தான் இங்கே குறிப்பிடுகிறேன்.

இப்படிப் பல நேரங்களிலே அவர் பேசியிருக்கின்றார்.

''அரசாங்க ஊழியரிடம் லஞ்சம் இருக்கிறது, ஒப்புக் கொள்கிறேன். நாட்டில் காணப்படும் லஞ்ச ஊழல்களையெல்லாம் அரசாங்கம் போக்கிவிட முடியாது. பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டும்''—இப்படிச் சொல்லியிருக்கிறார், காமராசர்.

அது மாத்திரமல்ல.

''காங்கிரஸ் அரசாங்கம் வந்தவுடனேயே ஊழல் வந்து புகுந்துவிடவில்லை; அது 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது''—என்று ஊழலுக்கு ஒரு பெரிய சரித்திரத்தையே எழுதி, வக்காலத்து வாங்கியிருக்கிறார் பெருந்தலைவர் காமராசர். ஆகவே ஊழலுக்கு வக்காலத்து வாங்குகிற வேலையை அவர் செய்து கொண்டிருந்தார்.

இன்றைக்கு தி.மு.க. அரசு சொல்கிறது:

'ஊழல் இருந்தால் காட்டுங்கள்; அதைக் களைகிறோம்—நடவடிக்கை எடுக்கிறோம்' என்று. வக்காலத்து வாங்கவில்லை. இதையாவது புரிந்து கொண்டு இருந்தால் சொல்லுங்கள்.

நேரடியாகச் சொல்ல முடியாவிட்டால் எனக்கு எழுதுங்கள்.

எனக்கு எழுதுவது உங்களுக்குக் கேவலமாக—மரியாதைக் குறைவாகத் தோன்றுமானால் தொலைபேசியிலே கூப்பிடுங்கள். மற்றவர்களிடத்திலே சொல்லி அனுப்புங்கள். நான் கூலிகிறேன்.

நாட்டு முன்னேற்றத்திலே, நாட்டு வளத்திலே, நாட்டின் நாணயத்திலே, நேர்மையிலே அனைவருக்கும் பங்கு இருக்கிறது என்கிற எண்ணத்தோடு காமராசர் ஆனாலும், மற்றவர்கள் யாராலுலும் சொல்லுகின்ற அந்தக் கருத்துக்களைக் கேட்டு நடக்க இந்த அரசு சித்தமாக இருக்கிறது.

வீணாக மக்களிடத்திலே ஊழல், ஊழல் என்று பீதிகளைக் கிளப்புவது நல்லதல்லஎன்று கூறி நிதிநிலை அறிக்கையை . . .

திரு. கே. ராசாராம்: தலைவரவர்களே! லஞ்சம்,ஊழல் என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் பேசிய கருத்தை நான் விளக்கிட விரும்புகிறேன், ஊழல், லஞ்சம் என்ற வார்த்தைகள் தமிழில் புதியவை அல்ல. எத்தனையோ ஆண்டுக் காலத்துக்கு முந்தியே சேர்ந்திருக்கிறது. ஊழல் என்பது புதிய விஷயமல்ல. தலைவர் காமராசர் கூறுவதெல்லாம் ஊழல், லஞ்சம் ஆகியவற்றை எல்லாம் நாம் கண்டித்து வந்தோம். அமைச்சர்களில் லஞ்சம் புரிந்தவர்கள் என்று தெரிந்தால் கண்டிப்போம். நடவடிக்கை எடுப்போம், கட்சிக்காரர்கள் இன்னார் இன்ன லஞ்சம் பெற்றார்—ஊழல் ஏற்பட்டது என்றால் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்—கண்டிப்போம். ஆனால் இன்று தி. மு. கழகத் தலைமை அதைச் செய்யவில்லை. ஊழல் ஏற்பட்டது என்று தெரிந்திருந்தும்கூட அவர்களைக் கண்டிப்பதில்லை. குற்றம் செய்தவர்களைக் கண்டிப்பதில்லை என்று சொல்லிவருகிறார்.

ஊழல், லஞ்சம் என்று சொல்லி அதற்காக வேண்டி பொதுவாகச் சொல்லி எதிர்க்கிறார் என்று சொல்லவில்லை; இன்னின்ன குற்றம் புரிந்திருக்கிறார்கள்—கண்டிக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்.

முதல்வர் : பூண்டி வாண்டையாரும், உக்கடைத் தேவரும், வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியாரும் அப்பாவுத் தேவரும்—இவர்களெல்லாம் சேர்ந்து சுமார் இருபது ஆயிரம் ஏக்கர்களை உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்கின்ற அளவுக்கு 1959-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்கு முன்னால், எழுதி வைத்தார்களே, அது பெரிய ஊழல் அல்லவா ?அது காமராசரால் கண்டிக்கப்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. ராசாராம் : சட்ட விரோதமாக யார் நடந்திருந்தாலும் கண்டிப்பார்கள். சட்டத்துக்கு விரோதமாக நடப்பவர்களைக் கண்டிக்கவில்லை என்பதுதான் காமராசருடைய குற்றச்சாட்டு.

முதல்வர் : 6—4—60-ல் உச்சவரம்புச் சட்டம் வருகிறது. 1959-ஆம் ஆண்டு இத்தனை ஸ்டாண்டர்டு ஏக்கருக்குத்தான் உச்சவரம்பு வருகிறது என்று தெரிந்துகொண்டு எப்படிப் பிரித்துஎழுதி வைத்தார்கள்? அவர்களுக்கு யார் சொன்னது? இன்னின்ன அறக் கட்டளைகளுக்கு விதிவிலக்கு வருமென்று அவர்களுக்கு எப்படித் தெரிந்தது? எப்படி அந்த அறக் கட்டளைகளுக்கெல்லாம் எழுதி வைத்தார்கள்? இவைகளிலே தான் பெரிய ஊழல் புதைந்து கிடக்கிறது.

பூண்டி வாண்டையார் தஞ்சை மாவட்டத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய வைரத்தூண். கபிஸ்தலம் மூப்பனார் காங்கிரஸ் கட்சியைத் தாங்கிப் பிடிக்கிற பெரிய மலைப் பாறைத் தூண். அப்படிப்பட்ட காங்கிரஸ்-வலிவலம் தேசிகர் உள்ள காங்கிரஸ். காங்கிரஸ்காரரான வடபாதி மங்கலம் தியாகராச முதலியார்—கரும்புத் தோட்டத்துக்கு ஏன் 7,000 ஏக்கர் எழுதி வைக்கிறார்?


கடைந்தெடுத்த ஊழல்

கரும்புத் தோட்டத்துக்கு விதிவிலக்கு அளிக்கப் போகிறார்கள் என்று யார் ரகசியமாகத் தியாகராச முதலியார் காதில் சொன்னது? அவர் காங்கிரஸ்காரர் அல்லவா அப்போது?

ஆவடி காங்கிரஸ் மாநாட்டை நடத்தியவர் அல்லவா?

அப்படிப்பட்ட தியாகராச முதலியாரிடத்தில் 'நீ கரும்புத் தோட்டத்துக்கு எழுதி வைத்துவிடு; நான் விதிவிலக்கு அளிக்கப் போகிறேன்' என்று சொன்னது கடைந்தெடுத்த ஊழல் என்று நான் குற்றம் சாட்டுகின்றேன்.

திரு. கே. ராசாராம் : சட்ட விரோதமாக ஏதேனும் நடந்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்போம் என்றுதான் கூறினேன். இந்தமாதிரி ஊழல் 71-லும் நடந்திருக்கிறது. 71-ல் 30 ஏக்கராவை 15 ஏக்கராவாகக் கொண்டு வருவதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, அப்போது உதவித் தலைவராக இப்போதுள்ள முதலமைச்சர் இருந்தபோது நில உச்சவரம்பு 30 ஏக்கர் என்று பேரவையில் சட்டம், கொண்டுவந்து—



மசோதா கொண்டுவந்து விவாதித்தபோது, 15 ஏக்கரா வாகத் திருத்த வேண்டும் 30 ஏக்கரா கூடாது என்று திருத்தம் கொண்டுவந்தார்கள். அப்போதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை 15 ஏக்கருக்குமேல் இருக்கக்கூடாது என்று ஆயிற்று. அதோடு அவர்கள் 67 தேர்தல் அறிக்கையில் கூட 15 ஏக்கரா கொண்டுவருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள் அப்போதிருந்து 71-ஆம் வருஷத்துக்குள் கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டைப் பகுதியில் தி.மு.க.வைச் சேர்ந்த பலர் நிலத்தை மாற்றி எழுதி வைத்திருக்கிறார்கள்.

முதல்வர் : உண்மைக்கு மாறுகத் தங்களைப் போன்ற பொறுப்பானவர்கள் பேசக்கூடாது. எந்தத் தி.மு.க.வினர் என்று சொல்லுங்கள். நான் குறிப்பிட்ட ஊழல் பற்றிப் பெயர் வாசிக்கிறேன். அந்தப் பெயர் அடங்கிய புத்தகமே என் கையில் இருக்கிறது. அதில் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். தி. மு. கழகத்தினர் பெயர்களில் ஒன்றைச் சொல்லுங்கள்.

திரு கே. ராசாராம் : பயம் கொடுத்தால் பெயர்களைச் சொல்கிறோம். யார் எவர் என்று திடீரென்று கேட்டால் என் கையில் ரெக்கார்டு கிடையாது.

முதல்வர் : அந்தத் தி.மு.க.வினர் யார் என்று சொல்ல வேண்டும் ; இல்லையென்றால் ஆதாரம் இல்லையென்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

திரு கே. ராசாராம் : அதை உடனடியாக இப்போதே கொடுக்க முடியாது. கூடிய சீக்கிரம் கொடுக்கிறேன்.

திரு எஸ். முத்துச்சாமி : தலைவர் அவர்களே! இவ்வளவு பயங்கரமான ஊழல்கள் நடந்ததாக முதல்வர் கூறுகிறார். ஊழல் செய்தவர்கள்மீது விரைவாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

முதல்வர் : அதற்காக நான் எடுத்திருக்கிற நடவடிக்கை தான் அந்த விதிவிலக்குகளை ரத்துச் செய்தது.

தியாகராச முதலியாரிடமிருந்து 7,000 ஏக்கராவையும், அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது இப்போது. அதைப் போலவே மேய்ச்சல் காடுகளுக்குப் போடப்பட்ட விதி விலக்கும் எடுக்கப்பட்டு விட்டது.

ஆகவே அந்த நடவடிக்கைகளில்தான் இறங்கி இருக் கின்றோம். பெரியவர்கள் ..... அதற்குமேல் போகக் கூடாது. (சிரிப்பு).

'' லஞ்சம் லஞ்சம் என்கிறார்களே, மாமன் கொடுக்கிறான்; மச்சான் வாங்கிக் கொள்கிறான். கொடுப்பதும் வாங்குவதும் அவர்கள். இடையில் ஏழை மக்களை ஏமாற்ற இவர்கள் ஏன் கூச்சல் போடுகிறார்கள் ? ''

—இப்படிப் பேசியவர் காமராசர். ' சமவாழ்வு ' என் கிற புத்தகத்திலேயே இது வந்திருக்கிறது.

திரு கிருஷ்ணாசாமி : தலைவர் அவர்களே ! இதை வெளியே பொதுக் கூட்டத்தில் சொல்லலாமே !

முதல்வர் : ஏன் ? கேட்பதற்குக் கர்ணை கடூரமாக இருக் கிறதா ?

திரு டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே! யார் பேசினார்களோ அவர் இங்கு இல்லை. அவருக்குப் பதில் சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆகவே இந்தச் சபையில் இதைப் பற்றிப் பேசுவது கூடாது.

முதல்வர் : தலைவரவர்களே, பேசியவர் இங்கே இல்லாத போது பேசக்கூடாது என்கிறார்கள். மாயவரம் கூட்டத்தில் பேசினார் என்று அவர் இல்லாதபோது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள்.

திரு கே. ராசாராம் : தலைவரவர்களே, காமராசர்'' நீங்கள் இதைச் செய்தீர்கள், பாராட்டுகிறேன்'' என்று சொன் னார்கள். அதைத் தான் நான் சொன்னேன். இதற்குக்கூடப் பெயரை உபயோகிக்கக் கூடாதா? ஆனால் குறை சொல்லிப் பேசுவதற்கு, இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசுவது கூடாதென்று எங்கள் கட்சிக் கொறடா சொல்கிறார்கள்.

திரு டி.கே. சுப்பையா: எந்த நோக்கத்தோடு எந்தக் கூட்டத்தில் காமராசர் இப்படிப் பேசினாரோ, தெரியாது. காமராசர் அவர்கள் உரை நடைப் புத்தகம் எழுதவில்லை. பல இடங்களில் பேசினார். அதைப் புத்தகமாக எழுதியிருக்கிறார்கள். ஆகவே எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு பேசப்பட்டது என்பதை அவர் தான் விளக்க முடியும் என்பதாலும், இதை ஒரு கருவியாகக் கொண்டு இதையெல்லாம் தங்கள் ஊழல்களை மறைப்பதற்கு எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகம் கையிலே....!

முதல்வர்: ஊழல்களை நாங்கள் மறைக்கத் தேவையில்லை. உறுப்பினரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். எல்லோருக்கும் தெரியும். ஊழல்களை மறைக்கவேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. பேசும்போது பொறுப்போடு பேச வேண்டும். நாங்கள் ஊழல்களை மறைக்கத் தயாராக இல்லை. நீங்கள் மறைத்த ஊழலைத்தான் இதுவரை நான் எடுத்துச் சொன்னேன். நீங்கள் மறைத்த ஊழல் இந்தப் புத்தகத்தில் இருக்கிறது. இந்தப் புத்தகம் முழுவதும் இருக்கிறது. இவ்வளவு பெரிய நோட்டுப் புத்தகம் இருக்கிறது. இன்னும் சொல்கிறேன். சட்டப்படி நடந்த ஊழல் என்று. ஆகவே இவ்வளவு ஊழல்களை வைத்துக்கொண்டு மற்றவர்களைப் பார்த்து இப்படிப்பட்ட பெரும் தலைவர் இதுபோன்ற தவறான கருத்துக்களைப் பேசுவது சரியல்ல என்பதை எடுத்துக்கூறி, இந்த நிதி நிலை அறிக்கையில் பேசிய பல்வேறு உறுப்பினர்களுக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய குன்றக்குடி அடிகளார் அவர்கள் கோயில்களுக்கு இந்த உச்சவரம்பால் ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதேபோல ஆண்டவனும் மக்களைப் பாதுகாக்கின்ற அளவிற்கு அவரும் நிச்சயம் உதவி செய்வார்கள். அவர் இன்றைக்கு மடாதிபதியாக இருந்தாலும் நல்ல முற்போக்கு எண்ணம்கொண்டவர் என்ற முறையில் உச்சவரம்பு போன்ற சட்டங்களுக்கு, நிலச் சீர்திருத்தம் போன்ற சட்டங்களுக்கு நல்ல ஆதரவு தருகின்ற அவர்கள் கூட, எந்த விதமான ஆபத்தும் கோயில்களுக்கு இந்தச் சட்டத்தால் வரக்கூடாதென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் கோயில்கள் மக்களுக்குப் பயன்படக் கூடிய அளவிற்கு இருந்திடவேண்டுமென்ற எண்ணம் நம் அடிகளாருக்கு இருந்திடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அறிக்கையிலே நல்ல கருத்துக்களைச் சொன்ன அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

தமிழ் நாடு அரசினர் அச்சகம், சென்னை.

9 - APR 1972